# மாண் மலர்

அருட் சகோ. யோலன்ட் மத்தாயஸின் சேவைச் சிறப்பு மலர்



## HOLY FAMILY CONVENT
### JAFFNA

நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டும் உலகு

LIBRARY
NATIONAL

# மாண்மலர்

அகவை அறுபதின் நிறைவில், ஓய்வுபெறும்
அருட்சகோதரி யோலன்ட் மத்தாயஸ் அவர்களின்
கல்விச் சேவைச் சிறப்பு மலர்

வெளியீடு

**யாழ் திருக்குடும்ப கன்னியர் மட சமூகம்**
(அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள்,
பழைய மாணவர்கள், பாடசாலை
அபிவிருத்திசங்கத்தினர். அபிமானிகள்)

மாண் மலர் : அருட்சகோதரி யோலண்ட் மத்தாயஸ் அவர்களின்
கல்விச் சேவைச் சிறப்புமலர்

காலம் : 04. 09. 2004

வெளியீடு : யாழ்/திருக்குடும்ப கன்னியர் மட பாடசாலைச் சமூகம்

நூலாக்கக்குழு : திருமதி. சித்திரா இராஜரட்ணம்,
அருட்சகோதரி ஆ. டன்ஸ்ரன்
திருமதி. ர. அச்சுதம்பிள்ளை
திருமதி. ஜே. சிறீஸ்கந்தராஜா
திரு. ஆர். திலகரட்ணம்
செல்வி. மே. பூ. பெனடிக்ட்
செல்வி. சி. மாலினி
திருமதி. ம. நி. தெய்வேந்திரா
திரு. யோ. யோன்சன் ராஜ்குமார்

அச்சுப்பதிப்பு : "லங்கா பப்ளிசிங் ஹவுஸ்"
இல. 1-6, 340, டிரஸ்ட் கொம்பிலக்ஸ்,
செட்டியார் தெரு, கொழும்பு-13.
தொலைபேசி : 071-4880839

# உள்ளே.....

விடயம் | பக்கம்

## ❋ ஆசிச்செய்திகள்


1. யாழ் ஆயரின் ஆசிச்செய்தி 01
2. கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி 02
3. மாகாணத் தலைவியின் ஆசிச்செய்தி 03
4. Massage from the Rector of St.Patrick's College 05
5. பேராயரின் ஆசிச்செய்தி 06
6. கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் வாழ்த்துச் செய்தி 07
7. Massage from the Director of centre for Performing arts. 08
8. அரசாங்க அதிபரின் ஆசிச்செய்தி 09
9. முன்னாள் துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி 10
10. கல்வியியல் பேராசிரியரின் ஆசிச்செய்தி 11
11. மத்திய கல்லூரி அதிபரின் வாழ்த்துச் செய்தி 12
12. Massage from the Principal of St.John's College 13
13. Massage from the Principal of Chundikuli Girls' College 14
14. சமூகத்தால் மறக்கப்பட முடியாதவர் - வேம்படி மகளிர் கல்லூரி 15
15. நெஞ்சத்தில் நிறைந்திடும் அதிபர் - புனித பொஸ்கோ வித்தியாலயம் 16
16. அதிபர் சங்கத் தலைவரின் ஆசிச்செய்தி 17
17. யாழ் பேராலய பங்குத்தந்தையின் ஆசிச்செய்தி 18
18. Massage from the Principal 19


## ❋ ஆக்கங்கள்


19. பெருவிருட்சமொன்றின் நிழல் - *திருமதி ஜெயப்பிரகாசம்* 20
20. திருக்குடும்ப கல்விக் கட்டமைப்பின் முகாமையாளர் - *திருமதி இராஜரட்ணம்* 21
21. கண்ணியர் மடத்தை கட்டியாண்ட அதிபர் - *திருமதி லெ. பரராஜசிங்கம்* 24

22. காத்திருப்பு தொடர்கிறது - *செல்வி. சி. மாலினி* 27
23. A Multi - faceted Personality - Violet Emmanual 28
24. ஆளுமைமிக்க அதிபர் - *ஏ.எம்.கே. நூபசிங்கம்* 30
25. நிறைவில் சிலிர்த்தமலர் - *அருட்சகோதரி. ஆ. டன்ஸ்ரன்* 32
26. காலப்பதிவுகளில் கரைந்து நிற்கும் நினைவலைகள்
- *திருமதி அச்சுதம்பிள்ளை* 34
27. வாழ்வனுபவங்களுக்கான வழிகாட்டி - *சிந்துஜா திலகரெட்ணம்* 36
28. ஒரு பள்ளிப்புறாவின் பாசகீதம் - *அ. கார்த்திகா* 38
29. சமூகத்தொடர்பை ஆழமாக ஏற்படுத்திய அதிபர்
- *திரு. என். சகாயநாதன்* 40
30. நீங்காத நினைவுகளில் அருட்சகோதரி யோலண்ட்
- *திருமதி P.F சின்னத்துரை* 42
31. தலைமைத்துவத்தின் தலைமகள் - *ஜீன்மேரி ஜெயவீரன்* 44
32. எமது ஆசான் - *திருமதி ஸ்ரீஸ்கந்தராஜா* 45
33. அன்புள்ளங்கொண்ட அதிபர் - *கல்விசாரா ஊழியர்கள்.* 47
34. கண்ணியம்மிக்க அதிபர் - *திருமதி யோகானந்தம்* 48
35. அன்னை நடந்த பாதையின் சுவடுகள் - *திருமதி தெய்வேந்திரம்* 50
36. நேர்காணல் - *யோ.யோ. ராஜ்குமார்* 53
37. உங்களைப்பற்றிய உன்னதங்களைச் சொல்ல
- *சுஜனுதா இராஜரட்ணம்* 61
38. சாதனை நோக்கிய பயணம் - *செல்வி பெனடிற்* 63
39. அடைக்கலம் தந்த அன்னை - *செல்வி பூமாதேவி* 71
40. இதயவீணையில் மௌன இராகங்கள் - *அ. லூமண்டா* 72
41. கவிதை மாலைகள் 74

இது நன்றியின் மலர், நீண்டகாலமாய் நிமிர்ந்து நின்று எம் கல்வி புலத்திலே தன்னை கரைத்துக் கொண்டு கல்வி பயிர் வளர்த்த எம் அன்புக்குரிய தலைவியாம் அருட்சகோதரி யோலன்ட் மத்தாயஸ் அவர்களின் பணியின் சிறப்பையும், மாண்பையும் நன்றியுடன் விதந்துரைக்கும் மலர்

-மலர்குழு



அன்பொழுக
அதிபராய்
ஆசனமமர்ந்து
ஆளுகை புரிகையில் ...

# யாழ் ஆயரின் ஆசிச்செய்தி

யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர்மட அதிபர் பணியில் இருந்து ஓய்வு பெறும் அருள் சகோதரி மத்தாயஸ் யோலண்ட் அவர்களை பாராட்டி வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகிறோம். யாழ்ப்பாணத்தில் பெண்களின் கல்வி வளர்ச்சிக்குப் பெரும் துணையாக இருக்கும், யாழ் திருக்குடும்ப கன்னியர் மடத்தில் இவர் ஆற்றிய பணிகள் மகத்தானவை; பாராட்டப்பட வேண்டியவை. சரித்திர ஏடுகளில் பதிவு செய்யப்பட வேண்டியவை.

1970ஆம் ஆண்டு முதல் ஆசிரியப் பணிக்கு தன்னை அர்ப்பணித்த இவர் தனது கல்விப் பணியின் நீண்ட காலத்தை யாழ் திருக்குடும்பக் கன்னியர் மடத்திலேயே பணியாற்றியுள்ளார். குறிப்பாக இப்பாடசாலையில் 1984ஆம் ஆண்டு முதல் 1988 ஆம் ஆண்டு வரை உப அதிபராகவும் 1988ஆம் ஆண்டு முதல் 2004ஆம் ஆண்டுவரை அதிபராகவும் அளப்பரிய பணியாற்றி பங்களிப்பு செய்துள்ளார்.

இவருடைய காலத்தில் இப்பாடசாலை பாரிய வளர்ச்சி கண்டுள்ளது. குறிப்பான விதமாக பல சவால்கள் மத்தியில் திருக்குடும்ப கன்னியர் மட தமிழ் பாடசாலையையும் ஆங்கிலப் பாடசாலையையும் இணைத்து தரமுயர்த்தி, அதைச் சிறப்பான விதமாக நடத்தி வந்துள்ளார். யாழ்ப்பாண கத்தோலிக்கர் மத்தியில் மகளிருக்கு முதன்மையான பாடசாலையாக இது விளங்கியமையால் இதை தேசிய பாடசாலையாக தரமுயர்த்த இவர் எடுத்த பிரயாசைகளை நாம் நன்கு அறிவோம். இம் முயற்சிகள் இப்போ கைகூடாது போனாலும் இவரின் கனவுகள் நனவாகும் என நம்புகிறோம்.

மலர்ந்த முகமும் புன்சிரிப்பும் கொண்ட இவர் தனது கணீர் என்ற குரலாலும் ஆளுமை மிக்க செயற்பாடுகளாலும் அனைவரையும் உரிய விதமாகக் கவர்ந்து ஆற்ற வேண்டிய அனைத்துப் பணிகளையும் சிறப்பான விதமாக ஆற்றியுள்ளார். இவரின் காலத்தில் இப்பாடசாலை பல துறைகளிலும் வளர்ச்சி கண்டு ஓர் உயர்நிலையை அடைந்துள்ளமையைக் காணக்கூடியதாக உள்ளது. இவர் தனது பணியில் இருந்து நிறைவு பெற்றாலும் தன்னுடைய அறிவையும் அனுபவத்தையும் தொடர்ந்தும் தமிழ்ப் பெண்களின் தொடர் உருவாக்கத்திற்கு அர்ப்பணிக்க வேண்டும் என வாழ்த்தி இறையாசி வேண்டுகிறோம்.

**அதி. வண தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை**
**யாழ். ஆயர்**

## கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

ஆசிரியர் ஞான விளக்கு என்ற சொற்பதத்திற்கு இலக்கணமாகத் திகழ்பவர் அருட்சகோதரி யோலன்ட் மத்தாயஸ் அவர்கள். கடந்த முப்பத்தைந்து ஆண்டுகள் கல்விப் பணிக்காகவும் கடவுட் பணிக்காகவும் இவர் ஆற்றிய பணி அளப்பரியது.

கடந்த பதினாறு ஆண்டு காலம் திருக்குடும்பக் கன்னியர் மடம் மகா வித்தியாலத்தில் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் இவர் அதிபர் கடமை புரிந்துள்ளார். தனது காலப் பகுதியில் பாடசாலையினைப் பிரபல பாடசாலைத் தரத்தினில் பேணுவதற்காக ஆசிரியர்களை வழிப்படுத்துவதிலும் மாணவிகளை கண்டிப்புடன் கூடிய புத்திமதிகளை வழங்கி நெறிப்படுத்துவதிலும் வெற்றி கண்டுள்ளார்.

மாணவர் அனுமதியில் இங்கு நிலவுகின்ற போட்டி அதிபரின் சிறந்த நிர்வாகத்திற்கு எடுத்துக் காட்டாகும். பாடசாலை விருத்தியில் பெற்றோரின் பங்களிப்பினைப் பெறுவதிலும் மாணவிகளின் சிறந்த தலைமைத்துவப் பண்புகளை வளர்ப்பதிலும் இவர் எடுத்த முயற்சிகள் பாராட்டத் தக்கவை.

அகவை அறுபதில் ஓய்வு பெறும் அருட் சகோதரி இதுவரை கல்விப் புலத்திற்கு ஆற்றிய பணிகளுக்காக நன்றி கூறுவதுடன் ஓய்வு காலத்தில் சிறந்த தேகாராக்கியத்துடன் நீண்ட காலம் இறைபணி புரிய வாழ்த்துகிறேன்.

**ப. விக்னேஸ்வரன்**
*வலயக்கல்விப் பணிப்பாளர்,*
*வலயக்கல்வி அலுவலகம்*
*யாழ்ப்பாணம்.*

# மாகாணத் தலைவியின் ஆசிச்செய்தி

யாழ் திருக்குடும்ப கன்னியர் ஆங்கிலப் பாடசாலையின் அதிபர் அருட்சகோதரி யோலண்ட் மத்தியாஸ் அவர்களின் சேவை நலன் பாராட்டு விழாவன்று வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

யாழ் மாவட்டத்தில் கத்தோலிக்கப் பெண்களின் கல்வி வளர்ச்சிக்காகத் திருக்குடும்ப சபையினால் 1962ல் அடியிடப்பட்ட முதற் பாடசாலையின் நோக்கையும், தனித்துவமான இலட்சணங்களையும், கலாசார மரபுகளையும், பாரம்பரியங்களையும் நுணுக்கமாகப் பிரமாணிக்கத்துடன் பின்பற்றி ஆன்மீகம், ஒழுக்கம், ஆளுமை என்பவற்றில் கவனம் செலுத்தி திருச்சபைக்கும் சமூகத்திற்கும் உரிய நற்பிரஜைகளை உருவாக்குவதில் முன்னின்று செயற்பட்ட இச்சகோதரி மிகுந்த இறை விசுவாசம், சபைப்பற்று, தன்னம்பிக்கை, மனஉறுதி ஆகிய விழுமியங்களுடன் ஒரு மதிப்புமிக்க அதிபராக இன்று வரை பணிபுரிந்தார்.

பேராதனைப் பல்கலைக்கழக கலைப்பட்டதாரியான இவர் 1970ம் ஆண்டு யாழ் திருக்குடும்ப கன்னியர் ஆங்கில பாடசாலையில் உதவி ஆசிரியராகச் சேர்ந்தார். இயற்கையிலே அமைதியான போக்கும் இனிய சுபாவமும் கொண்ட இவர் அக்காலத்திலே இளமைத் துடிப்பும், அர்ப்பணிப்பும், கடின உழைப்பும் கொண்டவராக மாணவர்களை நெறிப்படுத்தி வந்தார்.

1976 ஆவணி 1977 வைகாசி வரை பட்டப்பின் டிப்ளோமா கற்கை நெறியை கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கற்றுத் தேறிய பின்னர் பண்டிவிரிச்சான், மன்னார் ஆகிய இடங்களில் ஆசிரியப் பணியைத் தொடர்ந்தார். 1982 வைகாசியில் மீண்டும் இப்பாடசாலையில் பணியைத் தொடங்கி 1988ம் ஆண்டில் இப் பாடசாலையின் அதிபராகக் கடமையேற்றார். 1990ல் தேசிய கல்விச் சபையின் முகாமைத்துவம், நிர்வாகம் என்பவற்றில் டிப்ளோமா பட்டத்தையும் 1992ல் யாழ் பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றார்.

1988ல் பாடசாலையின் தலைமைத்துவப் பொறுப்பை ஏற்ற காலம் முதல் பல சவால்களை இவர் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. புதிய கல்விக் கொள்கைகள், கல்விச் சீர்திருத்த மாற்றங்கள், ஆசிரியர் இடமாற்றங்கள், ஆசிரியர் பற்றாக்குறை, மாணவர் எண்ணிக்கை அதிகரிப்பு, இடப் பற்றாக்குறை என்பவற்றிற்கு முகம்கொடுத்தும் இன்னும் போர், அதன்

ஆபத்து, அழிவு, இடப்பெயர்வு என்பவற்றின் மத்தியில் உறுதியுடனும், மனத்துணிவுடனும், இறை பராமரிப்பில் நம்பிக்கை வைத்து முன்னோக்கிச் சென்றதுடன் இன்று வரை பாடசாலையின் வளர்ச்சிக்காகவே தன் திறமைகள், ஆற்றல்கள், நேரம், சக்தி என்பவற்றைப் பயன்படுத்தினார்.

கற்பித்தலையும், நிர்வாகத்தையும் முதன்மையாகக் கொண்டு பணியாற்றிய காலத்தில் ஆங்கிலம் கற்பிப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. கேட்போர்கூடம் அமைக்கப்பட்டதுடன் பாடசாலை நூலகம் புதுப்பிக்கப்பட்டு பல புதிய வெளியீடுகளும் சேர்க்கப்பட்டன. வெளிநாடுகளில் உள்ள பழைய மாணவர் சங்கங்களுக்கு ஊக்குவிப்புக் கொடுத்ததுடன் அவர்களின் நிதி உதவியுடன் பாடசாலைத்திருத்தங்கள், வறிய மாணவர் உதவித்திட்டம், பின்தங்கிய மாணவர்களுக்கான கல்வித்திட்டங்கள் என்பவற்றைச் செய்து மாணவர்களைப் பல வழிகளிலும் முன்னேற்ற அரும்பாடுபட்டுழைத்தார்.

தூர நோக்குச் சிந்தனையுடன் பலரின் வேண்டுகோளுக்கிணங்க அருகே தனித்தியங்கிய மற்றைய பெண்கள் பாடசாலையாகிய கன்னியர் மடப்பாடசாலை 2002 இல் யாழ் திருக்குடும்ப கன்னியர் மட ஆங்கில பாடசாலையால் உள்வாங்கப்பட்டு இரு பாடசாலைகளும் ஒன்றிணைக்கப்பட்டு சகோதரி யோலண்டின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது இதனால் தோன்றியுள்ள தேவைகள், அதிகரித்த ஆசிரிய மாணவர் தொகை, வளங்கள் இருபாடசாலை ஆசிரியர் மாணவர்களிடையே உள்ள முரண்பாடுகள், உளத்தாக்கங்கள் என்பவற்றை சுமுகமாக நிவர்த்தி செய்ய வேண்டிய பொறுப்பையும் இவர் ஏற்றுக்கொண்டார். இன்று ஒழுக்கத்திலும், பரீட்சைப் பெறுபேறுகளிலும், விளையாட்டுத்துறையிலும் கலை கலாச்சார நிகழ்வுகள், வெளிக்கள முயற்சிகளிலும் இப்பாடசாலைக்குக் கிடைத்துள்ள வளர்ச்சிகள் அனைத்தும் அவவையே சாரும். பல துறைகளில் மாணவரை உட்படுத்தி இப்பாடசாலைக்கு யாழ் குடாநாட்டில் நற்பெயர் எடுத்துக் கொடுத்ததுடன் எமது சமுதாயத்திற்கும் வெளிநாடுகளுக்கும் நல்ல பிரஜைகளை உருவாக்கியுள்ளார்.

அனைத்திற்கும் மேலாக இறைவனுக்குக் கொடுத்த 'ஆம்' என்ற வாக்குறுதிக்கு எப்பொழுதும் பிரமாணிக்கமாக இருந்து எமது சபையினால் மாகாணத்தினால் கேட்கப்படும் எதற்கும் எப்பொழுதும் தயார் நிலையில் இருந்ததுடன் 6 வருடங்களுக்கு திருக்குடும்ப மாகாண ஆலோசகராக பணியாற்றினார். பாடசாலைத் தலைமைத்துவப் பொறுப்பின் மத்தியிலும் தம்மால் இயன்றவரை சகோதரிகளின் சபையின் வாழ்வை முன்னேற்றுவதற்கு ஆலோசனையும், ஆக்கமும், ஊக்கமும் அளித்து வருவது மெச்சத்தக்கது.

இன்று வரை அயராது உழைத்து தனது 60வது அகவையில் தடம் பதிக்கும் எம் சகோதரி யோலண்ட் மத்தியாஸ் அவர்களின் சேவையைப் பாராட்டுவதோடு அவின் வாழ்வும், பணியும் தொடர்ந்து சிறக்க இறையாசீர் வேண்டி நிற்கின்றேன்.

**அருட்சகோதரி அன்சில்லா ஜேம்ஸ்**<br>
*மாகாணத் தலைவி*<br>
திருக்குடும்ப கன்னியர் சபை

# Message from the Rector of St. Patrick's College

I understand that Rev.Sr.yolande is to relinquish her principal post of Holy Family Convent ,Jaffna, very shortly. The school will certainly miss her dedicated service. I hasten to send my best wishes for happy and contended service elsewhere in the Lord's Vineyard.

I remember very well my first meeting with Sr.Yolande at Peradeniya University Campus in 1968. I found her to be a pleasant and affable person with a noble heart to help others always. My two younger sisters had the privilege of studying under her and still value her guidance and friendship they received from her at HFC when Sr.Yolande was on the tutorial staff in the early seventies. She took over the principal post in 1988 when the school had become a government school and thus, had to adjust to the new set up and keep the old girls associations alive as well. Furthermore, she had to guide the destiny of the school at the most turbulent times in the history of the institution. Well she had the faith and dedication to steer through all those difficult days and keep up the Familian spirit alive. She rallied round the old girl's associations abroad and found their assistance to put back the school on track. The past pupils associations all over the world remembers her dedicated service to the school with grateful heart.

Sr.Yolande had to weather impossible problems including a full blown war and two displacements and she emerged unscathed to gather fresh laurels; all due to her dynamic faith and practical wisdom. Recently she steered through the amalgamated school, updating it according to the demands of modern education.

We thank God for the 34 years of dedicated service of Sr.Yolande to the Holy Family Convent. We wish that God Almighty will continue to bless her endeavors in the future as well.

Well done Sr.Yolande! May God go with you.

**REVD.DR.JUSTIN B.GNANAPRAGASAM**
*Rector*
*St.Patrick's College, Jaffna.*

# பேராயரின் ஆசிச் செய்தி

திருக்குடும்ப கன்னியர் மடம் நம் நாட்டுப் பெண்களின் அறிவு வளர்ச்சியிலும், ஆன்மீக வளர்ச்சியிலும், கலாசார வளர்ச்சியிலும் பெரும்பங்காற்றியுள்ளது. 1960ம் ஆண்டு பாடசாலைகளை அரசினர் சுவீகரிக்கும் சட்டம் வரும் வரை தென்னிலங்கையிலிருந்து பெருந்தொகையான மாணவிகள் இதில் கல்வி கற்க வந்தனர். யாழ்மெயில் புகையிரதத்தில் ஒரு பயணிகள் பெட்டி திருக்குடும்ப கன்னியர் மட மாணவிகள் கொழும்பு செல்வதற்கு ஒதுக்கப்பட்டிருந்தது.

இக்கலைக் கோவிலை வளர்த்த பெருந்தலைவிகள், தியாகிகள் வரிசையில் அருட்சகோதரி யோலன்ட் அவர்களுக்கு ஒரு முக்கியமான இடமுண்டு. முப்பத்தினான்கு வருட சேவை அதில் நான்கு வருடங்கள் உப அதிபர் பதினாறு வருடங்கள் அதிபர். அருட்சகோதரியின் பக்தியும், ஆளுமையும், முகப்பொலிவும், கடமை உணர்வும் என்னைப் பிரமிக்க வைத்தன. இயேசுவின் அன்பையும் கன்னிமரியன்னையின் கனிவையும், உலகுக்கு அருட்சகோதரி யோலன்ட் ஞாபகமூட்டிக் கொண்டிருந்தார். அவருடைய தியாகத்திற்கும், உழைப்பிற்கும் தமிழ்ப் பெண்கள் என்றுமே கடமைப்பட்டவர்களாகவிருப்பர்.

இறைவனுடைய சேவைக்கும் மக்கள் பணிக்கும் தன் வாழ்வை அர்ப்பணித்த அருட்சகோதரி யோலன்ட் மத்தாயஸ் இன்னும் பல வருடங்கள் எங்கிருந்தாலும் இப்படியே வாழவேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

**அதி. வண. எஸ். ஜெபநேசன்**
*பேராயர்,*
*தென்னிந்திய திருச்சபை.*

அன்னை சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி
தங்கம்மா அப்பாக்குட்டி, J.P.
அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

புகழ்பூத்த யாழ் திருக்குடும்பக் கன்னியர் மடம் மகளிர் கல்லூரியின் அதிபர் அருட்சகோதரி யோலன்ட் மத்தியாஸ் அவர்களின் சேவை நலன் பாராட்டு விழாவுக்கு பாராட்டுச் செய்தி வழங்குவதில் அகமகிழ்கிறேன். கடவுள் பணியாகக் கல்விப் பணியை நேசித்த சகோதரி அவர்களின் தூய வாழ்க்கையை பாராட்ட வேண்டியது எமது கடமையாகும். 1970 முதல் 2004 வரை நீண்ட கல்விப் பணியாற்றிய அம்மையாரின் ஆளுமைத் திறன் பற்றி பலரும் புகழ்ந்துரைக்கக் கேள்விப்பட்டுள்ளேன். கல்வியோடு கூடிய ஒழுக்கத்தையும், கடவுள் வழிபாட்டையும் மாணவர்களுக்கு நெறிப்படுத்துவதில் முதன்மையானவராகக் கருதப்படும் அம்மையார் தனது ஓய்வுக் காலத்திலும் நிறை பணி தொடரப் பிரார்த்திப்பதோடு அவர் சீரிய ஆரோக்கியத்துடன் திகழ இறைவனை இறைஞ்சி வாழ்த்தி அமைகிறேன்.

**கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, J.P.**
**தலைவர்**
**ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பளை**

# Message from the Director of CENTRE FOR PERFORMING ARTS

**Her price is far above rubies**
(Proverbs, ch.31,v.10)

She was a leader, an organizer and an innovator. As a woman, she stood tall among men: a woman of reflection, of vision, of conviction and of action. Our nature consists in motion, stated Blaise Pascal. Her actions, which bore seeds of greatness, sprang from a readiness for responsibility. Hence, even those who might not have agreed with her, respected her. She was royal in her own fashion and was treated like one.

Thirumarai Kalamanram (CPA) experienced another side of her personality. Though she appeared a tough administrator, she had a soft corner for the arts. She was able to combine administrative correctness and firmness, which certainly contributed to the admirable growth of the Holy Family Convent in many fields, with liberal attitude towards the arts and artistes. She was one of the few who recognized that artistes had to be respected and accepted with their idiosyncrasies. Artistes of Thirumarai Kalamanram approached her for help in season and out of season because they knew that she was a patron of the arts.

She encouraged her pupils to get involved in Fine Arts and motivated them to participate in theatre workshops and performances. In fact, Thirumarai Kalamanram could rely on her, her staff and her pupils for support in times of need. I hope that the fruitful partnership which blossomed between the Holy Family Convent and Thirumarai Kalamanram during her period as the Principal would continue in the future.

The vocation of every man and woman is to serve other people, stated Leo Tolstoy. Rev.Sr.M.Joland has done it wonderfully well and has rightfully earned a place in the history of education in our country.

**REVD.DR.N. M. MARIA XAVIER**
*Director*
*Centre for Performing Arts*

# அரசாங்க அதிபரின்
## ஆசிச் செய்தி

யாழ் திருக்குடும்ப கன்னியர் மட அதிபர் சங்கைக்குரிய சகோதரி ஜோலன்ட் மத்தியாஸ் அவர்கள் தனது ஆற்றல் மிக்க சேவையை 22 வருடங்கள் வழங்கி 31.08.2004 இல் இளைப்பாறுவதை முன்னிட்டு அவரது சேவையை பாராட்டி எனது ஆசிச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

யாழ் நகரில் மிக முன்னணி வகிக்கும் யாழ் திருக்குடும்ப கன்னியர்மட பாடசாலை இவரின் ஆளுமையினாலும் ஆற்றல் மிக்க சேவையினாலும் அதன் தரம் கல்வியிலும் கலை கலாசாரம், விளையாட்டு போன்ற சகல துறைகளிலும் சிறந்து விளங்குகிறது. விசேடமாக பாடசாலை மாணவிகளின் ஒழுக்கத்தைப் பேணி கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றை அணிகலன்களாகக் கொண்டு திகழத்தக்க சிறந்த மாணவிகளை, இக் கல்லூரியில் உருவாக்கிய பெருமை இவரையே சார்ந்தது. கல்லூரி மாணவிகளின் ஆங்கில அறிவை வளர்ப்பதில் அக்கறை கொண்டு சேவையாற்றியவர் என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

இவர் தனது இளைப்பாறிய காலத்தில் தேகாரோக்கியத்துடனும், மகிழ்வுடனும் சமூகத்திற்கு தனது சேவையைத் தொடர்ந்தும் ஆற்ற இறைவனின் ஆசீர்வாதம் கிடைக்க பிரார்த்திக்கிறேன்.

**செ. பத்மநாதன்**
*அரசாங்க அதிபர்*
*யாழ் மாவட்டம்*

# முன்னாள் துணைவேந்தரின்
# வாழ்த்துச்செய்தி

யாழ் திருக்குடும்பக் கன்னியர் மடம் மகாவித்தியாலய அதிபர் அருட்சகோதரி யோலண்ட் மத்தாயஸ் அவர்களின் சேவை நயப்பு சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

1966-ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழகத்தில் அவர் மாணவியாக எனக்கு அறிமுகமாகிய நாள் தொடக்கம் அவரின் கல்வி முன்னேற்றம், பணிகள், சாதனைகள், திறமைகள் குணநலங்கள் முதலியவற்றை நான் நன்கு அறிவேன். பலகோணப் பார்வையில் அருட்சகோதரி அவர்கள் ஒழுக்கத்திலும், கல்வியிலும், சிறந்த மாணவியாகவும் கற்பித்தலில் சிறந்த ஆசிரியராகவும், நிர்வாகத்தில் ஆளுமைமிக்க அதிபராகவும், சமூகப் பணியிலும் இறைபணியிலும் சிறந்த சேவகியாகவும் விளங்கியுள்ளார்.

கடந்த இரு தசாப்த காலமாக யாழ்ப்பாணப் பிள்ளைகளின் கல்வி விடயங்களிலும் சமூக விடயங்களிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டு செயல்பட்டு வந்தார். ஆணித்தரமான கருத்துக்களை சபையில் துணிவாக முன்வைக்கும் அவரின் துணிவும், திறமையும் பலராலும் மதிக்கப்பட்டன. அருட்சகோதரி அவர்கள் தி. கு. க. மடம் மகாவித்தியாலயத்தை தேசிய பாடசாலையாக தரமுயர்த்தி முன்னணிப் பெண்கள் பாடசாலையாக மீண்டும் மிளர வைக்க வேண்டுமென்ற உயர் லட்சியத்துடன் அயராது பாடுபாடுபட்டார். அருட்சகோதரி அவர்களால் இப்பாடசாலை பல துறைகளிலும் முன்னேற்றம் கண்டது. அவரின் இலட்சியம் அவர் காலத்தில் நிறைவேறாது போனாலும் அவரைத் தொடர்ந்து வரும் அதிபர்கள் அவரின் இலட்சியத்தை நிறைவேற்றி வைப்பர் என நம்புகிறோம்.

அருட்சகோதரி அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரி. பின் கொழும்பு பல்கலைக்கழகத்தில் பட்டப் பின்படிப்பு கல்வி டிப்ளோமா பட்டத்தையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுதத்துவமாணிப் பட்டத்தையும் பெற்றார். அவர் கல்விப்பணி, இறைபணி தொடர்பாகப் பல நாடுகளுக்கும் பலமுறை சென்று தன் புலமையையும், ஆற்றலையும் மேம்படுத்தியுள்ளார்.

அருட்சகோதரி அவர்கள் அகவை அறுபதைப் பூர்த்தி செய்து, கல்விப் பணியிலிருந்து ஓய்வு பெற்றாலும், சமய சமூகப்பணிகளில் தொடர்ந்தும் ஊக்கமாகச் செயற்பட்டு பல்வேறு பிரச்சினைகளால் நலிவுற்றிருக்கும் மக்களுக்கு உறுதுணையாக, வழிகாட்டியாக விளங்க வேண்டும் என்பதே யாவரதும் விருப்பம்.

இவருக்கு என் பாராட்டையும், வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை**
*முதுநிலை புவியியல் பேராசிரியர்*
*முன்னாள் துணைவேந்தர்*
*யாழ் பல்கலைக்கழகம்*

# கல்வியற் பேராசிரியரின் ஆசிச் செய்தி

அருட்சகோதரி ஜோலண்ட் மத்தாயஸ் அவர்கள், தொண்டுள்ளம் கொண்ட தவவாழ்க்கையை மேற்கொண்டுவருபவர். எமது பிரதேசத்தின் கல்வியை வளர்ப்பதில் தன்னலங்கருதாது அல்லும் பகலும் உழைத்துவருபவர். ஏழை மாணவியரின் கண்ணீரைத் துடைத்துக் கல்விச் செல்வத்தை அயராது வழங்கிவருபவர். கல்வியியலிலே ஒரு சிறந்த நிர்வாகி என்ற தடத்தைப் பதித்ததுடன் தானும் இடைவிடாது கற்று உயர்ந்த பட்டங்களைப் பெற்று வருபவர். கல்வியியல் முதுமாணி மாணவர்களுக்குக் கல்வி முகாமைத்துவ விரிவுரைகளை மேற்கொண்டு அவர் தம் புலமை மேம்பாட்டுக்கு உன்னத பங்களிப்பை வழங்கியவர். அறிவும், ஆற்றலும், ஒழுக்கமும், இறைசிந்தனையும் கொண்ட ஆயிரக்கணக்கான மாணவர் பரம்பரையை உருவாக்கிய அவர்தம் சேவைகள் என்றும் எங்கள் உள்ளங்களிலே அழியா நினைவுப் பதிவுகளாக இருக்கும்.

**கலாநிதி சபா. ஜெயராசா**
*கல்வியற் பேராசிரியர்*
*யாழ். பல்கலைக்கழகம்.*

# மத்திய கல்லூரி அதிபரின் ஆசிச்செய்தி

அதிபராகக் கடமைபுரிவது வேறு, அதிபராகவே நடந்து கொள்வது வேறு. முதலாவது யாராலும் செய்ய முடிவது. இரண்டாவது சிலரால் தான் மட்டுமே செய்ய முடியும். கல்லூரியை நேசிப்பவர் மாணவரில் பற்றுவைப்பவர், ஆசிரியர்களுக்கு வழிகாட்டுபவர், பெற்றோர்களுக்கு விசுவாசமாக நடப்பவர், திணைக்களம் இட்ட செயல் நெறியை பிறழாது செய்து முடிப்பவர், மொத்தத்தில் தன்னை தனது நிறுவன உயர்ச்சிக்காக அர்ப்பணிக்கத் தயாராக நிற்பவர். அதற்காக தனது வாண்மை விருத்தியை அதிகரிப்பவர். இத்தகைய தன்மை கொண்ட அதிபர். அதை நான் யாழ்ப்பாணத்தில் அருட்சகோதரி யோலண்ட் மத்தியாஸிடம் காண்கிறேன். எனது பார்வையில் நான் அதிபராகக் காண்கின்ற மிகச் சிலரில் அவரும் ஒருவர்.

ஒரு கல்லூரியில் ஆசிரியராக, உப அதிபராக, அதிபராக படிப்படியாக உயர்ந்த அருட்செல்வி யோலண்ட் அவர்கள் கல்லூரியின் முழுப்பார்வையையும் ஆழமாகவும் அகலமாகவும் அறிந்து கொண்டவர். தற்போதைய கல்லூரியின் மாணவர்களில் பலரது பெற்றோர் அவரது மாணவராக இருப்பதே 'பேரப்பிள்ளை' மனநிலையில் அவர் மாணவர்களிடம் அன்பு செலுத்துவற்கான முக்கிய காரணங்களில் ஒன்று.

மாணவர்களது கல்வி விருத்தியில் தொகை விருத்தியைக் கவனத்தில் கொள்ளாது தர விருத்தியை மட்டும் கவனத்தில் கொண்டு கடமையாற்றும் ஒரு கல்வியியலாளர்.

கடமையில் கண்டிப்பிருக்கும், அது கருணையின் மறுவடிவமாக உணரப் பலரால் முடிவதில்லை. மனிதப் பலவீனங்களான 'தூற்றுதல்' கண்டு மனந்தளராது கடமைபுரியும் கடமையுணர்வு மிக்க நடுநிலையாளர். விமர்சனங்களுக்கு மேல், விருப்பங்கொண்டு சரியானதை ஏற்று மற்றவற்றை விலக்கிவிடும் நேர்மையான நிர்வாகி. எதிலும் கல்லூரியின் பங்குபற்றுதலை, அது வெற்றியோ தோல்வியோ உறுதிப்படுத்தும் ஒரு உயர்ந்த இலட்சியவாதி. ஓய்விலும் கல்லூரியைத் தொடர்ந்து உளத்தால் நிர்வகிக்கும் உயர்ந்த மனப்பான்மையுள்ள அருட்சகோதரி அவர்களுக்கு இறைவன் நீண்ட ஆயுளை வழங்க இறைஞ்சுகின்றேன்.

**ஆர். இராஜதுரை**
*அதிபர்*
*யா/மத்திய கல்லூரி*

# Message from the principal
# of
# St. John's College Jaffna

HOLY FAMILY CONVENT JAFFNA – As a leading educational institution in the region has rendered yeoman service to the community, building up invaluable educational values for people to follow

Rev.Sr.Yolande Mathias was a contemporary of mine at the university of peradeniya. I therefore deem it a great honour and privilege to forward this message on her contribution in the field of education, especially, to HOLY FAMILY CONVENT.

She had adorned the chair during one of the most turbulent periods in our history. But, had come out with "Flying Colours" in holding on the school together with grit and determination, in spite of civil strife & displacements.

Though she would soon be leaving the portals of this great establishment, through her loyalty and dedication to service. She leaves behind an indelible impression in the annals of the institution.

**S.THANAPALAN**
*Principal*
*St.John's College, Jaffna.*

# Message from the principal of Chundikuli Gilrs College, Jaffna

Rev. Sr. yolande Mathias retires from the principalship of the Holy Family Convent, Jaffna, shortly.

She hails from Vadamaradchi which has the pride of Place in producing eminent educationists in the Jaffna peninsula from time immemorial. Fresh from the Peradeniya University, armed with an Arts degree, she joined the Holy Family Convent Jaffna which is the first Holy Family Convent in Sri Lanka, in 1970. Her penchant for learning geared her towards obtaining her Diploma in Education from the University of Colombo in 1977, her Diploma in Management and Administration from the N.I.E. in 1990 and her Masters Degree from the Jaffna University in 1922.

Her innate qualities of initiativeness diplomacy, leadership and courage earned her a place in the administration of the school. She was appointed Vice Principal in 1984 and later Principal in 1988.

She was a woman with a vision and a mission with the view of equipping the student to suit the modern times, with the helps of the Past Pupils Associations around the globe she was able to install a computer unit in the school and organized after school spoken English and speech classes. The initiation of the College Day and founder's day celebrations show beyond and doubt her insight in building up the Familian heritage. Even the library went through an overall an change to suit the times.

Her undaunted courage led her to brave all obstacles and run the school during the displacements at Mirusuvil in 1995 and again at Manipay in the year 2003. The amalgamation of the two convents in 2002 took place smoothly and unnoticed which speaks for her.

It would be by no means an easy task to fill the void created by the retirement of Rev.Sr.Yolande.

May the Good Lord bless the devoted services rendered by her to the school and community at large, and give her peace and contentment in her retired life.

**MRS. T. RAJARATNAM**
*Principal,*
*Chundikuli Girls' college, Jaffna.*

# சமூகத்தால் மறக்கப்பட முடியாதவர்

யாழ் திருக்குடும்ப கன்னியர் மடத்தில் ஆசிரியராக, உபஅதிபராக, அதிபராக 30 வருடங்கள் சிறந்த கண்ணியமிக்க சேவையாற்றி ஓய்வுபெறும் அருட்சகோதரி யோலண்ட் அவர்களை 20 வருட காலமாக நான் அறிவேன். எனது அயல் பாடசாலை என்ற வகையில் இவரது தொடர்பு நெருக்கமாக இருந்தது. அருட்சகோதரி யோலண்ட் சிறந்த கல்வியியலாளர், சீரிய நிர்வாகத்திறன் கொண்டவர். நல்வழி காட்டும் ஆன்மீகத் தொண்டர். "அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி" என்ற முதுமொழிக்கிணங்க அவர் சிறந்த நிர்வாகியாகவும், ஆன்மீகவாதியாகவும் ஏனையோருக்கு வழிகாட்டியாகவும் திகழ்ந்து "திருக்குடும்ப கன்னியர் மடம்" பாடசாலையை நவீனப்படுத்தினார்.

தனது பாடசாலையின் கீர்த்தி உயர்ந்துகொண்டே செல்ல வேண்டும் என்பதில் தளராத ஊக்கம் கொண்டு செயற்பட்டார். பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களுடன் மட்டுமன்றி நல்ல சமூகத் தொடர்புடையவராகவும் காணப்பட்டார். பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றுடன் நெருங்கிய நல்லெண்ண உறவு கொண்டு பாடசாலையின் செயற்திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தினார். இப்பாடசாலை வரலாற்றில் தனக்கென ஒரு தனி இடம் பிடித்துக்கொண்ட அருட்சகோதரி அவர்கள் பாடசாலை சமூகத்தால் மறக்கமுடியாதவர் என்பதை யாவரும் அறிவர். அவரது ஓய்வுக்காலம் நலமே அமைய வாழ்த்துகின்றேன்.

**திருமதி க. பொன்னம்பலம்**
*அதிபர்*
*யாழ்/ வேம்படி மகளிர் கல்லூரி*

# நெஞ்சத்தில் நிறைந்திடும் அதிபர்

யாழ் திருக்குடும்ப கன்னியர்மடப் பாடசாலையில் நீண்ட காலமாக அரும்பணியாற்றிய அதிபராம் அருட்சகோதரி யோலன்ட் அவர்கள் மனதில் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளார். இவரது சேவைக்காலத்தில் பாடசாலையின் பல்துறை சார்ந்த வளர்ச்சிக்கு ஆற்றிய பங்கு அளப்பரியது. தனது ஆளுமை மூலம் பாடசாலையின் சேவைப் பயணத்தில் வெற்றி நடை போட்டுள்ளார். தனது உயர்ந்த தோற்றத்திற்கு ஏற்ப உயர்ந்த பணிகளை ஆற்றி யாழ் மாவட்டத்தில் முன்னிலைப் பாடசாலையாகத் திகழ வைத்தார். துறவற வாழ்வுக்கு மட்டுமல்ல கல்விப்பணிக்கும் தன்னை அர்ப்பணம் செய்துள்ளார்.

கல்வி வளர்ச்சியிலும், மாணவர் நன்னடத்தையிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் கண்ணும் கருத்துமாக இருந்து மாணவர்களை செயற்பட வைத்தார். அதிபர் அவர்களது பொறுமையும், பொறுப்புணர்வும் ஆசிரியர்களை ஒன்றிணைத்து ஒத்துழைப்புப் பெறும் சாந்த நோக்கும் ஆற்றலும் பல பிரச்சனைகளையும் சுமுகமாகத் தீர்த்து கற்றல், கற்பித்தல் தடங்கலின்றி நடைபெற பெரிதும் உதவியது. அதிபர் அவர்களது பணி பாடசாலை வரலாற்றில் என்றும் மறக்க முடியாத தூய பணியாகும்.

வாழ்க்கையை வளம்படுத்தும் ஊடகம் கல்வி. இது மாறாத அழகுள்ளது. மறுமலர்ச்சி உள்ளது. இத்தகைய கல்வியை வழங்கி பாடசாலையை மேம்படுத்திய இவரது ஓய்வுக்காலம் பல வழிகளிலும் சிறப்புப் பெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**அருட் சகோதரி G. செல்வராணி**
*அதிபர்*
*யா/புனித ஜோண்பொஸ்கோ வித்தியாலயம்.*

# அதிபர் சங்கத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மட அதிபர் மதிப்பிற்குரிய அருட்செல்வி யோலன்ட் மத்தாயஸ் அவர்களின் மணிவிழாவையொட்டி வெளியிடப்படுகின்ற சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற நற்பண்புகளை படிப்படியாக வளர்ச்சிப் பாதையிலிட்டுச் சென்று இன்று புகழ்பூத்த தலைநிமிர் கல்விக் கூடமாக மாற்றிய பெருமை, இளமைத் துடிப்புள்ள அதிபர் அருட்சகோதரி யோலன்ட் மத்தாயஸ் அவர்களையே சாரும். கண்டிப்புடன் கூடிய நிர்வாகமும், இறைபக்தியுடன் கூடிய தாயன்பும், எடுத்த கருமங்களை நிதானமாக, செவ்வையாக, மற்றையோர் பாராட்டத்தக்க வகையிலே செய்து முடிக்கவேண்டும் என்ற திண்ணிய மனமும், பரபரப்பில்லாத அமைதிப் போக்கும், நேரந்தவறாமையும், சக அதிபர்களையும், நிர்வாகிகளையும் சக ஆசிரியர்களையும் மதித்து, யாவரையும் இணைத்துச் செயல்படவேண்டும் என்ற மனப்போக்கும் இவரிடம் நான் கண்ட நடத்தைக் கோலங்களாகும்.

அண்மையில் கல்லூரியில் நடைபெற்ற 140-வது ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகளும் அன்று வெளியிடப்பட்ட மலர் வெளியீடும் இவரது ஆளுமை வளர்ச்சிக்கும், தலைமைத்துவப் பண்பிற்கும் சிறந்த நிர்வாகத்திறனுக்கும் சிகரம் வைத்தாற்போல் அமைந்திருந்தன என்று கூறுவதில் பெருமைப்படுகின்றேன். அதிபர்களுக்கெல்லாம் முன் உதாரணமாக சுட்டிக்காட்டப்படக்கூடிய மதிப்பார்ந்த அதிபர் அவர்கள் அதிபர் சேவையில் இருந்து ஓய்வு பெற்றாலும் தொடர்ந்தும் கல்விப்பணியும் இறைபணியும் ஆற்றி சமூகப்பணி செய்ய அவருக்கு நீண்ட ஆயுளையும் தேகசுகத்தையும் எல்லாம் வல்ல இறைவனிடம் வேண்டுகின்றேன்.

**என். வன்னியசிங்கம்**

*தலைவர்*

*அதிபர் சங்கம்,*

*யாழ்ப்பாணம்.*

# யாழ் பேராலய பங்குத் தந்தையின் ஆசிச்செய்தி

யாழ் திருக்குடும்ப கன்னியர் மட பாடசாலை அதிபர் அருட்சகோதரி யோலண்ட் மத்தியாஸ் தன் உயர்ந்த சேவையை நிறைவு செய்து ஓய்வு பெறும் வேளையில் அவர்தம் சேவைநலன் பாராட்டுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1970ம் ஆண்டில் யாழ் திருக்குடும்ப கன்னியர் மடத்தில் பட்டதாரி ஆசிரியையாக பணியை ஆரம்பித்த அருட்சகோதரி மன்னார் மாவட்டத்தில் சில வருடங்கள் சேவை செய்த பின் 1982ம் ஆண்டு தனது பணியை யாழ் திருக்குடும்ப கன்னியர் மடத்தில் தொடர்ந்தார்.

அவர் அதிபராக பொறுப்பேற்ற காலமுதல் போரின் கொடுமையால் பாடசாலை வளர்ச்சிக்கு பல சவால்கள் ஏற்பட்ட போதிலும் அவருடைய சிறப்பான தலைமைத்துவ ஆளுமைப் பண்புகளையும் உயர்கல்வித் தகமைகளையும் பயன்படுத்தி பாடசாலையை வியத்தகு வளர்ச்சிக்கு இட்டுச் சென்றார். மாணவிகள் மத்தியில் ஒழுக்கத்தையும் கல்வியுயர்வையும் பேணுவதற்காக அவர் உறுதியொடு செயற்பட்டு பாடசாலை ஒழுக்கத்தில் (Discipline) மிகுந்த கவனம் செலுத்தியது குறிப்பிடத்தக்கது.

இவருடைய காலத்தில் கல்வி பயின்ற மாணவிகள், பல நாடுகளிலும் நல்ல நிலையில் வாழ்ந்து பாடசாலைக்கு பெருமை சேர்ப்பதை குறிப்பிட விரும்புகின்றேன். அவர் இப்பதவியிலிருந்து ஓய்வு பெற்றாலும் நமது மக்களின் உயர்கல்விச் சேவையில் தொடர்ந்தும் தனது பங்களிப்பைச் செய்வார் என்று எதிர்பார்க்கின்றோம்.

இறைவனின் ஆசீரும் வழிநடத்துதலும் தொடர்ந்து அருட்சகோதரியோடு இருக்க நன்றி உணர்வுடன் வாழ்த்துகின்றேன்.

அருட்கலாநிதி மைக்கல் சவுந்தரநாயகம்
பங்குத்தந்தை,
யாழ் பேராலயம்

# Message from the Principal...

Words are inadequate to fathom the capacity of Revd.Sr.Yolande. Yet with great pleasure I express a few words about her.

Revd.Sr.Yolande, who steered this institution for the past sixteen years, is an efficient, talented, selfless and dedicated person. Her regime is remarkable. It is a golden era in the annals of the Holy Family Convent. This institution reached its glorious heights under her leadership. Physical, Social, intellectual and spiritual advancement of the students during her stewardship is, indeed, commendable.

As principal she was very considerate and understanding. She carried her administration with hopes and unfailing courage, which enabled her to steer the school efficiently.

Her strong faith, foresight, commitment and generosity helped her to guide the school to greater heights. Let me thank God for the manifold blessings bestowed upon this institution through the untiring efforts of Revd.Sr.Yolande.

I wish her a peaceful future and God's choicest blessings on her.

**REVD.SR.M.T.LADISLAUS.**
*Principal,*
*J/Holy Family Convent*

# பெருவிருட்சமொன்றின் நிழல்

2004ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் 30ம் திகதியன்று சேவையிலிருந்து இளைப்பாறும் அதிபர் அருட்சகோதரி யோலன்ட் மத்தியாஸ் அவர்கள் பற்றிய நினைவுக் குறிப்புகளை இத்தருணத்தில் நன்றியுடன் சமர்ப்பிக்கிறேன்.

1988ம் ஆண்டு அப்போதைய அதிபராகவிருந்த அருட்சகோதரி அன்ரனி யோசவ் அவர்கள் இளைப்பாறவிருந்த காரணத்தால் அவரின் இடத்திற்கு பொருத்தமான நிர்வாகத்திறன் கொண்ட அதிபரை கல்லூரிச் சமூகம் தேடிக்கொண்டிருந்தது. இவ்வேளையில் கடவுளின் கருணையும் கல்லூரிச் சமுகத்தினரின் வேண்டுதலும் கைகூட அருட்செல்வி யோலன்ட் மத்தியாஸ் அவர்கள் அதிபராகக் கடமை ஏற்றார்.

சிறந்த நிர்வாகிக்குரிய நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும் யாவரையும் கவர்ந்திழுக்கும் பேச்சாற்றலும் கொண்டவராக விளங்கிய அதிபர் கிறிஸ்தவ ஒழுக்க விழுமியங்களை மாணவர்பாற் கொண்டு செல்வதற்கும் அதன் மூலம் ஓர் ஒழுக்கம் நிறைந்த சமுதாயத்தை உருவாக்குவதற்கும் தன்னை அர்ப்பணிக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

முகாமைத்துவ நெறியில் விசேட பயிற்சிபெற்ற அதிபர் அவர்கள்பாடசாலையை வழிநடத்துவதிலும் ஆசிரியர்கள், மாணவர்களின் கற்றல் கற்பித்தல் பற்றிய கோட்பாடுகளில் மாற்றங்கள் கொண்டுவருவதிலும் முனைப் புடன் ஈடுபட்டார்.

போரின் ஆழமான வடுக்கள் விட்டுச்சென்ற தடயங்கள் மானிடத்தின் மரணங்கள் என்பன நாட்டை ஆட்சிசெய்தவேளை கல்வி நிலையினை மீள்கட்டியெழுப்பும் பணியில் கல்விச் சமூகம் மிகவும் ஆழ்பணியாற்ற வேண்டியிருந்தது. இக்காலப்பகுதியில் அருட்செல்வி அவர்கள் இப்பாடசாலைக்காக ஆற்றிய பணி நினைவுகூரத்தக்கது. அவர் துணிந்து நின்று எடுத்த தீர்மானங்கள் பலபாடசாலையின் உயர்வுக்கு உந்து கோலாயின.

அதிபரது சேவையின் இறுதிக் கட்டத்திலும் பெரும்பணி ஒன்றை நிறைவேற்ற வேண்டியவராக இருந்தார். இரு நிர்வாகத்தில் இயங்கிய பாடசாலைகளை ஒன்றிணைத்து ஒரே தலைமையின் கீழ் கொண்டுவருவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டபோது, அதிபர் அவர்கள் விரைந்து செயற்பட்டு நிர்வாகத்தை சிறப்புற அமைத்தார். இதனால் அவருக்கு ஏற்பட்ட கஷ்டங்கள், துன்பங்கள், மனஉளைச்சல்கள் போன்றவற்றைப் பொறுமையுடன் காத்து நின்று யாழ்/ திருக்குடும்ப கன்னியர் பாடசாலை பெருவிருட்சமாய் தளைத்தோங்க தன் உறுதியான உழைப்பை நல்கியவரை இப்பாடசாலைச் சமூகம் என்றும் மறவாது. இவரது ஓய்வுக்காலம் இறைபணியிலும் சமூகத் தொண்டிலும் தொடர இறையருள் வேண்டி மகிழ்வுடன் வாழ்த்துகிறேன்.

**திருமதி. எம். ரி. ஜெயப்பிரகாசம்.**
*முன்னாள் உப அதிபர்.*

# திருக்குடும்பக் கல்விக் கட்டமைப்பின் முகாமையாளர்.

திருக்குடும்பக் கன்னியர் மட சபையில் இளமைக் காலத்திலேயே துறவியாகத் தன்னை இணைத்துக் கொண்டவர் அருட்சகோதரி யோலன்ட் மத்தியாஸ். கல்வியிலே முதுகலைமாணி பட்டப்படிப்பையும் நிர்வாகத்தில் முகாமைத்துவ டிப்ளோமா பட்டத்தையும் பெற்றவர் இவர். 1970ல் அரச சேவையில் ஆசிரியராகப் பதவியேற்ற இவர் 1982ம் ஆண்டில் யாழ் திருக்குடும்பக் கல்விக் கட்டமைப்பின் பிரதி முகாமையாளராகவும் 1988 பங்குனித் திங்கள் முதல் முதன்மை முகாமையாளராகவும் இக்கட்டமைப்பை அலங்கரிக்கத் தொடங்கினார்.

பாடசாலை என்ற நிறுவனம் ஒரு புறவடிவமாயினும் அதன் அக வடிவமானது அது பற்றிய ஆழமான கருத்திலும் செயற்பாட்டிலும் உள்ளது என்பதை என்போன்ற எம் ஆசிரியர்களுக்கும் தன்னால் தனது சேவைக்காலம் முழுவதும் கையேற்கப்பட்ட மாணவர் செல்வங் களுக்கும் உணர்த்தி அதிலும் வெற்றியைக் கண்டவர் எம் அதிபர். நவீன மயம் நோக்கி நிற்கும் இம் முகாமைத்துவப் பணிக்கு இத்தகைய உணர்வு இக்கட்டமைப்பில் விரவி நிற்றல் அவசியத் தேவைப்பாடு ஆகின்றது. இதற்காக இக்கட்டமைப்பு தன்னுள் இணைவோரிடையே நல்லிணக்கம், நல்லுறவு, நற்செயற்பாடு என்பவற்றை வேண்டி நிற்கின்றது. இதற்கு தேவையான புரிந்துணர்வு, சேவையுணர்வு, தியாக உணர்வு என்பவற்றை இத்திருக்குடும்பம் என்ற பாடசாலைக் கட்டமைப்பில் ஏற்படுத்த தனது அறிவு, ஆற்றல், ஆளுமை, அனுபவங்களை முழுமையாகப் பயன்படுத்தி தனது பணியைத் திருப்தியோடு நிறைவு செய்து இன்று சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார் எமது முகாமையாளர்.

இப்பாடசாலைக் கட்டமைப்பின் மகுட வாசகமான 'இறைவன் ஒருவருக்கே மகிமை' என்பதற்கு இணங்க இறைவனைத் தேடுதலுக்குரிய செயற்பாடுகளில் ஆசிரியர், மாணவர்களை ஈடுபடுத்தினார். தியான வழிபாடுகள் பாடசாலையின் எந்த முயற்சிகளிலும் செயற்பாடுகளிலும் ஆரம்ப நிகழ்வாக இறைஅருள் வேண்டி நிற்றலை வழக்கத்திற்குரிய ஒரு நடத்தையாக்கினார். மேலும் பெற்றுக் கொண்ட விளைவுகளை அருட்கொடையாக ஏற்றுக் கொள்ளத்தக்க மனப்பக்குவத்தைப் பெற எமது ஆசிரியர்கள், மாணவர்களுக்கு வழிகாட்டியவர். இறைவன் தனது படைப்புக்களினூடாகவே செயற் படுகின்றார் என்ற உண்மையை எமக்கு உணர்த்தியவர். இவ்வழி எமது மாணவச் செல்வங்களையும், ஆசிரியர்களையும் இறை பயத்திற்கும், பக்திக்கும் உரியவர்களாக்கி சாதனைகள் பலவற்றை படைக்கச் செய்தார்.

பாடசாலை என்ற கட்டமைப்பு வித்தைகள் பலவற்றை கற்பிக்கும் ஓர் ஆலயம். இங்கு கற்பிக்கப்படும் எந்த ஒரு வித்தைகளும் தேவை கருதி இருப்பதுடன் மட்டுமன்றி அவை நேர்த்தியாகவும், கிரமமாகவும், முழுமையாகவும், அழகாகவும் கற்பிக்கப்பட வேண்டும் என்பதில் அதிக அக்கறையுடைவராக திகழ்ந்தார். கற்றல், கற்பித்தல் செயற்பாடு உட்பட இணைபாட விதமான செயற்பாடுகளிலும் இவை தொடர்பான விழாக்களிலும் அவை நேர்த்தி மிக்கவையாக அமைதல் வேண்டும் என்பதை வலியுறுத்துபவர். ஒரு மேசைச் சீலை விரிப்புத் தொடங்கி விழா ஒழுங்கு தொடர்பான ஆரம்ப செயற்பாடுகள், விழாச்செயற்பாடுகள் அது தொடர்பான கணக்குகளைப் பேணுதல், நேர முகாமைத்துவம் என்ற அனைத்துச்

செயற்பாடுகளிலும் நேர்த்தியைக் கைக் கொள்ள எமக்கு வழிகாட்டியவர். இவை எல்லாவற்றிற்கும் மேலாக எமது செயற்பாடுகள் (கற்றல், கற்பித்தல் உட்பட இணைபாடவிதமான செயற்பாடுகள்) அனைத்தையும் குறித்து ஒரு சுயமதிப்பீட்டுப் பணியை எம்மையே மேற்கொள்ளச் செய்து எம்மை நாமே புடம் போடுவித்த மாபெரும் முகாமையாளர் எம் அதிபர். எச்செயற் பாடுகளையும் நேர்கணிய (Positive Approch) முறையில் அணுக வழிகாட்டி எம்மிடம் சமூக ஒப்புரவுக்குரிய பண்புகளை வளர்த்து எடுத்தவர்.

தலைமைத்துவம் ஒரு கட்டமைப்பின் பெயர் மட்டுமன்றி அக்கட்டமைப்பின் செயற்பாடு என்பதை உணர்த்தியவர். எம் பாடசாலைக் கட்டமைப்பின் தலைமைத் துவத்தை வகித்த அருட்சகோதரி இதற்காக தனது சேவைக்காலத்தில் அதிகாரப் பரவலாக்கலை மேற்கொண்டு அது தொடர்பான தீர்மானங்களை எடுக்கவும் அதனைச் செயற்படுத்தவும் வழிகாட்டியவர். தனது பணியின் வெற்றி இத்தகைய தலை மைத்துவங்கள் பல இங்கு உருவாக்கப் படுவதாலேயே மதிப்பிட முடியுமென தனக்கென ஒரு சுயமதிப்பீட்டை வைத்துப் பணியாற்றியவர். அதில் வெற்றியும் கண்டவர்.

மாணவர்களின் நிகழ்காலத் தேவையை உணர்ந்து செயற்பட்ட சமயோசித தலைவி எம் அதிபர். இன்று தொழில் உலகம் வேண்டி நிற்கும் ஆங்கில மொழித் தேர்ச்சியை மாணவர் பெற்றுக் கொள்வதை உறுதி செய்வதற்காக ஆங்கில மொழிச் சூழல் ஒன்றை இயலுமானவரை பாடசாலையில் வைத்திருக்க முயற்சிகள் பலவற்றை மேற்கொண்டவர். ஆங்கில மொழி கற்றல், கற்பித்தல் தொடர்பான செயற் பாடுகளை தனது நேரடிக் கண் காணிப்பில் வைத்திருந்ததோடு தானும் அதில் பங்கேற்றுச் செயற்பட்டவர். ஆங்கில மொழிக் கற்பித்தலுக்கான ஆசிரியர் பற்றாக்குறை ஒன்று நாடளாவிய ரீதியில் காணப்படுகின்ற போதிலும் எமது பாடசாலையிலும் அது குறித்த பற்றாக் குறைவினால் ஏற்பட்ட தொய்வு நிலையை நிவர்த்தி செய்ய ஓய்வு பெற்ற ஆசிரியர்களின் உதவி, பழைய மாணவர்களின் உதவி, அருட் சகோதரிகளின் உதவியை தனது தனிப்பட்ட ஆளுமையின் காரணமாக பெற்று சரிசெய்து வந்த பெருமைக்குரியவர். மாணவர்களுக்கு மட்டுமன்றி ஆசிரியர்களும் ஆங்கிலமொழித் தேர்ச்சி உடையவர்களாக இருப்பதை அவாவி நின்றவர். இதன் காரணமாக ஆங்கில மொழிச் செயற்பாடுகளிலும் ஏனைய ஆசிரியர்களையும் தனது ஆற்றலால் ஈடுபடுத்தியவர். இவற்றிற்கு மேலாக காலை வழிபாடுகள், பரிசளிப்பு தினம், உயர்தர மாணவர் வருடாந்த ஒன்றுகூடல் என்பவற்றை ஆங்கில மொழி மூலமாக நடத்துவதன் ஊடாக ஆங்கில மொழிச் சூழல் ஒன்றை மாணவர்களுக்காக பாடசாலை மட்டத்தில் உருவாக்க நடவடிக்கை எடுத்தார்.

வாழ்க்கையை எப்படியும் வாழலாம் என்பதல்ல. இப்படித்தான் வாழ வேண்டும் என்பதற்கான ஒழுங்கு விதிகளையும் மாணவர்களுக்கு எடுத்துக்காட்டுவதிலும் தனது ஆசிரியர்கள் முன்மாதிரியாக நடைஉடை பாவனையில் திகழவேண்டும் என்பதாலும் அதிக அக்கறை உடையவராக செயற்பட்டவர். இவை எல்லாவற்றிற்கும் மேலாக அழகை குறிப்பாக இயற்கை அழகைப் பேணவும் அதனை ரசிக்கவும் தனது மாணவர்களுக்கும் ஆசிரியர் களுக்கும் கற்றுக்கொடுத்தார். இதற்காக பாடசாலையையும் அதன் பௌதீகச் சூழலையும் அழகாகவும் சுத்தமாகவும் வைத்திருப்பதற்கும் தானே ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்தார். அவரின் கைவண்ணத்தால் பாடசாலையின் சூழலில் வளர்த்துவிடப்பட்ட தாவரங்களும், மலர்ந்து நிற்கும் மலர்களும் அதற்குச் சான்று பகர்கின்றன. கலைகளை நயக்கும் ஆற்றலிலே அவருக்கு நிகர் அவரே. இசை, நடன, நாடக, சித்திரக் கவின் கலைகளை மாணவர்களுக்கு கற்பிப்பதில் நேர்த்தியை

விரும்பி அதற்கான வழிநடத்தலை மேற்கொண்டவர்.

பாடசாலைச் செயற்பாடுகளை புத்தாக்கம் ஆக்குவதில் ஆர்வம் மிக்கவராகவும் திகழ்ந்தார். மாணவரின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளிலும், இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும், விழாச் செயற்பாடுகளிலும் புத்தாக்கங்களைப் புகுத்துவதற்கும் அல்லது அவற்றைப் புது பொலிவுபெற செய்வதன் மூலமும் மாணவர் ஆசிரியர்களின் ஆற்றல்கள் விருத்தியாக்கப் படுவதற்கு மிகப்பெரிய தூண்டியாக விளங்கியவர். இந்த வகையில் எம்மால் அதிபரை திருப்திப்படுத்த முடியவில்லையே என ஆசிரியர்களாகிய நாமும் மாணவர்களும் அங்கலாய்த்த சந்தர்ப்பங்களும் அதிகம். எனினும் இதன்வழி ஒவ்வொரு சந்தர்ப் பத்திலும் அவற்றிற்குரிய புத்தாக்கங்களை எம் உள்ளே நாம் தேடிக்கொள்ளவும் முடிந்தது. ஆகவே இப் பாடசாலைக் கட்டமைப்பில் ஆசிரியப்பணி என்றும் எமக்கு சலித்தது கிடையாது.

இவரது அறிவு, ஆற்றல், ஆளுமை, அனுபவங்கள் எமது பாடசாலை என்ற கட்டமைப்புக்குள் மட்டும் எல்லைப்படுத்தப் படவில்லை. யாழ்ப்பாண மாவட்டத்துக் கல்விச் சமூகம் என்ற எல்லைவரை இவை உணரப்பட்டிருந்தன. யாழ் கல்விவலய முகாமைத்துவப் பயிற்சிப் பட்டறைகள், யாழ் பல்கலைக்கழக முதுகல்விமாணிப் பட்டப் படிப்பு என்ற கல்விச் செயற்பாடுகளில் அவரினால் வழங்கப்பட்ட விரிவுரைகள் மூலம் அவற்றை யாழ் மாவட்டக் கல்விச் சமூகம் பெற்றுக்கொண்டது.

கல்வி உலகில் சிறந்த முகாமைத்துவத் தலைவி பாடசாலைக் கல்விச் செயற்பாட்டு நோக்கில் விலகிச் செல்வது எம் பாடசாலைச் சமூகம் எதிர்நோக்கும் பாரிய இழப்பாகும். அவர் சென்றாலும் அவரில் நாம் பெற்ற ஆழமான அனுபவங்கள் அவரை எம்மிடையே இருந்து எம்மை வழிநடத்த வைத்துக்கொண்டிருக்கும். இவரின் ஆளுமைத்திறன் வேறு ஒருவிதமாக எமக்குக் கிடைத்துக்கொண்டிருக்கும். அதே வேளை அவருடைய சேவையை வேறு வடிவத்தில் பிறர் பெற இறை விரும்பியுள்ளார் என்பது மனச்சோர்வில் நின்றும் எம்மை நிமிர வைக்கின்றது. இறை ஆசீரில் எம்மை வழி நடத்திய எம் அதிபர் தொடரும் காலத்தில் இறை ஆசீர் பெற்று நற்சுகங்களோடு வாழ இறைபதம் வேண்டி நிற்கின்றேன்.

**திருமதி. சித்ரா இராஜரட்ணம்**
*ஆசிரியை*
*யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம்*
*யாழ்ப்பாணம்.*

நீங்கள் தன்னலத்தைத் துறந்தவர்களா? அப்படியாயின் உங்களை எதிர்க்கும் சக்தி ஒன்றுமில்லை

-விவேகானந்தர்

அவ்வகுப்பிலுள்ள ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் நல்ல ஒரு படிப்பினையாக அமையும். இதன் மூலம் அதிபர் கல்வி அறிவை மட்டுமல்ல தூய்மையின் அவசியத்தையும் மாணவரிடத்திலே புகுத்துவார்.

ஏறக்குறைய கால் நூற்றாண்டு காலம் திருக்குடும்ப கன்னியர் மடத்தில் நல்லாசிரியராகவும், கண்ணியம் மிக்க அதிபராகவும் தடம் பதித்து ஆயிரக் கணக்கான நன் மாணாக்கர் களைச் சமூகத்திற்கு அளித்தவர். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அம்மாணவர்களின் உயர்நிலை கண்டு இன்று உள்ளம் பூரிக்கின்றார். அதிபர் அவர்கள் ஒரு சிறந்த நிர்வாகி மட்டுமல்லாது ஒரு மகத்தான ஒழுக்க சீலருமாகும். நாள்தோறும் மாணவர்களுக்கு விடுக்கும் அறிவுரைகளில் ஒழுக்கம், பண்பாடு, கலாசாரம், மனிதநேயம், தூய்மை ஆகிய அம்சங்களுக்குக் கூடிய முக்கியத்துவம் அளிப்பார். கற்கும் ஒவ்வொரு மாணவர்களின் பெயர்கள், குடும்பநிலை என்பன அவருக்கு நன்கு தெரியும். ஒவ்வொரு மாணவரிலும் எவ்வளவு கரிசனை அக்கறை கொண்டுள்ளார் என்பதை இச்செயல் எடுத்துக் காட்டுகின்றது. தண்டனைகள் வழங்குவது சட்டத்திற்கு உட்பட்டதாயினும் சில சந்தர்ப்பங்களில் சட்டத்தையும் மீறிவிடுவார். "பரீட்சையில் சித்தியடையாவிட்டாலும் நல்ல பண்பாடுகளையாவது பெற்றுக் கொள்ளுங்கள்" என்று மாணவர்களுக்கு அடிக்கடி வலியுறுத்துவார். காலைக் கூட்டங்களில் அவரின் உரையில் பெரும் பகுதி ஒழுக்கம் பற்றியதாகவே அமையும்.

பாடசாலையில் நடைபெறும் சகல விழாக்களும் மற்றவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக அமைய வேண்டும் என்பதே அவருடைய கருத்தாகும். விழா நடைபெறுவதற்கு முதல் நாள் சகல நிகழ்வுகளையும் ஒத்திகை பார்த்து தரமற்றவைகளை நீக்கி விடுவார்.

வரலாறு காணாத போர் நெருக்கீடுகளையும் இடப்பெயர்வுகளையும் சந்தித்த அதிபர் இடப்பெயர்வுகள் ஏற்பட்ட சந்தர்ப்பங்களிலே மாணவர்களின் கல்விக்குப் பாதிப்பு ஏற்படாமல் இடம்பெயர்ந்த இடங்களில் தற்காலிக வகுப்பறைகளை உருவாக்கி மாணவர்களின் கல்விச்செயற்பாட்டை தடையின்றி முன்னெடுத்துச் சென்றவர். அயரா விடாமுயற்சியும் சந்தர்ப்பத்திற்கேற்ப மதிநுட்பத்தைப் பிரயோகிக்கும் திறனும் வாய்ந்தவர். வீரமும் துணிவும் மிக்கவர்.

கற்றல் கற்பித்தலுக்குத் தேவையான வளங்களை வழங்குவதிலும் அவர் பின்நிற்பதில்லை. ஆசிரியர்கள் தமது தேவைகளைக் கூறுமிடத்து உடனடியாக அதை நிறைவு செய்வதில் கருத்தாக இருப்பார். அவர் இப்பாடசாலையில் கட்டுவித்த கட்டிடங்களும் புனரமைத்த கட்டிடங்களும் அவருடைய சாதனைகளைக் காட்டும் சான்றுகளாகும்.

ஆரம்பப் பிரிவிலே ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு ஆசிரியர் தவிர அனைத்து ஆசிரியர்களும் ஓய்வுபெற்றனர். இந்த இக்கட்டான நிலையிலே மனந்தளராது பழைய மாணவர்களுக்குப் பயிற்சி அளித்து அவர்கள் அவ்வெற்றிடங்களுக்குப் பணியாற்ற தொண்டர் ஆசிரியர்களை நியமித்தார். காலகதியில் அத் தொண்டர் ஆசிரியர்கள் யாவரும் நிரந்தர ஆசிரிய நியமனம் பெற வழி வகுத்துக் கொடுத்தார்.

கல்வியோடு பொது அறிவையும் இணைத்து மாணவர்களுக்கு வழங்கினார். அறிவைப் பெறுவதற்கு வாசிப்புப் பழக்கம் அத்தியாவசியம் எனக் கண்ட அவர் அப்பழக்கத்தைத் தீவிரமாகப் புகுத்தினார். நூல்

நிலையத்தைப் பயன்படுத்தாதவர்களைக் கண்டிக்கவும் தவறுவதில்லை. பாடசாலையில் அளிக்கப்படும் கல்வியின் தரமும் அக்கல்வியினால் மாணவர்கள் அடையும் பயனும் அப்பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களின் சேவையைப் பொறுத்தே அமைகின்றன. அர்ப்பணிப்பு நிறைந்த ஆசிரியர்களாலேயே உள்ளத் துறுதி, கடமையுணர்வு, சமுதாயநேயம் மிக்க மானிடராக தம் மாணவர்களை உருவாக்க முடியும் என்பது அதிபரின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும். நேரம் பிந்தி வரும் ஆசிரியர்கள், அதிக லீவு எடுக்கும் ஆசிரியர்கள், கடமையைச் சரிவரச் செய்யாத ஆசிரியர்கள் ஆகியோருடன் அவர் சில சந்தர்ப்பங்களில் முரண்பட்டதுண்டு. தவறுகளையும் தாமதங்களையும் சுட்டிக்காட்டும் போது அவை திருத்தப்படவேண்டியவையே ஒழிய சரியென நியாயப்படுத்தப்பட முடியாதவை. நியாயப்படுத்த முயலுகின்றபோது தான் முரண்பாடுகள் ஏற்படுகின்றன.

இன்றைய காலகட்டத்தில் அதிபராக கடமை புரிவது மிகச் சிரமமானது. இவ் உயர் பதவி சிக்கலானதாக இருப்பினும் அலுவலக நிர்வாக சேவையுடன் பாடசாலைக் கற்றல் கற்பித்தல் பணிகளையும் முன்னெடுத்து எல்லாவற்றுக்கும் மேலாக திருக்குடும்பக் கன்னியர் சபைக்கும் தனது மகத்தான சேவைகளையும் வழங்கி வந்துள்ளார்.

ஐரோப்பிய அருட்சகோதரிகளால் அடித்தளமிடப்பட்ட இத் திருக்குடும்பத்தின் மரபுகளையும் பண்பாடுகளையும் கட்டிக்காத்து வளர்த்தெடுத்து பாடசாலை வரலாற்றில் அழியா முத்திரையைப் பதித்தவர் எம் அதிபர். இப்பாடசாலையிலே இவ் அதிபரின் கீழ் ஆசிரியராக கடமையாற்றிய காலத்தில் நான் பெற்றுக்கொண்ட அனுபவங்களும் முன்மாதிரிகளும் என்றும் மறக்க முடியாதவை.

திருப்தியான சேவை மூலம் மனநிறைவுடன் ஓய்வு பெறும் இவ்அதிபர் பல்லாண்டு காலம் சகல நலன்களுடனும் வாழ்ந்து மென்மேலும் சமூகத்திற்குச் சேவை செய்ய வேண்டுமென மனதார வாழ்த்துகிறேன்..

*"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்*
*பண்பு பாராட்டும் உலகு"*

*என்பது திருவள்ளுவர் வாக்கு. இதே போக்கில் அருட்சகோதரி யோலண்ட் மத்தியாஸ் அவர்களையும் போற்றிப் பாராட்டுவோம்.*

**திருமதி. லெ. பரராஜசிங்கம்.**
*முன்னாள் ஆசிரியை*
*யா/திருக்குடும்பக் கன்னியர்மடம்.*

கடன்என்ப நல்லவை எல்லாம் கடன் அறிந்து
சான்றாண்மை மேல்கொள் பவர்க்கு
குறள் 981

# 140 வருடப் பாரம்பரியத்திற்குப் புதிய மகுடம் இட்டப்போது...

## 140 Years
















# புறச்செயற்பாடுகளில் புயலாக பணிபுரிகையில் அதிபர்...



விளையாட்டு விழாவில்
விண் உயரக் கொடியேற்றுகையில்....



மகிழ்வோடு முத்தமிழ் விழாவில்...




வணிகத்தளிர் வெளியீட்டு விழாவில்...



சாரணியருடன்
சுற்றுலாவிலே...




உயர்தர மாணவர் ஒன்றுகூடல் விருந்தில்...

# காத்திருப்பு தொடர்கிறது

ஆஸ்திகம் தழைக்க வைத்து
அற நெறியை வளர்த்து வைத்து
சிறுமையை ஓட வைத்து
பொய் வாயை மூட வைத்து
புகழ் ஏணியில் நிற்பவரே
ஓ... எங்கள் அதிபரே!
தோல்வியைக்கண்டு துவழாமல்
வெற்றியைக்கண்டு நிமிராமல்
பக்தியாய் பணியில் நின்றவரே
பாங்குடன் எம்மை கவர்ந்தவரே
உங்கள்மீது அடித்த புயல்கள் ஏராளம்
எறித்த வெயில்கள் ஏராளம்! ஏராளம்!!
புயலடித்து மலையேதும் சாய்ந்ததுண்டா?
வெயிலடித்து சமுத்திரம்தான் காய்ந்ததுண்டா
பள்ளிப் பாறையில் வீரியவிதையாய்
ஆழப்புதைந்த வேர்களாய்
விழுதுகளிறக்கிய விருட்சம் நீங்கள்
இலையுதிர்க்காலம் இலைகளுக்குத்தான்
- வேர்களுக்கல்லவே
எமை ஏற்றிவிட்ட ஏணியொன்று
தன்னிடம்விட்டு அசைய நினைக்கிறதா
இளைப்பாறிச்செல்ல நினைக்கிறதா!!
இதயத்து அறைகள் நன்றியால் நுரைத்திருக்க
விழிமடல்கள் பனித்து நிற்க - நாம்
விடைகொடுத்து நிற்பதா?
எம் அதிபரே!
அகவை அறுபதா உங்களுக்கு?
நிஜத்தை விசாரிக்க நீதிமன்றம் கூட்டிடுவோம்
நல்லதோர் தீர்ப்பு நாளை வருமெனும்
- நம்பிக்கையில்
எம் காத்திருப்பு தொடர்கிறது
என்றும் அன்புடன்....



**செல்வி. சி. மாலினி**
ஆசிரியை
யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம்

# A MULTI-FACETED PERSONALITY

Holy family convent, Jaffna can boast of an impressive array of principals, from Mother Marie Helen to Rev. Sr. Yolande who assumed office in 1988 and has been at the helm for 16 eventful years. coming after a gentle Sr. Martina and a buoyant Sr. Antony Joseph, Sr. Yolande was unique in her own way, unlike her predecessors she belonged to a new generation with a new vision and new horizons.

Though not a past pupil of this school, she had served as a teacher here, by which she became one of The Familians and imbibed the Familian tradition and spirit which she was to foster and uphold in later years.

No one can deny her love for the school. Her dream, her only ambition was to make H. F. C. a first-rate school in Jaffna. With this determination she hardnessed every resource, tapped every potential to develop the school to the maximum. It is due to her untiring efforts that the school has risen to its present height.

We all know she was a very able principal. The period of her tenure of service was a very difficult one. Besides the numerous other problems she had to overcome, she had to steer the school through a full-scale civil war with its accompanying hardships like danger, displacement and destruction. The way she handled the situation was admirable. With dogged courage she carried on, prepared for every eventiality, keeping her calm and poise in any predicament. Her fighting spirit never falters. Her head is never bowed in defeat. Perhaps her deep and dynamic faith underlies all this.

Her strong character inspires respect not only in the pupils, but also in the staff, parents and others. They accept her decisions as sensible and wise. Children know how particular she is about dicipline though she will tell you what a Herculean task it is to impose discipline on present day children student and sometimes even parents dread to approach her. But there is another side to her personality that they have not seen. Under this formidable exterior there lies a heart of gold. As Miss Louis used to say she is a "rough diamond" few people know how caring she can be, I have

known her go out of the way to bring relief to some one who was in need of assistance.

Another facet of her personality which many people are unaware of is her aesthetic sense and artistic talent. She has an eye for beauty. The decorations at the various school events are all done under her keen observation and direction. Formerly she used to do beautiful embroidery and keep a nice flower garden but as principal she had very little time for these activities.

Sr.yolande's work was not confined to the school alone. As a nun she contributed much to her community, shouldering heavy responsibilities in addition to her duties as principal. Her capacity for work was tremendous. I have often wondered how she manages such a heavy workload and look so fresh and relaxed at the same time.

Being aware that she was called to a responsible position where great demands would be made on her, she realised the need to equip herself with the necessary know ledge, expertise and experience. Therefore she proceeded to arm herself with higher academic and profesional qualifications and sought new experiences which not only enhansed her intellect but also enriched her personality.

Since I have had the opportunity to be associated with Sr. yolande for more than a quarter of a century it is but natural that I pay her this tribute. I have not dealt with her services to the school as I expect others will do so. I have only tried to bring out my own impressions of Sr. yolande's multi-faceted personality and qualities of head and heart, that I feel are worthy of appreciation and emulation.

**MISS. VIOLET EMMANUEL**

*(Vice President O.G.A)*

# ஆளுமை மிக்க அதிபர்

நாம் வாழும் இச் சமுதாயத்தில் ஒவ்வொருவரும் பல தரப்பட்ட திறமைகளை வெளிக்காட்டிக் கொண்டிருக்கிறார்கள். மனிதனானவன் ஓர் ஈடு இணையற்ற தனியாளனாக உள்ளான். ஏனெனில் ஒவ்வொருவரும் தமக்குரிய சிறப்புக்களைக் கொண்டு கருமங்களை முன்னெடுத்து செய்கிறார்கள். பூரணமாக தனி மனிதனை உருவாக்குவதில் ஆளுமை விசேட செல்வாக்கைச் செலுத்துகின்றது. ஒருவரின் தனிச் சிறப்புக்கள், நடத்தை இயல்புகள் என்பவற்றில் காணப்படும் வேறுபாடுகள், அவ்வேறுபாடுகள், செல்வாக்குப் பெறும் காரணிகளை அறிவதன் மூலம் ஆளுமையை நாம் புரிந்து கொள்ள முடியும்.

ஒருவரின் வெளிப்படையாக காணப்படும் விருப்பு வெறுப்புக்கள், உணர்வுகள், மனஎழுச்சிகள், திறமைகள், சமூக நடத்தைகள், மனப்பான்மைகள் என்பவற்றின் முழுமையான இயல்பு ஆளுமை எனலாம். இதனையே ஒவ்போட் என்னும் உளவியலாளர் 'ஆளுமை ஒருவரினது உள பௌதீக அமைப்பின் அப்போதைய ஒழுங்கமைப்பு' என வரையறுக்கின்றார். உடல், உள ஆளுமை மிக்க தனிமனிதனை உருவாக்குவதில் சில காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. 1. உடல் ஆரோக்கியம் 2. சமூக மனஎழுச்சி, வளர்ச்சி 3. ஒழுக்க வளர்ச்சி 4. தான் என்ற எண்ணக்கருத்தை வளர்த்தல் 5. தலைமைத்துவ இயல்பை வளர்த்தல் 6. முகாமைத்துவ திறனை வளர்த்தல்

மேற் குறிப்பிட்ட எல்லாப் பண்புகளையும் ஒருங்கே இணைத்த எம் ஆளுமை மிக்க அதிபர் சங்கைக்குரிய சகோதரி யோலண்ட் மத்தியாஸ் 1982ம் ஆண்டு தொட்டு 2004 வரை யாழ் திருக்குடும்ப கன்னியர் மட வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக திகழ்ந்து பல ஆக்க பூர்வமான தன் பணிகளை அர்ப்பணித்துச் சேவையாற்றினார். தன் ஆளுமைத் திறமையால் எம் பாடசாலை ஆசிரியர்களையும், மாணவர்களையும் ஆளுமை மிக்கவர்களாக சமூகத்தில் திகழ வேண்டும் என்ற எழுச்சியான மனத்துடன் உருவாக்கக் கூடிய தன்மையுடன் வழிநடத்திச் சென்றார் என்பதில் சந்தேகமில்லை. நான் என்னும் எண்ணக்கருத்தை மனதில் கொண்டவராய் ஒவ்வொரு ஆசிரியர்களையும், மாணவர்களையும் எல்லா செயற்பாடு களிலும் பங்குபற்ற இடமளித்தும் எல்லா வகையான உணர்வுகளையும் வெளிக் காட்டுவதற்குரிய சந்தர்ப்பங்களை அளித்தும், வகுப்பறையில் மிகத் தெளிவான சட்ட திட்டங்களை ஒழுங்கமைத்துக் கொடுத்தும், வெற்றி பெறக்கூடியவாறு செயற்பாடுகளை ஒழுங்கமைத்துக் கொடுத்தும் இவர்களின் கருத்துப் பரிமாற்றத்திற்கு ஒழுங்கமைத்தும் பல்வேறு செயல்பாட்டினால் வழிநடத்திச் செல்லும் ஓர் ஆசான் ஆவார். இவ்வாறான நல் எண்ணக் கருத்துக்களை கொண்டு ஓர் நேர்மையான தலைமைத்துவத் திறனுக்கு பொருத்தமானவர்களாக உருவாக்கி கொடுத்த வெற்றி இவரைச் சாரும் என்பதில் ஐயமில்லை.

ஒழுக்கம், ஆளுமையில் முக்கிய பண்பு என்பது போல் இவ் ஒழுக்கத்தை மனதில் கொண்டு பாடசாலை சமூகத்தினை ஓர் ஒழுக்கமுள்ள பண்புள்ள பழக்க வழக்கங்கள் சட்டங்கள் சம்பிரதாயம் என்னும் பண்புகளைக் கொண்டு வளர்க்கப்பாடுபட்டவர் ஆவார். சமூகப் பொருத்தப்பாடுடைய நன்நடத்தை, சிறப்பான மனவெழுச்சி, விரைவாக முடிவெடுக்கும் பண்புகளையும் கொண்ட மாணவர்களை பல சவால்களுக்கு மத்தியிலும் உருவாக்கினார் என்பது மிகையாகாது.

ஆளுமை விருத்தியில் முகாமைத்துவ திறமைகள் முக்கிய பங்கினை வகிக்கின்றன. தனது சேவைக்காலத்தில் தான் திட்டமிட்டபடி ஒழுங்குபடுத்தலாலும், ஊக்கப்படுத்தி வழிப்படுத்தலாலும் தன் முகாமைத்துவ தொழிற்பாடுகளால் எமது பாடசாலை பல உயர்ச்சிகளை காண வழிவகுத்தவர். நல்ல மனப்பான்மை, நன்நடத்தை, நுண்ணறிவுடன் செயற்படல், சிறந்த மனவெழுச்சி, பொறுமை, சமூகப் பொருத்தப்பாடு, அடக்கம், விரைவாகத் தீர்மானம் எடுத்தல், பிரச்சனைகளுக்கு சரியான தீர்வு காணல், முன்மாதிரியாக செயற்படல் என்னும் குணாதிசயங் களையுடைய இவர் தனது முகாமைத்துவ செயற்பாடுகளால் பல விடயங்களை முன்னெடுத்துச் சென்றார். இதன் மூலம் நல்லறிவு, நல்லமனப்பான்மை கொண்ட சமூகத்திற்கு தக்க மாணவர்களை உருவாக்கிய பெருமை இவரைச் சாரும். போர் அனர்த்தங்களால் அடியுண்டு சிதைந்து போன கட்டடங்களையும், மனங்களையும் தன் துணிவான போக்கால் மீண்டும் புத்துயிர்ப்பு அளித்த சம்பவங்களை என்னால் மறக்க முடியாது.

எமது பாடசாலை மகுட வாக்கியமாகிய 'இறைவனுக்கே மகிமை' (Glory be to god alone) என்பதற்கிணங்க எமது கல்லூரி பருவத்திலிருந்து இறைவனுக் குரியவர்களாக வாழ தனது அர்ப்பண வாழ்க்கையால் தியான வழிபாடுகளால் ஆன்மீக வழிகாட்டலினால் ஆசிரியர்களையும், மாணவர்களையும் இறைவனுடன் ஒன்றிக்க வைத்து நல் வழிகாட்டிகளாக திகழ வழிகாட்டிய பெருந்தகையாவார்.

இவ்வாறான ஆளுமை மிக்க எம் அதிபர் அவர்களின் 22 வருட சேவை எம் பாடசாலையின் பொற்காலமாகும் என்பதில் ஐயமில்லை. இவர் தனது 60 வது வயதைப் பூர்த்தி செய்யும் நிலையில் தொடர்ந்தும் உடல் சுகத்துடன் நீடூழி வாழ்க என வாழ்த்தி இறைவனை வேண்டி சமூகத்தில் நல்ல சேவை செய்ய மனதார வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

**திருமதி. ஏ. எம். கே. ரூபசிங்கம்.**
(பழைய மாணவி)
யாழ்மாவட்ட வலைப்பந்தாட்ட பயிற்றுனர்
(முன்னாள் மாவட்ட விளையாட்டதிகாரி)
கச்சேரி, யாழ்ப்பாணம்.

# நிறைவில் சிலிர்த்த மலர்

**கொ**ட்டிக் கிடக்கும் கொள்ளை அன்பு
தட்டிக் கொடுக்கும் தங்கப் பண்பு

கண்ணிலே மின்னல் கவிதை வைத்து
மண்ணிலே திரியும் வெள்ளை நிலவுக்கு

பூமாலை சூட்டி கவிதைப் பாமாலை
சாற்றித் தொடுக்கின்றேன்.

சித்திரப் பூவைப் போல் சிந்திடும் சிரிப்பு,
உற்றுப் பார்த்தால் உறுதியான நடை.
அந்திப் பூ விரிவது போல் அறிவை விரித்து வைத்தீர்.
மாணவப் பயிர்களை அறுவடை செய்கின்ற அருட்சகோதரியே
நாணலைப் போல் இல்லை, கண்ணியம் கொண்ட காவேரி நீ.

நித்திலத்திலே கிடைத்த பெட்டகமே.
உத்தமி நீர் என்றே ஒத்துக் கொள்வோம்.

உத்தமனார் பாதமதில் உவப்போடு நீர் இருந்து
பெற்ற பெரும் அருளினால் வளமூட்டினீர் வாழ்வதற்கே.

பெற்ற பெரும் இறைஞான அனுபவங்கள்
பகிர்ந்தளித்தீர் பக்குவமாய்.
பாங்குடனே நாம் வாழ
பரிவுடனே பாதை காட்டினீர்.

முகாமைத்துவம் ஏற்று மலர் முகங்களையும் கற்ற
அழகிய மங்கையே, அன்புடை கங்கையே,
வெள்ளி வீதியின் வெண் நிலவாய் கன்னியர் மடத்திலே
ஒரு களையோடு நடந்தவரே.

வித்தைகள் கற்று M. A பட்டமும் பெற்று
வட்ட நிலா வந்து போவது போல்
பாடசாலை வந்து போகும் வண்ணப் பறவையே
உப்புக் கடலுக்குள் கிடக்கும் சிப்பி முத்தைப் போல்
எமக்குக் கிடைத்தவரே.

மத்தியாஸ் றோசம்மா மகளாகப் பிறந்தீர்,
மக்கள் மாணவர்கள் மனங்கோணாமல் நடந்தீர்,
மல்லிகைப் பூப்போல் மணங்கமழ்ந்து நின்றீர்.
அறம்பாடி அந்நிறத்தை மாணவர் மனம்பாடி வைத்த மகாகவியே,
ஓய்வெடுக்கப்போகும் ஒரு கிளியே,
கண்ணீரைத் துடைத்துவிட்டுப் பன்னீரைத் தெளிக்கின்றோம்.
பதறித் தவிப்பதில்லை எதிலும் ஓர் நிதானம்,
புதுப்புதுச் செயல்களில் நாட்டம்,
அன்பாலே அரவணைக்கும்
முத்துமொழித் தத்தையே.
சங்கத் தமிழே, சந்தனக் குழம்பே,
மங்காத ஒளிவிளக்கே, வெள்ளைத் துகிலுடுத்த
வெண்புறாவே,
பொன்னகையை காவாமல்
புன்னகையைக் காவியவரே.

உத்தம குடும்பமாம் திருக்குடும்பத்தில்
உதித்துவிட்ட உயர் கல்லூரியில்
ஊக்கமுடன் உழைத்து நின்ற சோதரியே,
உம் நினைவுகளை நீர் விதைத்து
உறுதியுடன் செல்கின்ற வேளையிலே
உளம் தாங்க முடியா விடினும்
உலகில் உயர்வுடன் நீர் வாழ
உளமார வாழ்த்துகின்றேன்.

விட்ட பணி பெரும்பணியாய்
உம் மனதிலே பட்டாலும்
பணிவோடு கையேந்தி இறைவன் புகழ் பாடி
திறம்படவே செய்திட்டீர்.

இறைவனின் திறமைகள்
உம் கரங்களால் புரிந்தமைக்கு
உரித்தாகுக நன்றி இறைவனுக்கே.

(ஓய்வெடுக்கும் நாளிலே)
என்ன செய்வோம் ஏது செய்வோம்
என்ற கவலை உமக்கில்லை.
'தந்திடும் பணியெல்லாம்
தத்துவமாய் செய்திடுவேன்.
இன்னிசையாய் புகழ்பாடி
இறைவனையே வாழ்த்தியே
வல்லமை புரிவேன் நான்' என்றிடுவீர்
இறைவன் அருள்
என்றுமே உமக்குண்டு.

திட்டங்கள் பல தீட்டி திறம்படவே செய்திடுவீர்.
யுத்தங்கள் சத்தங்கள் உமை அணுக முடியாது.
வீறு நடை போடவே விரைந்திடுவீர் கன்னியரே.
வாழ்த்துகின்றேன் வாழ்த்துகின்றேன்
உளமார வாழ்த்துகின்றேன்.

அருட்சகோ. ஆ. டன்ஸ்ரன்
யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம்.

சற்றுப்பருத்த உருவம். இத்தோற்றம் அவருக்கு இயல்பான ஒரு மிடுக்கை ஏற்படுத்தும் சிறந்த ஆளுமைமிக்கவர். ஆழ்ந்து நோக்கிய பார்வை, உயரிய அணுகுமுறை, தீர்க்கமான பேச்சு இத்தனையும் பொருந்தியது யார் என்று கேட்க மாட்டீர்கள். அது நம் அதிபர் அருட்சகோதரி ஜோலண்ட் மத்தாயஸ். யாழ்/திருக்குடும்ப கன்னியர்மட அதிபராக அருட்சகோதரி ஜோலண்ட் மத்தாயஸ் அவர்களுடன் ஏறக்குறைய 25 வருடங்களுக்கு மேலாக பணியாற்றி யுள்ளேன். ஆசியராகவும், உப அதிபராகவும், பின்னர் அதிபராகவும் அவர் பதவிவகித்த காலப்பகுதியில் அவரிடம் நாம் கற்றுக்கொண்டவை ஏராளம்.

# காலப்பதிவுகளில் கரைந்து நிற்கும் நினைவலைகள்

ஒரு பாடசாலையின் வளர்ச்சிக்கான அளவுச்சுட்டி வெறுமனே கல்விப்பெறுபேறுகள் மட்டுமல்ல மாணவர்களின் ஒழுக்கம், அடக்கம், கட்டுக்கோப்பு என்பவற்றாலும் அளக்கப் படும். பாடசாலைகள் ஒழுக்கத் திற்குரிய இடம் மட்டுமல்ல வணக்கத் துக்குரிய இடம் என்பதிலும் பாடசாலைப் பற்று மாணவர்களுக்கு மட்டுமல்ல ஆசிரியர்களுக்கும் உரித்தானதென அடிக்கடி வலியுறுத்தும் எம் அதிபர் கத்தோலிக்கப் பாடசாலையாக மிளிரும் எமது பாடசாலையில் கத்தோலிக்க விழுமியங்களை கட்டிக்காக்கும் ஓர் உயர் காவலராகவே விளங்கினார்.

யாழ் மண்ணில் நிர்வாகத் திறன் மிக்க அதிபர்கள் வரிசையில் இவருக்கு ஓர் அழியா இடம் உள்ளதை யாரும் மறுப்பதற்கில்லை. ஏனெனில் இவருடைய முகாமைத்துவத்தின் கீழ் இயங்குகின்ற அனைத்து ஆசிரியர்களும் நேரகால ஒழுங்கிற்கு தங்களுடைய வேலைத் திட்டங்களை முடிப்பதற்கேற்ற வகையில் ஆசிரியர்களை, சரியான முறைகளை இனம்கண்டு பொருத்த மானவர் களிடம் அந்தப் பணிகளைக் கொடுத்து கல்வி அபிவிருத்திப் பணிகளுக்கான அடித்தளங்களை இட்டுவைத்து ஓர் உயரிய சிந்தனை ஆற்றல் உள்ளவராகவே இவரை இனம் கண்டிருக்கிறோம்.

மாணவர்கள் கல்வியில் மட்டும் ஆற்றல் உள்ளவர்களாக இருக்காமல் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் இயல்பாகவே பங்களிப்புச் செய்யும் வகையிலே அவர்களை ஊக்குவிக்கும் அதிபராக செயற்பட்டார். அந்த வரிசையில் தமிழ்மன்றம், ஆங்கிலமன்றம், விஞ்ஞான மன்றம், நுண்கலைமன்றம், உயர்தர ஒன்றியம், சாரணீய மன்றம் முதலிய வற்றிற்கு செயலுருவம் கொடுத்து மாணவர்களை சமூக இசைவாக்கம் பெறச் செய்வதற்காக ஆசிரியர்களையும் ஊக்குவித்து அவர்களையும் செயற்பட வைத்த அதிபரின் ஆளுமை வியந்து போற்றுதற்குரியது. இதற்கு சான்றாக மாகாண மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் கலைத்துறைகளிலும், விளையாட்டுத் துறைகளிலும் எமது மாணவர்கள் நிகழ்த்திய சாதனைகளே சான்றாக அமைகின்றன.

கற்றல், கற்பித்தல் கருமத்தொடர் வினைத்திறன் மிக்கதாக அமைவதற்கு செயலூக்கம் மிக்க ஆசிரியர்களின் சேவை அவசியம். ஆசிரியர்களுக்கு கற்பித்தல் துறையில் வாண்மை விருத்தி பெற அவ்வப்போது ஆலோசனைகளை

வழங்குவதோடு நில்லாது கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்காக நேரடியாகவே வகுப்பறைகளுக்கு தரிசனம் செய்து பயிற்சிக் கொப்பிகளை பார்வையிடுவது, மாணவர்களின் கற்றல் அடைவு மட்டங்களை பரிசோதிப்பது போன்ற நடவடிக்கைகளிலும் ஈடுபடுவார். இதில் ஆசிரியர்களின் விசனத்தை இவர் சந்தித்தாலும் இவ்விடயத்தில் கடும் போக்குடையவராகவே இருந்தார். மாணவர் நலனில் அதிக அக்கறை கொண்டு அவர்களின் சுயகற்றலை ஊக்குவிக்கும் ஒருவராகவே இருந்தார்.

பல்வேறு பண்புகள் கொண்ட ஆசிரியர், மாணவர் ஒன்றுகூடுகின்ற எம் பாடசாலையில், அவர்களின் பலம் எது பலவீனங்கள் எது என அறிவதோடு நில்லாமல் அவர்களிடையே முரண்பாடுகள் எழாமலும், எழும் முரண்பாடுகளை தனது தற்துணிவுள்ள தீர்க்கமான முடிவுகள் மூலம் தீர்த்து வைத்து எத்தகைய சவால்களுக்கும் முகம் கொடுக்கின்ற தற்துணிவுள்ள அதிபராக பணியாற்றியுள்ளார்.

ஆசிரியராக இருக்கட்டும், மாணவராக இருக்கட்டும் அவரவர் தம் தம் கடமை தவறும் போது அதிபர் கடுமையாகவே நடந்து கொள்வார். அதே வேளை அதை மனதில் இறுக்கிப் பூட்டி பழிவாங்கும் எண்ணம் இல்லாத மென்மையான இதயம் அவரிடம் உள்ளதைக் கண்டுகொண்டோம். அன்பு அவரிடம் நிறைய உண்டு. ஆனால் அதை அவர் நேரடியாக பகிரமறுத்தாலும் எம்மைப்பற்றி ஏனையவர்களுடன் அலசும்போது ஒவ்வொரு ஆசிரியரிடமும் அவர் எவ்வளவு தூரம் அன்பு வைத்திருந்தார் என்பதை ஊகித்தே அறிந்து கொள்ள முடியும்.

பாடசாலையில் எந்த ஒரு நிகழ்ச்சி நடந்தாலும் அதனை அடுத்த நாள் பகுப்பாய்வுக்குட்படுத்துவார். இங்கு விட்ட தவறுகள், குறைகள், நிறைகள் அலசப்படுவதுடன் சம்பந்தப்பட்டவர்களிடம் உரிய விளக்கம் கேட்கவும் தயங்க மாட்டார். இது தொடர்ந்து வரும் நிகழ்வுகள் ஆரோக்கியமாக நடந்தேறுவதற்கு இவர் கையாழும் யுக்திகளில் ஒன்று.

தூரநோக்கில் செயற்படும் எம் அதிபரிடம் ஆசிரியர்கள் விசாரணைக் கைதிகளாக அவர் முன் நிறுத்தப்படுவதுமுண்டு. அதிபர் இவ்வாறு கேட்டால் இப்படிச் சொல்வோம் எனத் திட்டமிட்டுக் கொண்டு அவர் முன் செல்லும் ஆசிரியர்கள் அவர் தொடுக்கும் வினாவிற்கு விடையே கூறமுடியாமல் வெளியேறிச் செல்வதுமுண்டு. வெளியே வந்து அவரின் மதிநுட்பத்தை வியந்து பாராட்டும் ஆசிரியர்களுமுண்டு.

*'எண்ணித்துணிக கருமம் துணிந்த பின்*
*எண்ணுவம் என்பது இழுக்கு'*

எனும் வள்ளுவர் கூற்றுக்கு இணங்க ஓர் துறவியாக ஆன்மீக வாழ்விற்கு தன்னை அர்ப்பணித்ததுடன் நில்லாது பல படிமுறைகளில் வளர்ச்சி கண்டு பல்பரிமாணத் தோற்றங்களில் தனது கருமங்களை செவ்வனே ஆற்றிய அதிபரின் சேவையை இழப்பதென்பதும், அதனால் ஏற்படும் துயரமென்பதும் சொல்லிட முடியாதவை. இருப்பினும் தொடர்ந்தும் அவர் எமது பாடசாலைக்கு தரிசனம் செய்ய வேண்டும். பாடசாலைச் செயற்பாடுகளை உயிர்ப்புடையதாக்கி தரவேண்டும் என்பதே எம் ஆசிரியர்கள் அனைவரதும் வேணவா ஆகும். சேவையில் இருந்து ஓய்வுபெற்றுச் செல்லும் எம் அதிபரை வாழ்த்துவதோடு அவர் நலமே வாழ எல்லாம் வல்ல இறைவன் துணை நிற்க இறையாசி வேண்டி நிற்கின்றோம்.

**திருமதி.ர.அச்சுதம்பிள்ளை**
*ஆசிரியர்*
*யா/திருக்குடும்ப கன்னியர் மடம்*

# வாழ்வனுபவங்களுக்கான வழிகாட்டி

பாடசாலை ஒன்றின் அதிபர் எப்படி இருப்பார். எப்படி இருக்கலாம் என்ற அபிப்பிராயம் எனக்கு இல்லை. ஏனெனில் எனது பாடசாலை வாழ்வில் அனுபவித்துக்கொண்டிருக்கும் ஒரே ஒரு அதிபர் அருட்சகோதரி ஜோலண்ட் மத்தாயஸ் அவர்களே.

வெள்ளை உடையும் நிமிர்ந்த நடையும், நேர்கொண்ட பார்வையும் (Perfection) பூரணத்துவத்தில் பிடிப்பும் கொண்ட எமது அதிபர் 'பிள்ளை' என்ற விளிப்பில் தனது கருத்தை வெளிப்படுத்தி 'சரிபோகலாம்' என்ற தீர்ப்பில் வழிநடாத்துவார். இதனால் நாம் பொதுவாக அவருக்கு ஒளித்து இலைமறை காயாக இருந்தால் போதும் என்று எண்ணத் தூண்டும். ஆனால் பாடசாலையில் நாம் மறைய முற்படும் இடமெல்லாம் அவர் இருப்பதைக் காண்போம். பாடசாலை மாணவரில் சுமார் 80 வீதத்தினரை அவர் பெயர் சொல்லி அழைப்பார்.

எமது அப்பா, அம்மா, சகோதரர் பற்றியும் தெரிந்துகொண்டு கதைப்பார். ஒவ்வொரு வகுப்பாக பார்த்து நடந்து வரும்போதும், வருடாந்த மாணவர் முன்னேற்ற அறிக்கையை ஒவ்வொருவருக்கும் வாசித்து வழங்கும் போதும், எம்முடன் சேர்த்து எமது பெற்றோர்களை சந்திக்கும்போதும் எங்கே எமது தவறுகள் கவலையீனங்கள் வெளிவந்துவிடுமோ என்று ஏங்காத மாணவர்களே இருக்க மாட்டார்கள். ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசுப் பரீட்சை அல்லது க.பொ.த சாதாரண, உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளிவருவதற்கு முன்பே மாணவர்களின் பெறுபேறுகள் எவ்வாறு இருக்கப் போகிறது என்பதை ஓரளவுக்கு சரியாக கூறிவிடக் கூடிய அளவுக்கு அவர் எமது கல்விச் செயற்பாடுகளில் ஈடுபாடு கொண்டிருந்தார். இணைபாட செயற்பாடுகளிலும் அவரது பூரணத்துவம் நோக்கிய நேர்பார்வை ஆழமானதாகவே இருக்கும். பாடசாலையின் விழாக்கள், போட்டிகள், மன்ற, சாரணியச் செயற்பாடுகள் மாணவத் தலைவிகளின் ஒழுங்காற்று நடவடிக்கைகள் எதிலும் பூரணத்துவத்தை ஏற்படுத்த அவர் காட்டிய அக்கறையும் மேற்பார்வையும் இறுக்கமானதாகவே இருக்கும். நாம் இவ்வாறான செயற்பாடுகளுக்கு அவரின் அங்கீகாரத்தை பெறுவற்கு மிகக் கடினமாக உழைக்கவேண்டியிருக்கும். எத்தனையோ சந்தர்ப்பங்களில் பொறுப்பாசிரியர் அடங்கலாக சேர்ந்து அழுதுபார்த்தும் அவரைச் சமாளிக்க முடிவதில்லை. எனவே அவரிடம் பாராட்டைப் பெறுவது உண்மையான அடைவாகவே இருக்கும். சில சமயங்களில் நாம் அடைந்த பெறுபேற்றை நினைந்து நாம் பெருமிதம் அடைந்து கொண்டிருக்க அவர் அதற்கு மேற்பட்ட பெறுபேற்று நிலையைச் சுட்டிக்காட்டி அடையாமல் போனதற்கான காரணங்களை பட்டியல்படுத்தி இன்னும் நாம் உழைக்கவேண்டும் என்று ஆற்றுப்படுத்துவார். எமது அதிபர் பூரணத்துவத்தை நோக்காகக் கொண்ட ஒரு நிர்வாகி. பாரபட்சம் முகத்தாட்சணியம், புறம்சொல்லல் என்ற அழுக்காறு

இல்லாத அவரது சிந்தனையும், செயற்பாடும் சில சமயங்களில் எம்மை வேதனைப்படுத்தும் போது அவர் தனது நிலையில் தளம்பாது 'பிள்ளை உமக்கு இப்ப தெரியாது நீர் இந்தப்பாடசாலையை விட்டு விலகிய பின் உணர்வாய்' என்று கூறுவார். அவ்வாறான அவரின் கூற்றை ஆமோதிப்பதில் நான் பல பழைய மாணவியர் கூறக் கேட்டிருக்கிறேன். எனவே பொய்யான புகழ்ச்சி பாராட்டுக்களால் சூழ்ந்துள்ள இன்றைய காலப்போக்கில் மெய்யான வாழ்வனுபவங்களுக்கான வழிகாட்டியாகவே எமது அதிபரைப் பார்க்கின்றேன்.

ஒரு மாணவி என்ற பார்வையில் எனக்கு அவரால் தரப்பட்ட சந்தர்ப்பங்களை நான் எவ்வளவு வெற்றிகரமாக பயன்படுத்தியுள்ளேன் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் மாணவத் தலைவிகளின் தலைமைப் பதவியை அடைவதற்கு அவரது தூண்டுதல்களே காரணமாக இருந்தன என்பதை நான் நன்றியுடன் நினைவு கூர்கின்றேன். எனக்கு கிட்ட இருந்து அவரது வழிநடத்தலை அனுபவிக்கக் கூடிய பல சந்தர்ப்பங்கள் கிடைத்தன. அவரின் 'பிள்ளை' என்ற விழிப்பில் கண்டிப்பான நிர்வாகியைக் கண்டேன். சீர்மியம் செய்யும் ஆசிரியரைக் கண்டேன். சேர்ந்து பங்கு கொண்டு மகிழ்ந்த தோழியைக் கண்டேன். கருணையுடன் அன்பு செய்யும் தாயைக்கண்டேன். அவரது பதிவுகள் என்னில் காணப்படுவதாக சிலர் கூறும் போது உள்ளூர மகிழ்ந்தேன்

எமது அதிபர் எமக்கு ஒரு பொது பாதுகாப்பு அரண். பாடசாலை கலாசாரம், விழுமியங்கள், சட்டங்கள், ஒழுங்குகள், நடைமுறைகள், தகவல்கள் ஆகியவற்றின் மொத்த வடிவமாகவே காணப்பட்டார். எமது கல்வி ஆன்ம, ஆளுமை, வாழ்வு, வளர்ச்சி என்ற குறிக்கோளுடன் எம் எல்லோரையும் சூழ்ந்திருந்தார். உண்மையில் 'சிஸ்டர்' என்ற எமது விளிப்பு எமக்கு ஒரு அச்சுறுத்தலாகவே இருந்தது. ஆனால் அவர் வலியுறுத்துவது போல் அந்த அச்சுறுத்தல் எமது மனச்சாட்சியின் குரலாக மாறி (Familian Fமிலியன்) என்ற குறியீடாகி சமூக வாழ்வில் மணம் பரப்பினால் அதுவே நாம் அவருக்குக் காட்டும் கைமாறாகும்.

**மேரி சிந்துஜா திலகரட்ணம்**
*தலைமை மாணவதலைவி 2004/05*
*யாழ்/திருக்குடும்ப கன்னியர் மடம்*

# ஒரு பள்ளிப் புறாவின் பாச கீதம்

அது ஒரு பொற்காலம் - நான்

என் பள்ளியில் படித்த 13 வருடங்கள்
எனக்குப் பொற்காலம் - நம்
அதிபரின் பார்வையின் கீழ் - கல்வி
கற்ற அந்த வருடங்கள் பொற்காலம் தான்
நான் சிறக்கவே வாழ்ந்த அந்தக் கல்லூரி வாழ்க்கை
மறக்கவா முடியும் - உங்கள்
எண்ணங்கள் என் மனதில் விதைத்த
நல் மாற்றங்களை மறக்கவா முடியும்

தூய வெண்ணிற ஆடை துல்லிய
மனத்திலே நல் தெளிவு
அறங்கள் செய்து அற்புதம் படைத்து
மகிழ் வொளி பரப்பிய — உங்கள்
வார்த்தைக்கும் வலிமை உண்டு
ஈர்பத்தாண்டு மாணவர் உள்ளத்தை
ஆண்டமேதை — மாணவர்
ஒழுக்கம் பேணும் தீவிரவாதி

ஒவ்வோர் மாணவியின் பெயரும்
தெரியாது எமக்கு ஆனால் - உங்கள்
நாவில் சரளமாய் எங்கள் நாமம்
கன்றென இருந்த எம்மைக் காளை போல்
வளரச் செய்த உங்கள் திறத்தை
எம் கன்னியர்மடம் சொல்லி நிற்கும்
ஒவ்வோர் துறையும் தேர்ந்து — அது
தளைப்பதற்கு உங்கள் உழைப்பைத் தந்த
வீரத்தை போற்றி நிற்போம்
பல்கலைக் கழகம் சென்ற நானும் - என்
பள்ளியின் பெயரைச் சொன்னால் - எம்
அதிபரின் [illegible] மற்றவர் சொல்லியே - நிற்பார்



ஓ.... புல்லுக்கும் கூட உம் பெயர்
சொல்லக் கற்றுக் கொடுத்தவர் யாரோ
இத்தகு சிறப்புச் செம்மல் - எம்
இதயத்தில் நீடு வாழும்

அன்னையே!
மனநீதி பொய்க்காமல்
மறைநீதி கைக்கொண்டு
உறுதியான நெஞ்சோடு
அன்புடன் பழகிய — உங்கள்
உள்ளத்தைக் காலம் தான் வெல்லுமோ
ஒரு நூறு வருடங்கள் ஓடி மறைந்தாலும்
பொய்யாத மானிடர்கள் - இம்
மானிலத்தில் இருக்கும் வரை
மானிலம் செழிக்கும் என்றால் - எம்
கல்லூரியும் செழிக்கும்
கல்லூரி செழிக்க உரமிட்ட உங்கள்
சேவையும் நிலைக்கும் - அச் சேவையை
எங்கள் மனம் தினமும் நினைக்கும்

*என்றும் பிரியமான*
**அ.கார்த்திகா**
*(பழைய மாணவி)*
*1ம் வருடம்*
*முகாமைத்துவ பீடம்*
*யாழ் பல்கலைக்கழகம்*

# சமூகத் தொடர்பை ஆழமாக ஏற்படுத்திய அதிபர்

பாடசாலை ஒரு “சமூகம்”, பாடசாலை சமூகத்தின் மாதிரி வடிவம். இவ்வாறு பாடசாலை பற்றி கல்வியாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். ஆனால் பாடசாலை ஒரு சமூகம் என்பதை அதிபர் அருட்சகோதரி யோலன்ட் மத்தியாஸ் அவர்களின் பாடசாலை நிர்வாக முறைமையால் நாம் அனுபவத்துக்கு உட்படுத்தப்பட்டோம். சமூகம் அதன் கட்டமைப்பின் பலத்திலேயே நிலைபெற்று இலக்கினை நிறைவு செய்யும் நிலை தோன்றும். அதாவது சமூக அங்கங்களான தனிநபர், குழுக்கள், நிறுவனங்களுக்கிடையில் அந்தஸ்து, நடிபாகம் என்ற உள்ளடக்கத்தின் அடிப்படையில் காணப்படும் தெளிவே ஒரு சமூகத்தின் வெற்றியாகும்.

இந்த அடிப்படையில் யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலை அபிவிருத்தச் சபை ஒரு முன்னுதாரணமானதாக கொள்ளத்தக்கதே. பாடசாலை அபிவிருத்திச் சபையின் உத்தியோகப்பற்றான தலைவராக அதிபர் அவர்கள் இருந்தாலும் அதற்கு அப்பால் ஆசிரியர், பெற்றோர்களை இனங்கண்டு பாடசாலை முன்னேற்றத்திற்கு அவர்களை பயன்படுத்துகின்ற ஆற்றல் நிறைந்தவராகவும், பெற்றோரின் வளத்தை அணுகிப் பெறக்கூடிய தந்திரோபாயம் நிறைந்தவராகவும் காணப்பட்டார். அவரின் தலைமையின் கீழ் நான் பல வருடங்கள் நிர்வாக சபையில் அங்கத்துவம் கொண்டிருந்தேன். அவர் பாடசாலைக்கு பெற்றோரின் பங்கினை வலியுறுத்தி ஆசிரியர்களுடன் முரண்படாமல் நிர்வாகத்தில் பெற்றோரைப் பங்குகொள்ள கையாண்ட முறைமைகள் உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டியவை.

சட்டங்கள், ஒழுங்குகள், விதிமுறைகள், பாரம்பரியங்களில் அவர் கொண்டிருந்த ஆர்வமும் தேவைப்படும் போது நிதியை பெறுவதற்கு கையாண்ட தொடர்பாடல் முறைமைகளும், செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் அவர் கையாண்ட மேற்பார்வை வடிவங்களும் அவரை ஒரு நல்ல நிர்வாகியாக அடையாளப்படுத்தப்போதுமானவை.

அதிபர் அவர்கள் பாடசாலை என்ற பரப்புக்குள் திருக்குடும்ப கன்னியர் மடத்திற்கும், பாடசாலைக்கும் முரண்பாடு தோன்றாத வகையில் கன்னியர் மடத்தின் வளத்தை பாடசாலைக்குப் பயன்படுத்த எடுத்துக் கொண்ட முயற்சிகளும் மிகவும் பக்குவமானதே. எமது பாடசாலை முற்றாக ஒரு அரச பாடசாலை என்று கூறமுயாத அளவுக்கு திருக்குடும்ப கன்னியர் மடச்சபையுடன் ஒரு சந்தர்ப்பத்தில் இணைக்கப்

பட்டுள்ள நிலையில் மாகாணத் தலைவியின் இதர சகோதரிகளின் ஒத்துழைப்பை பாடசாலை பெற்றுக்கொள்ள எடுக்கப்பட்ட முயற்சிகள் அவரின் நடுநிலையை உணர்த்தப் போதுமானது.

கடந்த இரு தசாப்தங்களில் நாடு பல அவலங்களைக் கண்ட நிலையில் இடம்பெயர்ந்த அகதிகளுக்கு அடைக்கலம் கொடுத்த தாராளமும், பாடசாலை இடம்பெயர்ந்த நிலையில் மாணவர் நலன் நோக்கி கல்விச் செயற்பாட்டை இடம்பெயர்ந்த இடங்களில் ஆரம்பித்த துணிவும் அவரின் சமூகமயப்படுத்தலின் வெளிப்பாடாகும்.

எல்லாவற்றுக்கும் மேலாக சமூக ஏற்றத்தாழ்வுகளை சமப்படுத்துகின்ற நோக்கில் அருகில் இருந்த கன்னியர் மட வித்தியாலயத்தை உள்வாங்கி வளப்பகிர்வின் ஊடாக மாணவரை ஆற்றுப்படுத்த ஒன்றிணைப்பை அவர் முன்னின்று ஊக்குவித்தமை அவரின் இறைபணிக்கு சான்று பகரக்கூடியது.

அதிபரின் "சரியானதையே" நோக்கிய அணுகுமுறை அசௌகரியங்களை பெற்றோருக்கு ஏற்படுத்தியது என்றால் அது நன்மையை நோக்கிய தீர்மானம் என்பதற்கு நாமே சான்றுபகர முடியும்.

இவ்வாறான ஒரு ஆளுமை கொண்ட அதிபர் அவர்களின் சேவை பாடசாலை அபிவிருத்திக்கு அவசியமானது. அந்த வகையில் அதிபரின் சேவை பாராட்டப்பட வேண்டியதே. அவர் திருக்குடும்ப கன்னியர் மடத்தின் ஊடாக தமது ஆலோசனை களைத் தொடர்ந்து வழங்க வேண்டும் என்றுகோரி வாழ்த்தி விடைபெறுகின்றோம்.

**திரு. என். சகாயநாதன்.**
*பாடசாலை அபிவிருத்திச்சபை செயலாளர்.*
*யாழ்/திருக்குடும்ப கன்னியர் மடம்*

# நீங்காத நினைவுகளில்

# அருட்சகோதரி யோலன்ட்

மனிதன் பிறப்பதும் இறப்பதும் உலக நியதி. பிறக்கின்ற ஒவ்வொரு மனிதனும் குறுகிய காலமோ நீண்ட காலமோ வாழ்ந்து மடிகின்றான். இந்தக் குறுகிய அல்லது நீண்ட காலத்தில் சமூகத்தில் நாம் எப்படி வாழ்ந்தோம் என்பது தான் மிக முக்கியமானது. இவ் வாழ்நாளில் தமது சேவையால் உயர்த்தப்படுபவரும், போற்றப்படுபவரும் சிலராவர். எல்லோரும் இந்த உன்னத நிலையை அடைவதில்லை. அந்த வகையில் யா/ திருக்குடும்ப கன்னியர் மட அதிபர் அருட்சகோதரி ம. யோலன்ட் அவர்கள் வாழ்க்கையின் இருவேறு கோணங்களில் தன்னை ஈடுபடுத்தி அந்த வாழ்வில் வெற்றியும் நிறைவும் கண்டு தனது கல்விச் சேவையில் ஓய்வுபெறுவது கண்டு பெருமிதம் அடைகின்றேன்.

யாழ் திருக்குடும்ப கன்னியர் மடத்தில் க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவியாக நான் இருந்த காலத்தில் அருட்சகோதரி யோலன்ட் அழகும் தூய்மையும் நிரம்பிய இளம் துறவியாக இவ்வகுப்புகளில் கல்வி கற்றுக் கொண்டிருந்தார். பின்னர் ஓராண்டு முன் பின்னாக நாம் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சந்தித்தோம். அன்று தொடக்கம் அருட்சகோதரி யோலன்ட் அவர்களை நான் நன்கு அறிவேன். இவ்விதம் நான் சந்தித்தவர்களில் பலர் என் நினைவைவிட்டு நீங்காதவர்கள். அவர்களில் உயர்ந்த இடம் பெற்றவர் அருட்சகோதரி யோலன்ட். இவ்விதம் மறக்கப்பட முடியாதவராக அவர் அமைந்தமைக்கு அவரின் உயர்ந்த குணாதிசயங்களே காலாக இருந்தன.

ஒரு புறம் கண்டிப்பு, கறாராகப் பேசும் அருட்சகோதரி மறுபுறம் கருணை, கனிவு கொண்டவராக மிளிர்ந்தார். 'கல்லுக்குள் ஈரம்' என்பார்கள். அது அருட்சகோதரி அவர்களுக்கு நன்கு பொருந்தும். இரு வேறுபட்ட பணிகளை மேற்கொண்டிருந்த அருட்சகோதரி நல்லதிபருக்குரிய இலட்சணங்களாகிய கண்டிப்பும் கனிவும் இரு பக்கமாகக் கொண்ட ஒரு நாணயம் போலத் திகழ்ந்தார். மறுபுறம் தனது துறவு வாழ்வில் பயபக்தியும், நிறைகற்பும், எளிமையும் உள்ளவராக மிளிர்ந்தார். இந்த இலட்சணங்களின் ஒளி அவரின் வதனத்தில் நன்கு பிரகாசித்தன. துறவு வாழ்வுடன் ஒரு பெரிய பாடசாலையை நிர்வகித்தல் என்பது இலகுவானதல்ல. நானும் ஒரு அதிபராக இருந்ததால் இப்பணியின் கஷ்டங்களை நன்கு அறிவேன். எத்தனை கஷ்டங்கள், சவால்கள்

ஏற்பட்டபோதும் மனந்தளராது உறுதியாய் உழைத்து திருக்குடும்ப கன்னியர் மடத்தை உயர்ந்த இடத்திலேயே வைத்துக் கொண்டிருந்த அருட்சகோதரி பாராட்டத் தக்கவரே.

போர்ச்சூழ்நிலைகளில் தானும் தைரியமாக நிற்பதுடன் சக அதிபர் களாகிய எங்களையும் அரவணைத்துத் தைரியமூட்டி வழிநடத்திய ஒரு தாரகையாக அவர் திகழ்ந்தார். அருட்சகோதரி அவர்கள் அழகு இரசனை மிக்கவர். அகத் தூய்மையுடன் புறத்தூய்மையையும் விரும்புவார். அவரின் பாடசாலையைச் சூழ உள்ள மலர்த்தோட்டமும், அவரின் வாசஸ்தலத்தில் அமைந்துள்ள அழகிய தோட்டமும் இதற்கு நல்ல சான்றுகள். அழகிய பூங்காவைப் பார்த்து இரசிக்க அழைத்துச் செல்லும் அருட்சகோதரி ஒரு மலரையோ ஒரு மரத்தையோ தொடவிட மாட்டார்.

அவரில் நான் கண்ட இன்னுமொரு இலட்சணம். நேரந்தவறாமை. கூட்டமோ, வழிபாடோ, விழாக்களோ எதுவாக இருந்தாலும் நேரத்தில் கண்டிப்பு மிக்க அதிபர். தன்னைப் போல மற்றவர்களும் இதைக் கடைப்பிடிக்க வேண்டும் என விரும்புவார். பலருக்கு அவர் கண்டிப் புள்ளவராகக் காணப்பட்டாலும் என்னைப் பொறுத்தவரை பலருக்கு அவர் இனிய நண்பியாக, வழிகாட்டியாக, அன்புடன் அரவணைப்பவராக வாழ்ந்தி ருக்கிறார். உலக வாழ்வில் ஈடுபட்ட நான் கலங்கித்தவித்த பல வேளைகளில் எனது வீடு வரை வந்து என்னைத் தேற்றி உணவூட்டி, இறைவனை நாடவழிகாட்டி வழிநடத்தியதை மறக்கவே முடியாது.

நாம் இருவரும் சமகாலத்தில் அதிபர்களாக இருந்தோம். இனிமையான உறவு, பழகிய நாட்கள், தவறு செய்தால் நேருக்கு நேர் கண்டிப்பு, நல்லன செய்தால் மனந்திறந்து பாராட்டு இவைகளை மறக்கமுடியுமா? தனது கல்விப் பணியில் ஓய்வுபெறும் அவர் தனது துறவு வாழ்விலும் ஆன்மீகப் பணியிலும் சுடர்விட்டுப் பிரகாசிக்க என்றும் என் நல்லாசிகள். யாழ் திருக்குடும்ப கன்னியர் மடத்தின் பழைய மாணவியான எனது நன்றிக்கடனை இதனால் நிறைவு செய்து எனது இனிய சக அதிபர், உற்ற நண்பி, தூய்மைமிகு அருட்சகோதரியை பல்லாண்டு காலம் இறைவனுக்காக இறைவன் பணி செய்து வாழ வாழ்த்துகின்றேன்.

**திருமதி. பி. எவ். சின்னத்துரை**
*இளைப்பாறிய அதிபர்.*

# தலைமைத்துவத்தின் தலைமகள்

## அருட்சகோதரி யோலண்ட்

அன்பிற்கோர் இலக்கணமாய்,
ஆளுமை கொண்ட பெண்ணாய்,
ஆசானாய் அறிவூட்டும் மேதையாய்,
துறவற வாழ்வில்
தூய்மைக்கோர் இலக்கணமாய்,
திருக்குடும்ப கன்னியர் மடப்
பெருமைதனைத் திக்கெட்டும்
பரவச் செய்தாய்.
கண்டிப்பிலும் இருந்தது
கருணை உள்ளம் அதைக்
கண்டோம் உமது
கண்களிலும்
கபடமற்ற புன்னகையிலும்,
காட்டிக் கொடுத்தது அணிந்துள்ள
வெண்ணிற ஆடையின் தூய்மை,
களங்கம் அற்றவளென்று
கல்வி வலயமாயினும் சரி
கல்விக் கந்தோரானாலும் சரி
காலம் அறிந்து பணியாற்றினாய்
உன் பேச்சுக்கு மறுபேச்சுண்டோ
கண்டதுமில்லைக்
கேள்விப்பட்டதுமில்லையாம்

உன் கையசைவால்
கல்வித்தரம் உயர்ந்தது
கலைத்துறை வளர்ந்தது.
உன் பாசறையில் புடமிடப்பட்டோம்
கடல் கடந்து வாழும் போதும்
கல்வியிலும் சமூக வாழ்விலும்
இனங்கண்டோர் கேட்டனர்
திருக்குடும்பக் கன்னியர் மட
சிஸ்ரர்யோலண்ட் பிள்ளையா? என்று
கேட்டு உள்ளம் பூரிப்படைந்தோம்.
உம் பெயர் சொல்லிப்
பெருமை கொண்டோம் தாயே!
தலைநிமிர்ந்து வாழ்கின்றோம்.
உமது நிழலில் நின்று
அறிவு பெற்றதால்
எங்கு சென்றாலும் புகழோடும்
பெருமையோடும் வாழ்வோம்
இறைவன் துணை நிற்பார் உமக்கு:
ஏனெனில்
நீர் அவரின் அன்புக்குரிய கருவி

**ஜீன் மேரி ஜெயவீரன்**
*பழைய மாணவி*
*Ammerud Hellinga Norway.*

# எமது ஆசான்

*நிமிர்ந்த நடையும்*
*நேர்கொண்ட பார்வையும்*
*தெளிந்த ஞானச் செருக்கும்*

எமது அதிபர் அவர்களைக் காணுந்தோறும் எனது எண்ணத்துள் இவ்வரிகள் மீட்கப்படுவதுண்டு. இவற்றிற்கு இலக்கணம் எமது அதிபர் அவர்கள்.

நான் உயர்தரத்தில் கல்வி பயின்ற வேளையிலே எனக்கு ஆசானாக, ஆசிரியராக இணைந்த வேளையிலே அதிபராக எனக்கு வழிகாட்டியாக, பல அரிய பண்புகளை வளர்த்தெடுப்பதில் அக்கறை கொண்ட அன்னையாக, தவறுகளைச் சுட்டிக்காட்டி என்னை வழிப்படுத்துவதில் எனது எதிர்கால நலன் கருதும் தந்தையராக, பாடசாலையின் வளம்படுத்தல்கள் பற்றி எதிர்பார்ப்புடன் கோரிக்கைகள் விடுப்பதிலும் சேவையில் ஆத்மீக திருப்தி பற்றி அடிக்கடி எமக்கு நினைவூட்டுவதிலும் ஞானத்தாயாக, எனது இடர்பாடுகளில் எனக்கு கை கொடுத்த தெய்வமாக விளங்கும் அருட்சகோதரி யோலன்ட் மத்தியாஸ் அவர்களிடம் நான் கற்றுக் கொண்டவை பல.

எதிலும் நிறைவு, தூய்மை, வழுவின்மை என்பவற்றை எதிர்பார்த்து எங்களது செயற்பாடுகளை நோக்கும் தன்மை. எனவே எதிலும் உடனடியாக இவரது பார்வையில் படுவது குறைகளும், சீரின்மையும், தவறுகளும் ஆகும். பார்த்துப் பார்த்து நிறைவெய்திய திருப்தியுடன் நாம் செய்து முடித்திருந்த காரியங்களை அதிபர் ஒரு பார்வையிலேயே தவறுகளைச் சுட்டிக்காட்டி விடுவார். இது அவரது ஆழ்ந்த நிதானமான சூர்மையான நோக்கினை வெளிப்படுத்தி நிற்பதைக் கண்டு பிரமிப்படைந்ததுண்டு. இதுவே எனது செயற்பாடுகளை பல தடவைகள் சீர்தூக்கிப்பார்ப்பதற்கும் நிறைவான செயற்பாடுகளுக்காக என்னை முயற்சிக்கவும் தூண்டியதுடன் எனது சொந்த நிகழ்வுகளை செம்மையாக நிறைவேற்றவும் எனக்கு வழிகாட்டியுள்ளது.

*"கண் நின்று கண் அறச் சொல்லினும் சொல்லற்க*
*முன் இன்று பின் நோக்காச் சொல்"* - எனும் வள்ளுவன் வாக்குக்கு இணங்க எமது அதிபர் எதனையும் நேரடியாக கூறிவிடும் இயல்புடையவர். எமது பிழைகளை தவறுகளை உடனடியாக எமக்கு எடுத்துக் காட்டி எம்மைத் திருத்துவதற்கு அவர் மிகவும் கண்டிப்புடன் நடந்து கொள்வார். இதற்கு எவரும் விதிவிலக்கானது இல்லை. பின்னால் இவைகளை மறந்துவிடுவார். இந்தக் கண்டிப்புக்கள் பெற்ற தாய் தன் பிள்ளையை மேம்படுத்தும் நோக்கினைக் கொண்டதாய் கண்டு நான் மனம் நெகிழ்ந்து வருந்தியதுண்டு. திருந்தியதுண்டு.

'சலுகைகள் சோம்பலை உருவாக்கும்' நிர்வாக செயற்பாடுகளில் கடமைகளில் எவரும் எமது அதிபரிடம் சலுகைகளை எதிர்பார்த்தால் அது முயற்கொம்பு தான். கடமைகளை உரிய நேரத்தில் செய்ய வேண்டும் என்பதில் மிகவும் கடுமையான போக்குடையவர். இவருடைய இந்த

இறுக்கம் எந்த நேரமும் எம்மை உசார் நிலையில் வைத்திருப்பதுடன் கடமைகளில் கண்ணும் கருத்துமாக ஈடுபடுவதற்கும் கடமை தவறாது இருப்பதற்கும் ஏதுவாக அமைந்ததால் நான் வளம் பெற்றதுண்டு.

'கல்லுக்குள் ஈரம்' இதனை நான் எமது அதிபரிடம் பல தடவைகளில் கண்டிருக்கிறேன். அதிபர் மிகவும் கடுமையானவர். இறுக்கமானவர். செருக்கு மிக்கவர். என்று விமர்சனங்கள் நிறைய வரும்போதெல்லாம் நினைத்துக் கொள்வேன், இது அவரது ஈரமான இளகிய மனதுக்கு வலுக்கட்டாயமாகத் தான் இட்டுக்கொண்ட காப்புக்களோ? என்று. அந்தளவிற்கு அடுத்தவரின் துயரங்களில் இவர் நெகிழ்ந்து போன சம்பவங்கள் பல.

தனது பிழையைத் தானே ஒத்துக் கொள்ளல் என்பது இந்தக் காலத்தில் அருமையாகக் காணக்கூடிய உயர்ந்த ஒரு பண்பாகும். ஆனால் அதிபர் அவர்கள் 'எனது இந்தப் பிழையால் இப்படி நேர்ந்துவிட்டது' என பல தடவைகளில் தனது பிழையையும் சொல்லி வருந்தியமை கண்டு அதிபர் அவர்களது கண்டிப்பைப் பெறும் வேளைகளில் எனது பிழையை நான் உணரவும், ஏற்றுக் கொள்ளவும் கற்றுக்கொண்டதனால் அதிபரிடம் கண்டிப்பு பெறாத வேளைகளில் எம் மட்டில் அதிபரின் கவனம் இல்லாது போய்விட்டதோ என வருந்துவதுமுண்டு.

பாடசாலையின் கலைநிகழ்வுகள், புறவிதானச் செயற்பாடுகள் நூறுவீதம் திருப்திகரமாக நடைபெற வேண்டும் என்பதில் இவரது அக்கறை அதீதமானது. நேரம், ஒழுக்கம், புனிதம், எளிமை, அமைதி போன்றவைகளில் மிகவும் கடுமையான போக்குடையவராகையால் நிகழ்வுகள் ஒப்பேறும் வரை அனைவரும் உசார் நிலை தான். பார்த்துப்பார்த்துத் திருத்துவார். மண்டபத்தில் இடப்படும் கோலம் முதல், நிகழ்ச்சி ஒழுங்கு வரை கடைசி நிமிடத்தில் மாற்றியமைக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் பல. நிகழ்வுகள் சிறப்பாக அமைய வேண்டும் என்பதில் உள்ள ஆர்வமும் அக்கறையுமே இதற்கு காரணம். நிகழ்வுகளும் பலரதும் பாராட்டுக்கும் உள்ளாகும். நிகழ்வுகள் முடிவடைந்த பின் அதிபர் முகத்தில் பொங்கிச் சிதறும் சிரிப்பும் 'Programme எப்படி?' என சிறு பிள்ளை போல வினவி மகிழும் இந்தப் பாங்கும், நிகழ்வுகளில் எமக்கு வழங்கப்படும் பொறுப்புக்களை செம்மையுடன் செய்ய தூண்டியமை உண்மை.

கடந்த சில வருடங்களில் அதிபர் நிர்வாகம் சம்பந்தமாக நிறைந்த சவால்களுக்கு முகம் கொடுக்க நேரிட்ட வேளைகளில் மலைபோல இடர்வரினும் இடறாது நின்று சாதனை படைத்த உறுதியும் திடமான சிந்தனையும் இறை ஆசியுடன் கூடிய அருளும் கொண்ட அதிபரிடம் இருந்து நான் கற்றுக்கொண்ட அனைத்தும் என் மனச்சிறையில் நிறைந்திருக்கும்; என்னை வழிநடத்தும்; பாடசாலையின் தலைமைத்துவத்தில் இருந்து விலகிய போதும் அவரது எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றும் பணி தொடர்வதற்கு அவரது வழிநடத்தல் தொடர இறையாசீர் வேண்டுகின்றேன்.

**திருமதி. ஜே. சிறிஸ்கந்தராஜா**
*ஆசிரியை*
*யாழ் / திருக்குடும்ப கன்னியர் மடம்*

# நிபுணத்துவமான நிர்வாகததிறனின் சில சுவடுகள்...


உறுதியுடன் உரைத்தல்...


ஆன்மீகத்தில் ஆர்வம்...



கலைத்துவ நிறைவு...


தெரிவில் ஆழம்...



தனித்துவங்களை இனங்காணல்...


இடரிலும் உறுதி...


கல்வியில் நிமிர்வு...

# புதிய முன்னெடுப்புக்களில் அதிபர்



நூலகப் புது அமைவில்...



ஓவியக் கலையகப் புகுவிழாவில்...




கூட்டுறவு விற்பனை நிலைய ஆரம்பவிழாவில்...





இருகன்னியர் மடங்களையும் ஒன்றிணைத்த போது...

# அன்புள்ளம் கொண்ட அதிபர்

அருட்சகோதரி யோலன்ட் மத்தியாஸ் அவர்கள் இப்பாடசாலையில் அதிபராக இருந்த காலத்தில் எங்கள் மீது காட்டிய கரிசனையும் அன்பும் அக்கறையும் அளவிடற்கரியன. எல்லாவற்றிலும் மிகப்பெரியது அன்பு என்று கூறுவார்கள் பெரியவற்றுள் மிகப்பெரியது பேரன்பு. அத்தகைய பேரன்பே எமது அதிபரிடத்தில் மனித நேயமாக மிளிர்கின்றது. அதிபர் அவர்கள் ஆளுமை மிக்க, அதிகாரம் மிக்க கண்டிப்பு மிக்க நிர்வாகியாகத் தோற்றமளித்தாலும் அவரது அடிமனத்திலே அன்பு என்னும் ஊற்று உறைந்து கிடக்கின்றது. தன்னுடைய அறிவு, ஆற்றல், ஆளுமை, அணுகுமுறை என்பவற்றால் அவர் தனக்கென ஒரு தனியிடத்தை, தனிமதிப்பைப் பெற்றிருந்தார்.

அதிபர் அவருடைய வாழ்க்கை பிறருக்கு ஓர் எடுத்துக்காட்டு. இளமையிலே துறவற வாழ்வுக்காகத் தன்னை அர்ப்பணித்தவர். கடமையையே கண்ணாகக் கொண்டு வாழ்ந்தவர். கடமையைச் செய்து பலனைக் கண்டவரே தவிர பயனைக் கருதிக் கடமையைச் செய்தவர் அல்லர். அவரைத் தேடி வந்த் புகழ் அனைத்தும் அவருடைய தன்னலமற்ற சேவையின் விளைவு என்பது சாலவும் பொருந்தும்.

கல்வி சாரா ஊழியராகிய எங்கள் பதவிகளுக்குரிய கடமைக் கூறுகளை எமக்கு முறைப்படி வகுத்துக் கொடுத்தது மட்டுமல்ல அவ்வப் பணிகளில் எம்மை ஊக்குவித்து வழிகாட்டி நெறிப்படுத்தியவர். இன்று நாம் எமது பணிகளை சரியாகவும் திருத்தமாகவும் கால அட்டவணைக்கு ஏற்ப நிறைவேற்றுவதற்கு அதிபருடைய வழிகாட்டலும் முகாமைத்துவ நுட்பமுமே காரணமாகும். நாங்கள் எங்கள் கடமைகளை சில சந்தர்ப்பங்களில் செய்யத் தவறினால் அல்லது ஒழுங்காகச் செய்யாத நேரங்களில் அதிபர் தானே அப்பணிகளைச் செய்வார். அதிபருடைய இச்செயல் எங்கள் வேலைகளைச் சரியாகவும் திருத்தமாகவும் செய்வதற்கு ஒரு படிப்பினையாக அமைகின்றது. பாடசாலையைத் தூய்மையாகப் பேண வேண்டும் என்பதையும் பாடசாலை உடமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்பதையும் அடிக்கடி எம்மிடம் வலியுறுத்திக் கூறுவார். நாங்கள் எங்கள் பணிகளிலே விடுகின்ற தவறுகளையும் தாமதங்களையும் மனிதாபிமானத்துடன் அணுகுவார். தேவையான சந்தர்ப்பங்களிலே எங்கள் பிரச்சனைகளையும் செவிமடுத்து அதற்குரிய தீர்வுகளையும் வழங்குவார். சந்தர்ப்பத்திற்கு ஏற்ப சலுகைகளையும் வழங்கத் தயங்க மாட்டார். எந்த ஒரு செயலிலும் பக்கம் சாய்ந்து போகாமல் நல்லதை நல்லதென்றும் தீயதை ஒவ்வாதென்றும் சொல்லும் தன்மையும், துணிச்சலும் மிக்கவர் எம் அதிபர். நடுவு நிலமையில் இருந்து தவறுவதே இல்லை.

அதிபர் அவர்கள் கல்விசாரா ஊழியர் என்ற ஒரு தனித்த நிலையில் எம்மை நோக்காது அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள் என்ற அனைவரையும் ஒரு குடும்பமாகவே நோக்கினார். அதன் வழியே செயல்ப்பட்டார். எமது நடை உடை, பழக்க வழக்கங்கள் எல்லாம் எவ்வாறு அமைய வேண்டும் என்று ஒரு அன்னை போல எமக்கு ஆலோசனை வழங்குவார். நாங்கள் தெரிந்தோ தெரியாமலோ விடுகின்ற பிழைகள் எல்லாவற்றையும் சுட்டிக்காட்டி திருத்த முயல்வார். இத்தகைய உயரிய மனித நேயம் மிக்க எமது அதிபர் ஓய்வுபெற்றுச் செல்வது எம்மைப் பொறுத்தவரையில் ஈடுசெய்ய முடியாத பாரிய இழப்பாகும். அவருடைய ஓய்வுகாலம் நீடிய சுகத்துடன் சிறப்பாகவும், மகிழ்ச்சியாகவும் அமைய இறைவனை வேண்டுகின்றோம்.

**கல்விசாரா ஊழியர்கள்**
*யா/ திருக்குடும்ப கன்னியர் மடம்*

# கண்ணியம் மிக்க அதிபர்

ஒரு பாடசாலையின் அதிபர் என்பவர் அப்பாடசாலையை பயன்தரு பாடசாலையாக நிர்வகிக்கும் முக்கியமை யாளராக விளங்குபவர். இவ்வகையில் எமது பாடசாலையின் அதிபர் அருட்சகோதரி யோலண்ட் மத்தாயஸ் அவர்கள் சிறப்பாக விளங்கியுள்ளார். அவர் தனது சேவைக் காலத்தில் மாணவர் களினதும், ஆசிரியர் களினதும் நலன்களில் அக்கறை கொண்டவர். கட்மை, கண்ணியம், கட்டுப்பாடு என்பது இவரது தாரக மந்திரம். சிறந்த நிர்வாத்திறன் மிக்க அதிபர். இவரது நிர்வாகத்திறமை, ஆளுமையை கல்வி யியலாளர், கல்வி அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் சமூகம் எனப் பல வகையினர் சிறப்பாக பேசுவதனை நான் கேட்டிருக்கின்றேன். நல்ல பாடசாலையில் கற்பது நல்ல பாடசாலையில் கடமையாற்றுவது என்பது ஒருவனின் ஆளுமை வளர்ச்சியை மேலும் அதிகரிக்கச் செய்கின்றது. இவ்வகையில் நான் இவ்வாறான அதிபரின் கீழ் கடமையாற்றியதை எண்ணிப் பெருமை யடைகின்றேன். அதிபர் அவர்கள் கண்டிப்பு மிக்கவர். அதிபர் யோலன்ட் என்றால் எல்லோருக்குமே ஒரு பயம் கலந்த மரியாதை. தவறுகளை உடனுக்குடன் சுட்டிக்காட்டித் திருத்தி விடுவார் கடமைகளை உரிய நேரத்தில் முடிக்க வேண்டும் என்பது இவரின் நோக்கம். இதனால் ஆசிரியர்கள் மாணவர்களிடம் மிகுந்த கண்டிப்புடன் நடக்கும் சந்தர்ப்பங்களும் இவருக்கு நேரிட்டது. உண்மையில் அவர் அதிபர் என்ற போர்வையில் சில தண்டனைளை வழங்கும் போது பலர் அவர் மீது வெறுப்பு கொண்டிருந்தனர். ஆனால் அவை

எல்லாம் அப் பாடசாலையின் நலன் நோக்கியே ஆகும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் அவரது உள்மனதில் பல வேதனைகள் தோன்றி மறைவதை அவதானிக்க முடிந்தது. ஒரு சிறுவிடயமாக இருந்தாலும் அதனை சரியான வகையில் நடத்த வேண்டும் என்பது இவரின் விருப்பு. ஆசிரியர்களிலும் சரி, மாணவர்களிலும் சரி எந்த வேலையில் ஈடுபடும் போதும் அதிபரின் கண்டிப்பு அவர்களை நல்ல வழியில் செல்ல வழிவகுத்தது. இவ்வகையில் இவர் ஒரு நல் வழிகாட்டியாக விளங்கியவர். தனது நிர்வாக கட்டமைப்பில் கடமைகளை பலருக்கு பகிர்ந்தளித்து பலரும் நிர்வாக கடமைகளை அறிய வழிகாட்டியவர். எந்த ஒரு செயலையும் துருவி ஆராய்ந்து நல்ல வகையில் நிறைவேற்றும் செயல்திறன் மிக்க அதிபர் என்றால் மிகையாகாது.

இன்னொரு கோணத்தில் நோக்கும் போது சீரான நடை, தூய்மையான உடை, அமைதியான அலங்காரம், கருணை ஒளிகொண்ட முகம் என்பது இவரது தோற்றம். அன்புடன் பழக ஏங்கும் உள்ளம். ஆசிரியர் மாணவர் குழாத்துடன் அளாவளாவ வேண்டும் என விரும்பும் தன்மை என்பன இவரது உள்ளக் கிடக்கைகள். இவற்றை எல்லாம் அவரது அதிபர் என்ற போர்வை அமுக்கி விட்டது. அழகான அருட் சகோதரி அதிபர் என்ற போர்வையினால் சிலர் மத்தியில் தூரத்தில் இருப்பவர் போலவும் காணப்பட்டார்.

உண்மையில் எம் அதிபர் கல்லுக்குள் ஈரம் என்றே கூறலாம். தனது வாழ்வில் பாடசாலையை தன்னுள் ஓர் அங்கமாக கொண்டவர். இவரது காலத்தில் பாடசாலை பல வளர்ச்சிகளை கண்டது. பாடசாலை உயர தன்னை அர்ப்பணித்த அதிபர்கள் வரிசையில் இவரது பெயரும் அடங்கும். இவர் தனது சேவையில் இருந்து ஓய்வு பெற்றாலும் மாணவர்கள் உள்ளத்திலும், ஆசிரியர்கள் உள்ளத்திலும் மட்டுமல்ல பாடசாலையின் ஒவ்வொரு பொருள் மீதும் இவரது சுவடுகள் பதிந்திருக்கும். எனவே இப்பாடசாலையில் என்றும் நிலைத்திருப்பார் என்பதில் ஐயமில்லை. 'தோன்றிற் புகழுடன் தோன்றுக' என்ற வாக்குக்கு அமைய வாழ்ந்த அதிபர் அவர்கள் தனது ஓய்வு காலத்தினை நல்ல வகையில் கழிக்க இறைவன் அருளை வேண்டுகின்றேன்.

**திருமதி இ. யோகனந்தம்**
*ஆசிரியர்*
*யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம்*

# அன்னை நடந்த பாதையின் சுவடுகள்

ஈழமணித் திருநாட்டில் மங்காப் புகழ் படைத்த யாழ். குடாவில் வந்தாரை வரவேற்கும் வடமராட்சிப் பிரதேசத்தில் கல்விச் சிறப்பாளர் பலரும், பார்புகழ் கலைஞர் பலரும், பனை வளமும், நெல் வயலும் பொலிந்து விளங்கும், மானத்தமிழர் பலர் உதித்த வீரம் விளை மண்ணாம் கரவெட்டி எனும் சிறப்புமிக்க ஊரிலே சீரும் சிறப்பும் பெற்று வாழ்ந்த மத்தாயஸ் - றோசம்மா தம்பதியினரின் இரண்டாவது குழந்தையாக 31. 08. 1944ல் அவதரித்தார் செல்வராணி எனும் நல்லாள்.

இரண்டு புத்திரர் களையும் நான்கு புத்திரிக ளையும் கொண்ட இவரது குடும்பத்திலே செல்வராணி பல வழிகளில் தனது பெற்றோரின் உள்ளம் கவர்ந்தவராக விளங் கினார். தனது ஆரம்பக் கல்வியை கரவெட்டி திரு இருதயக் கல்லூரியில் முடித்தார். சிறு வயது முதலே இவரிடம் காணப்பட்ட ஆழமான அறிவு, சுறுசுறுப்பு, உற்சாகம், புத்திக் கூர்மை போன்றவைகளை அவதானித்த இவரது தந்தையார் இவரை மேலே கற்பதற்கு தெகிவளை திருக்குடும்ப கன்னியர் மடத்தில் சேர்த்துவிட்டார்.

கொழும்பில் இவர் கல்விகற்ற வேளையில் இவரது பல ஆற்றல்கள் சிறப்பாக வெளிப்பட்டது. இயல்பாகவே அமைந்த ஆளுமை, இயல்பூக்கம், ஆர்வம் காரணமாக இவரிடம் ஒப்படைக்கப்படும் பணிகள் சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் நிறைவேற்றப் பட்டன. உதாரணமாக இவரிடம் ஒப்படைக் கப்பட்ட விற்பனைச் சீட்டுக்கள் ஒரு நாளிலேயே விற்றுப்பணம் திரட்டிக் கொடுத்த இவரது செயல்வீரம் அதீதமானது. இன்னும் அழகுணர்ச்சி மிகுந்த இவர் கொழும்பில் கல்வி கற்ற வேளையிலே புதிய ரக ஆடைகள் வெளிவரும் போதெல்லாம் முதலில் தான் அதை அணியவேண்டும் என்பதில் தீவிரமாக இருந்தார். 1958ல் ஏற்பட்ட இனக்கலவரம் காரணமாக இவர் 10ம் தரக்கல்வியைத் தொடர யாழ்ப்பாணம் இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் அனுமதிக்கப்பட்டார்.

இவர் இளவாலையில் கல்வியை மேற்கொண்ட வேளையில் இவரது பெரியதாயார் அருட்சகோதரி லெற்றீசியா அங்கு அதிபராக இருந்தார். இவரது நெறிப்படுத்தலுடன் விடுதியில் வாழ்ந்த ஆரம்பகாலப்பகுதிகளில் இவரது அன்புமடல் வீடுதேடிப் பறந்துவரும். அதில் விடுதிவாழ்வின் கஷ்டநஸ்டங்கள் கூறப்பட்டு தன்னை அழைத்துச் செல்லும்படி கோரப்பட்டிருக்கும். இவர் தந்தையின் செல்ல மகள். ஆனாலும் தந்தை இவரது கல்வியே முக்கியம் எனக்காரணம் காட்டி அவரை ஆறுதற்படுத்திவிடுவார்.

க.பொ.த. சாதாரண தரத்தேர்வு எழுதி முடித்த அந்தவேளை வந்தது. தேவ அழைத்தலும் வந்தது. முன்னர் முரண்டு கொண்டிருந்த பல விடயங்கள் இவருக்குப் பிடித்துப் போயின. விடுதி வாழ்க்கையின் இனிமை பற்றியும், உணவின் சுவையையும் பற்றி மகிழ்வுடன் மகள் எழுதும் கடிதம் கண்டு பெற்றோர் மகிழ்ந்து போயினர். ஆனால் அவர் தனது துறவற விருப்பமாகிய உள்ளக்கிடக்கையை வெளியிட்ட போது அதிர்ந்து போயினர். தமது மகளின் இந்த முடிவை ஏற்றுக்கொள்ள அவர்கள் மனம் ஒப்பவில்லை. அழுது பார்த்தனர். வருந்திக் கேட்டுப் பார்த்தனர். மடுத்திருப்பதி வரையும் அழைத்துச் சென்று மனதை மாற்றலாமா என அவர்கள் மேற்கொண்ட அத்தனை முயற்சிகளும் பயனற்றுப் போக அவர் துறவற வாழ்வில் தன்னை இணைத்துக் கொண்டார்.

தனது 16 வயதில் இளம் அருட்சகோதரியாக திருநிலைப்படுத்தப் பட்டு யோலன்ட் எனும் பெயருடன் இவர் இறைபணியாளரானார். இவரது உயர் கல்வி பற்றி இவரது தந்தையாரும், அருட்தாயார் யூலாலி அவர்களும் (Mother Julaly) வேண்டிக்கொண்டதற்கிணங்கி க.பொ.த. உயர்கல்வியை யாழ். தி.கு.க. மடத்தில் மேற்கொண்டார்.

திருக்குடும்ப கன்னியர் சபையினரால் இவருக்கு ஆசிரியப் பணிக்கான அழைப்பு விடுக்கப்பட்டதும் மகிழ்வுடன் அதனை ஏற்று சில மாதங்கள் பத்திரிசியார் கல்லூரியிலும், யாழ் திருக்குடும்ப கன்னியர் மடத்திலும் ஆசிரியப் பணிபுரிந்தார். அக்காலத்தே பல்கலைக்கழக அனுமதி கிடைக்கப் பெற்று 1966 - 1969 காலப்பகுதியில் கொழும்பு, பேராதனைப் பல்கலைக் கழகங்களில் தனது கலைமாணிப்பட்டப் படிப்பை மேற்கொண்டார்.

1970 இல் ஆசிரிய நியமனம் கிடைக்கப்பெற்று பணியை மகிழ்வுடன் தொடங்கினார். 1970 - 1976 வரை யாழ் திருக்குடும்ப கன்னியர் மடத்தில் ஆசிரியராகக் கல்வி போதித்தார். இக்காலப் பகுதிகளில் அயர்லாந்து நாட்டுக் கன்னியர்களின் முன்மாதிரிகையான வாழ்வியல், நிர்வாகம் போன்ற யாவற்றையும் கண்டுணரும் வாய்ப்புக் கிடைத்தது.

1977இல் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா படிப்பை மேற்கொண்டார். அதன் பின் 1978 முதல் மன்னார் மாவட்டத்திலுள்ள பண்டிவிரிச்சான் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும் 1982 முதல் புனித சேவியர் கல்லூரியிலும் கற்பித்தல் பணியைத் தொடர்ந்தார். 1983 முதல் மீண்டும் யாழ் திருக்குடும்ப கன்னியர் மடத்தில் பணியேற்றார். 1984 முதல் 1988 வரை அருட்சகோதரி அன்ரனியோசப்பின் அதிபராக கடமையாற்றும் போது உபஅதிபராகக் கடமையாற்றினார். 1988 முதல் 2004 ஆகஸ்ட் 30 வரை அதிபராகப் பணியாற்றினார்.

இவர் அதிபராகக் கடமையேற்ற காலப்பகுதியில் யுத்த அனர்த்தங்கள், இடப்பெயர்வுகள் போன்ற பல இடர்ப்பாடுகள் சூழ்ந்திருந்தன. இவற்றின் நடுவே மிகச்சிறப்பான நிர்வாகியாக நின்று பாடசாலையின் வளர்ச்சியில் அளப்பரிய பணியாற்றினார். இப்பணிக்காலத்தில் தன் பணிக்குரிய பட்டப்பின் கல்வியையும் தொடர்ந்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வியலில் முதுமாணிப் பட்டத்தைப் பெற்றதுடன் 1990இல் 'தேசிய கல்வி நிறுவனம்' நடத்திய ஒரு வருட முகாமைத்துவச் செயலமர்விலும் கலந்து கொண்டார். 2000ம் ஆண்டில் இந்தியாவில் நீப்பா என்னுமிடத்தில் நடைபெற்ற நிர்வாக முகாமைத்துவக் கற்கை நெறியிலும் கலந்துகொண்டார். அவ்வாறே அயர் லாந்து நாட்டில் 1986 - 87 காலப்பகுதியில் ஆன்மீகச் சிறப்புப் பயிற்சியைப் பெற்றதுடன் அயர்லாந்துக் கன்னியர்களைச் சந்தித்து அவர்களுடன் உறவாடி திருக்குடும்ப

கன்னியர் சபையின் பூர்வீகங்களைக் கண்டு தெளிந்தார். அத்துடன் உரோமாபுரியில் தகவல் தொழில்நுட்பம் பற்றியதான சிறப்புக் கருத்தமர்விலும் கலந்து கொண்டார்.

இவ்வாறு தான் பெற்ற கல்வியையும் தான் வரித்துக்கொண்ட துறவற வாழ்வியலையும், கல்விச் சேவைக்கென அர்ப்பணித்து யாழ்ப்பா ணத்தில் பெண்களுக்கான கல்வித் தரத்தினை உயர்த்துவதற்கு அரும் பாடுபட்டு உழைத்தார். இவரது எண்ணத்தில் உருப்பெற்ற பல திட்டங்கள் இன்னும் நிறைவுறாத நிலையில் ஓய்வுக்காலம் நெருங்கியமை எமது துரதிஷ்டமே. இவர் தம் அர்ப்பணமிக்க பணி வாழ்வு எமக்கு எடுத்துக்காட்டாக அமைந்து எம் வழியைச் செப்பனிடும் என்பது உண்மையாகும்.

**திருமதி. ம. நி. தெய்வேந்திரா.**
*(ஆசிரியை)*
*யா/ தி.கு.க. மடம்.*

# அன்பின் உருவே



*நிமிர்ந்த நடையும்*
*நேர்கொண்ட பார்வையும்*
*இதயத்திலே கனிவும் கொண்ட*
*எங்கள் அன்புத் தாயே*
*சிறுமிகளாகிய எங்களை*
*அன்புடன் அரவணைத்து*
*இனிய கதைகளுடன்*
*ஆங்கிலம் கற்பித்த ஆசிரியையே*
*நீங்கள் எங்களை விட்டு*
*பிரியப் போகிறீர்கள் என்றவுடனே*
*எங்கள் கண்கள் மட்டுமல்ல*
*இதயமும் சேர்ந்து கண்ணீர் வடிக்கிறது.*
*உங்கள் ஆசீர் என்றும் வேண்டி*
*நினைவில் நிதமும் வாழ்வோம்.*

*என்றும் உங்கள் மாணவி*
**ஏஞ்சலின் விதுஷா கனகரெட்ணம்**
*தரம் 5 A*



# நேர்காணல்

**திருக்குடும்ப கன்னியர் சபைத்துறவியாக வாழ்வைப்பணிக்கென அர்ப்பணித்து கடந்த 33 வருடங்கள் ஆசிரியராக, உபஅதிபராக, அதிபராக பல்வேறு தளங்களில் பணியாற்றி ஓய்வுபெறும் அருட்சகோதரி யோலன்ட் மத்தாயஸ் அவர்களின் அனுபவக் கருத்துக்களை அறியும் நோக்கோடு இந்நேர்காணல் பெறப்பட்டு இம்மலரில் இணைக்கப்பட்டுள்ளது.**

★ **தாங்கள் துறவற வாழ்வின் தெரிதல் எப்படி இருந்ததென்று கூறமுடியுமா?**

என்னுடைய பெற்றோர் இறைபக்தியும் விசுவாசமும் கொண்டவர்களாக இருந்தனர். அவர்கள் காட்டிய வாழ்வொழுக்கம் சிறிய வயதிலேயே என்னுள் இறைபக்தியை வளர்த்தது. பின்னர் நான் கல்வி கற்றதெல்லாம் திருக்குடும்ப கன்னியர் மடங்களிலே தான். அவர்கள் தான் எனக்கு முன்மாதிரிகையாக இருந்தார்கள். அவர்களின் வாழ்க்கை முறை என்னுள் ஒரு தூண்டுதலை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அதேவேளை எனது பெரிய தாயாராகிய அருட்சகோதரி லெற்றீசியா அவர்களின் வியக்கத்தக்க வாழ்வு, அவரிற்கு இருந்த சமூக அர்ப்பணிப்பு மனநிலை அனைத்தும் இணைந்து இத்துறவற வாழ்வியலுக்குள் என்னைக் கொண்டுவந்தது எனலாம்.

★ **நீங்கள் ஆசிரியத் தொழிலைத் தேர்ந்தெடுப்பதற்குத் தூண்டியாக, துணையாக இருந்த விடயங்கள் பற்றி...?**

கல்விப் பணியை நானாகத் தேர்ந்தெடுக்கவில்லை... துறவறத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட நாம்; நமக்குத்தரப்படும் பணியை சிரம்மேற்கொண்டு செய்வதையே எமது கடமையாகக் கொள்பவர்கள். எனவேதான் ஆசிரியப்பணி எனது திருக்குடும்ப சபையினால் எனக்குத் தரப்பட்ட பணி; அதனை நான் மிகுந்த மகிழ்ச்சியோடும் மனநிறைவோடும் ஏற்றுக்கொண்டே இதுவரை காலமும் செயற்பட்டுவந்தேன். அலுவலகங்களில் எழுது கருவிகள், மேசை, கதிரை என சடப்பொருட்களுடன் பணியாற்றுவதைவிட இறைவனின் சாயலான மனித மாண்புடைய பிள்ளைச் செல்வங்களை உருவாக்கும் பணி உன்னதமானது. இப்பணியை செய்யக்கிடைத்தமையையிட்டு நிறைவடைகின்றேன்.



★ **நீங்கள் பெற்ற கல்விப்புலமை, கற்பித்தல், நிர்வாகப் பணிகளுக்கு எவ்வாறு துணையாக இருந்தது என்று கூற முடியுமா?**

என்னுடைய வினைத்திறன்களில் நான் பெற்ற கல்வி அடைவு அதிகமான பங்காற்றி இருக்கின்றது என்பதை நான் அறிவேன். நான் பெற்ற கல்வி அறிவு, எனக்கு முன் பணியாற்றிய அயர்லாந்து சகோதரிகளின் முன்மாதிரிகையான வாழ்வனுபவம், என்றும் தீராத ஆவலுடன் நான் மேற்கொள்ளும் வாசிப்புப்பழக்கம்... இவை அனைத்தும் என்னில் ஊறி என்னைச் செயற்பட வைத்திருக்கின்றதென்பது மறுக்க முடியாத உண்மை. என்னுடைய கற்பித்தல் பணிகளிலும் சரி, நிர்வாகப்பணிகளிலும் சரி அதனை நான் நன்குணர்ந்துள்ளேன். உதாரணமாக ஒரு சில விடயங்களைக் குறிப்பிடலாமென்று நினைக்கின்றேன். 1990இல் தேசிய கல்வி நிறுவகம் நடத்திய நிர்வாக முகாமைத்துவ, ஒரு வருட டிப்ளோமா எனக்குப்பலவகைகளிலும் உதவியது. நேரமுகாமை, நன்கு திட்டமிட்டு நிகழ்வுகளை நடத்துவது; ஒத்திகைகள் மூலம் எந்த நிகழ்வையும் முழுமைப்படுத்துவது; நிகழ்வுகளின் முடிவில் அவை பற்றி மீளாய்வு, மதிப்பீடு செய்தல் போன்றதான பல திருப்திகரமான நிர்வாகத்துக்குரிய நுட்பங்களை மேற்கொள்ள காரணமாக இருந்தது. அத்துடன் கல்வித்திணைக்களம் நடாத்திய அதிபர்களுக்கான பல நிர்வாக கருத்தரங்குகளுக்குச் சென்று முகாமைத்துவம் பற்றிய கருத்துக்களை வழங்குவதற்கும் அது காரணமாக இருந்தது எனலாம்... அத்துடன் எமது பாடசாலையில் ஆரம்பப் பிரிவு ஆசிரியர்கள் பற்றாக்குறையாக இருந்த காலப்பகுதியில் சில பழைய மாணவர்களை தேர்ந்து அவர்களுக்கு சிறப்பான முறையில் பயிற்சி வழங்கி தொண்டர் ஆசிரியர்களாக நியமித்து ஆரம்ப ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தேன். கல்வித் திணைக்கள அனுசரணையுடன் முன்னாள் கோட்டக்கல்விப் பணிப்பாளராகிய திரு. இ. சிவானந்தனும், அவருடைய உதவியாளர்களும் வளஆளணியினராக இப்பயிற்சிக்கு உதவியதை இவ்விடத்தில் நன்றியோடு நினைவுகூருகிறேன். இவ்வாறு பல நெருக்கீடான வேளைகளில் பிரச்சனைகளை எதிர்கொள்ள முடிந்தது. அவ்வாறு தான் நான் பெற்ற ஆன்மீகம் சார்ந்த பயிற்சியே பாடசாலையில் தியானப் பயிற்சி, தலைமைத்துவப் பயிற்சி, உளவியல் கருத்தரங்குகள் போன்றதான பல நெறிகளை அறிமுகப்படுத்தி பிள்ளைகளை ஊக்குவிக்க காரணமாக இருந்தது. இப்படி பலவற்றை உதாரணமாகக் கூறலாம். கற்றகல்வி காலத்தால் வீண்போகாதென்ற உண்மையை எனது வாழ்வு அனுபவத்தில் நான் கண்டுள்ளேன்.

★ **யாழ் மாவட்டத்தில் திருக்குடும்ப கன்னியர்மடம் என்ற கல்விப் புலத்தின் முக்கியத்துவம் தனித்துவம் பற்றிக் கூறமுடியுமா?**

யாழ் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் திருக்குடும்ப கன்னியர் சபையினர் மதம் பரப்பும் நோக்குடன் வந்தவர்கள் அல்ல. அன்று யாழ்ப்பாணத்திலிருந்த பெற்றோர் தங்கள் பெண் பிள்ளைகள், அக்காலத்தின் முக்கிய தேவையாக இருந்த ஆங்கிலப் புலமையையும் ஒழுக்கம், பண்பு போன்றவற்றைப் பெற்று சிறப்பாக விளங்க வேண்டுமென்று அயர்லாந்து நாட்டுக் கன்னியரை திருச்சபைத் தலைவர்கள் ஊடாக வேண்டிநின்றனர். அந்த அழைப்பிற்கிணங்கவே திருக்குடும்ப சபைக்கன்னியர் யாழ் மண்ணில் காலடி பதித்தனர். அவர்கள் இங்கு ஏற்படுத்திய கல்விப்பாரம்பரியம் என்பது தனித்துவமானது. அது



வெறுமனே அறிவை மட்டும் வழங்கும் கல்விப் புலத்துடன் மட்டுப்பட்டது அல்ல. "இறைவனுக்கு மகிமை" என்ற உயரிய தன்னலம் கருதாத கொள்கையுடனும் அன்பு, மதிப்பு, எளிமை, தாழ்மை, தியாகம், கடினஉழைப்பு, இறைபக்தி, கீழ்ப்படிவு போன்றதான திருக்குடும்பத்துக்குரிய உயரிய ஒழுக்கங்களுடன் சமூகத்துக்கு உகந்த சிறந்த பெண்களை உருவாக்கும் இலக்குடன் இயங்குவது. திருக்குடும்ப சபை அயர்லாந்து நாட்டுக் கன்னியர்களின் சீரிய முன்மாதிரிகையுடன் கூடிய தனித்துவமான பாரம்பரிய கட்டமைப்பை யாழ் மண்ணில் ஊன்றி உள்ளது. கடந்த காலத்தின் வரலாற்றுச் சுவடுகளும் இங்கு கற்று வெளியேறிய பெண்களின் வாழ்வியல் ஒழுக்கமும் இப்பாரம்பரியத்தின் அடையாளங்களாக நிற்கின்றன.

**★ திருக்குடும்ப கன்னியர் மடத்தில் நீங்கள் கடமையாற்றிய கடந்த 30 வருட காலத்தில் உங்களால் சாதிக்க முடிந்தவைகள் பற்றி...?**

சாதித்தவைகளாக பல இருக்கலாம். ஆனால் அவை தனியே என்னால் செய்யப்பட்டவை என்று கூறமுடியாது. முழுப்பாடசாலைச் சமூகமும் இணைந்து நின்றுதான் அந்தச் சாதனைகளைப் படைத்தது என்பதே பொருத்தமானது. அவை எல்லாவற்றையும் நினைவில் நிறுத்தி இப்போது கூற முடியாது. ஒரு சிலவற்றை மட்டும் குறிப்பிடலாம் என்று நினைக்கின்றேன்... இந்த மண்ணில் திருக்குடும்ப கன்னியர் சபையினர் என்ன நோக்கத்துக்காக இந்த கல்விக்கூடத்தை அமைத்தார்களோ அந்த நோக்கத்தை என்னுடைய காலத்திலும் இயலுமானவரை நான் மனதில் இருத்தி சந்ததி கடத்துகை செய்துள்ளேன் என்று நினைக்கிறேன். அது மட்டுமன்றி ஒரு தனியார் பாடசாலையை ஒத்தவகையில் இயங்கத்தக்க ஒரு பலமான குழுமத்தை ஏற்படுத்தியிருக்கிறோம். அதாவது பழைய மாணவர்களின் சக்தியை ஒன்றிணைத்து பெற்றோர்கள், நலன்விரும்பிகள் போன்றோரின் உறவை வலுவுடையதாக்கி அவர்களுக்கூடாக ஒரு பலமான கல்விக்குரிய பின்னணிப் புலத்தை உருவாக்கி இருக்கிறோம் எனலாம். அதன் விளைவை தற்போது எமது பாடசாலை அனுபவித்துக்கொண்டிருக்கிறது... இவை தவிர நாட்டின் யுத்தச்சூழல், இடப்பெயர்வுகள், கலாசாரச் சீரழிவுகள் போன்ற பல்வேறு பிரச்சனைகளின் காலகட்டங்களில் எல்லாம் கல்வியின் உயரிய நோக்கு சிதைவடையாமல் என்னால் இயன்ற அளவில் செயல்பட்டு வெற்றியடைந்திருக்கின்றேன். இதற்கு உதாரணமாக ஒரு சிறிய நிகழ்வைக் குறிப்பிடலாம். 95 இடப்பெயர்வின் பின் பாடசாலைகள் மீள இயங்குவதற்கு சிரமப்பட்டவேளைகளில் இப்பாடசாலையை மிகத்துரிதமாக மீள் கட்டமைப்பு செய்து பிரமாண்டமான ஒரு கல்விக்கண்காட்சியை ஏற்பாடு செய்து யாழ்ப்பாண கல்விச் சமூகத்தில் கல்விக்குரிய ஒரு எழுச்சியை ஏற்படுத்தியிருந்தோம்... இவைகள் மட்டுமன்றி பாடசாலை கலாசாரத்திலும் பல புதிய நடைமுறைகளை காலத்துக்கு ஏற்ப உட்புகுத்தி பாடசாலை புறச்செயற்பாடுகளில் கணிசமான முன்னேற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறோம் எனலாம். பௌதீக வளங்களைப் பெற்றுக்கொள்வதில் அரசாங்க ஒதுக்கீடுகள் கிடைக்காதபோதிலும் பல பிரயத்தனங்களை



மேற்கொண்டு வளங்களை நிறைவாக்கிக் கொண்டோம். உதாரணமாக, புதிய நூலகக்கட்டுமானம், கணணிக்கூடமமைப்பு, புதிய தளபாடங்கள் கொள்வனவு போன்ற பலவற்றைக் குறிப்பிடலாம். இவை எல்லாவற்றிற்கும் மேலாக இங்கு கல்வி பயிலவருகின்ற எல்லா நிலைகளில் இருக்கும் பிள்ளைகளையும் சமமாக மதித்து ஆளுமைமிக்கவர்களாகவும் சிறந்த மதிப்பீடுகளைக் கொண்டவர்களாகவும் வெளியேறுவதற்கு எம்மால் இயன்றவரையிலும் உழைத்திருக்கின்றோம் எனலாம்.

**★ தங்களின் நிர்வாக காலத்தில் திட்டமிட்டும் செயலாற்ற முடியாது போன விடயங்கள் பற்றி...?**

நான் நீண்ட காலம் இப்பாடசாலையிலேயே கடமையாற்றிய காரணத்தினால் பல விடயங்களைத் திட்டமிட்டாலும் எல்லாவற்றையும் செயற்படுத்த முடிந்திருக்கவில்லை. அதற்கு யுத்தசூழல், இடப்பெயர்வுகள் போன்ற பல விடயங்கள் இடைஞ்சலாக இருந்திருக்கின்றன எனலாம். ஒரு சில விடயங்களைக் குறிப்பிடலாம் என்று நினைக்கிறேன்... பாடசாலைக்கென விளையாட்டு மைதானம் ஒன்றை அமைப்பதற்கு தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டு முடியாது போய்விட்டது. அவ்வாறே நவீன தொழில்நுட்பங்கள் உள்ளடங்கிய கனிஷ்ட பிரிவு மாணவர்களுக்கும் சிரேஷ்ட பிரிவு மாணவர்களுக்குமான இரு விஞ்ஞான ஆய்வுகூடங்களை அமைக்க வேண்டுமென்று எண்ணி இருந்தேன். அதுபோலவே அரங்குடன் கூடிய பெரிய மண்டபம் ஒன்றை அமைப்பதற்கு திட்டம் தீட்டியிருந்தேன். அவையும் கைகூடவில்லை. அது போலவே பெற்றோர், நலன்விரும்பிகள் பலரின் விருப்பத்துக்கிணங்க இரு பாடசாலைகளையும் ஒன்றிணைத்து ஒரு தேசிய பாடசாலையாக தரம் உயர்த்தும் பணியினை மேற்கொண்டிருந்தேன். அதுவும் கைகூடவில்லை. சிலவேளைகளில் எதிர்காலத்தில் அவை சாத்தியப்படலாம்.

**★ பல புதிய விடயங்களை பாடசாலையில் உங்களுடைய நிர்வாகக் காலத்தில் அறிமுகப்படுத்தியுள்ளீர்கள். அந்த முயற்சிகளில் நீங்கள் எதிர்கொண்ட சிக்கல்கள், சவால்கள், பாராட்டுக்கள் பற்றி கூறமுடியுமா?**

பல விடயங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்வடிவம் பெற்றன. எல்லாமே உடனடியாக பாராட்டுப்பெற்றன என்றோ அல்லது எதிர்ப்பை பெற்றன என்றோ கூறமுடியாது. பல விடயங்கள் செயல்சாத்தியம் பெற்றபோது பலரும் பாராட்டினார்கள். உதாரணமாக எமக்கு விளையாட்டு மைதானம் இல்லை. அதனால் எந்த வகையிலும் எமது பிள்ளைகளின் திறமைகள் மழுங்கடிக்கப்படக்கூடாது என்று கருதியே பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் ஒவ்வொரு வருடமும் போட்டிகளை நடாத்த திட்டமிட்டோம். சிலர் அதனை சாதகமாக நோக்காது விடினும் அங்கு மிகச்சிறப்பான முறையில் போட்டிகள் நடந்தேறியதைக் கண்டு பின்னர் பாராட்டினார்கள். அவ்வாறே இரண்டு பாடசாலைகளையும் இணைத்தபோது சிலர் விமர்சித்தார்கள். ஆனால் இன்று அதன் வளர்ந்துவரும் சிறப்பை நிச்சயம் அனைவரும்



பாராட்டுவார்கள். ஆனால் எனக்கொரு நம்பிக்கை உண்டு. நாங்கள் நல்லதையே செய்துகொண்டு செல்லும் போது இறைவனின் அளப்பரிய ஆசீர் எமக்குத் துணையாக இருக்கும். எனது பாடசாலை வாழ்வில் எத்தனையோ சந்தர்ப்பங்களில் நாம் பெரிய துன்பங்களில் இருந்தெல்லாம் மீட்கப்பட்டுள்ளோம். உதாரணமாக அண்மையில் கூட யாரோ வீசி எறிந்த கைக்குண்டு எமது பிள்ளைகளுக்கும் பாடசாலைக்கும் எந்தத் தீங்கும் விளைவிக்காது காத்துக்கிடந்தது. எனவே இறைவனின் ஆசீரை நம்பியே பல செயற்பாடுகளை முன்னெடுத்துச்சென்றேன்.

**★ தங்களுடைய காலத்தில் இரண்டாக இருந்த இரண்டு பாடசாலைகள் ஒன்றிணைக்கப்பட்டன. இவ் இணைப்புக்கான தேவைகள் இன்று இணைக்கப்பட்டதன் பின்னான விளைவுகள் பற்றி விளக்க முடியுமா?**

திருக்குடும்ப கன்னியர் சபையினால் நிர்வகிக்கப்பட்ட இரண்டு பாடசாலைகளும் அன்று தோற்றம் பெற்றதற்கு பல விடயங்கள் காரணமாக இருந்தன. ஆங்கில மொழிமூல கல்வியை மையப்படுத்தி ஒரு பாடசாலையும் தமிழ் மொழிமூல பின்தங்கிய மாணவர்களின் நன்மை கருதி மற்றொரு பாடசாலையுமாக ஒரு காலகட்டத்தில் அமைக்கப்பட்டன. ஆனால் தாய்மொழிக் கல்விமுறை அறிமுகப்படுத்தப்பட்டதன் பின் ஒரே இலக்குடைய இரு பாடசாலைகள் அருகருகே ஏன் இயங்க வேண்டும் என்ற கேள்வி எழுந்தது. இது சமூக ஏற்றத்தாழ்வுகளை வளர்ப்பதாகவும் மாணவர்கள் மத்தியிலே முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதாகவும் இருக்கின்றது என விமர்சிக்கவும் பட்டது. அத்துடன் 6 வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் சர்வதேச திருக்குடும்ப கன்னியர் சபை மாநாட்டில் "மனித மாண்பினை மதித்தல்" என்ற குறிக்கோள் முன்வைக்கப்பட்டு செயல்முனைப்பு பெற்றதினாலும் வேறுபாடுகளை வளர்ப்பதை விரும்பாது இவ்விரு பாடசாலைகளுக்கிடையிலான பாகுபாடுகளைக் களையும் நோக்குடன் பெற்றோர், நலன்விரும்பிகள், திருச்சபை, எமது சபை அனைத்தும் இணைந்த ஆலோசனைகளின் பேரில் இவ் இரண்டு பாடசாலைகளையும் இணைத்தோம்.

இவை இணைக்கப்பட்டதன் பின் பல்வேறு சிரமங்கள் எதிர்கொள்ளப்பட்டாலும் இதன் பலாபலன்களை நீண்ட காலத்தின் பின்னரே அனுபவிக்கக் கூடியதாக இருக்கும். இந்த 2 வருடகாலங்களுக்குள் பாடசாலையின் பலம் அதிகரித்திருப்பதுடன் மாணவர் வரவு, ஒழுக்கம், பெற்றோர் கல்வியில் காட்டும் ஆர்வம், இடைவிலகல் தன்மை குறைதல் போன்ற பல ஆரோக்கியமான விளைவுகளை நாங்கள் காணக்கூடியதாக உள்ளது.

**★ பாடசாலைக் காலத்தில் மறக்க முடியாத வகையில் உங்கள் மனதிலே நிறைந்து நிற்கின்ற விடயங்கள் அல்லது நபர்கள் பற்றி குறிப்பிட முடியுமா?**

பல விடயங்கள் பசுமையாக மனதிலே நிற்கின்றன. அவை எல்லாவற்றையும் குறிப்பிட முடியாது. குறிப்பிட்டுக் கூறுவதானால் 140வது ஆண்டு நிறைவு நிகழ்வை குறிப்பிடலாம். அந்நிகழ்வு எமது பாடசாலையின் வளர்ச்சியை ஒரு வகையில் குறிப்பிட்டு நிற்பதாகவும் எமது பாடசாலைக்கு சமூகம் அளித்த அங்கீகாரம், ஒத்துழைப்பு போன்ற பலவற்றையும் அறியக்கூடிய ஒரு நிகழ்வாகவும் அமைந்திருந்தது... மறக்க முடியாத நபர்களாக பலரைக்



குறிப்பிட வேண்டும். குறிப்பாக இப்பாடசாலையின் கல்வியை வளர்த்துச் சென்ற அயர்லாந்து நாட்டு கன்னியர்களான யோசப்பின், கிளேயா, விசிற்றேசன் போன்றவர்களின் முன்மாதிரிகையான வாழ்வியல் என்றும் மறக்க முடியாது. அவர்கள் பிரியாவிடை பெற்றுச் செல்லும் போது எமக்கு ஒரு சிறந்த பாரம்பரியத்தை காட்டிச் சென்றனர். அதைக்காக்க வேண்டும் என்ற உணர்வு எமக்கு இன்றுவரை காணப்படுகிறது.

எனது நிர்வாக காலத்தில் பலர் என் பணிகளை இலகுவாக்கி இருந்தார்கள். குறிப்பாக உப அதிபராக செயற்பட்ட திருமதி ஜெயப்பிரகாசம் அவர்கள் எனது பணியின் சுமையை பெருமளவில் குறைத்தார். அவர் இங்கேயே கல்வி கற்று ஆசிரியராக கல்வி கற்பித்து வந்த காரணத்தால் இந்தப் பாரம்பரியத்தை நன்கு விளங்கிச் செயல்ப்பட்டார். இவர்களோடு செல்வி. வைலற் இம்மானுவேல், செல்வி. லூயிஸ், திருமதி. இராஜரட்ணம், திருமதி பரராஜசிங்கம் போன்றவர்களும் எமது பாடசாலைச் செயற்பாடுகளை நிறைவாக மேற்கொள்வதற்கு உதவினார்கள். அத்துடன் என்னுடைய பதவிக் காலத்தில் என்னோடு இணைந்து செயலாற்றிய எனது சபைச் சகோதரிகளும் பல வகைகளில் உதவினார்கள். அது மட்டுமன்றி எமக்கு கிடைத்த ஆசிரியர் வளம் பலமானதாக இருந்தது. அவர்களில் பெரும்பான்மையானோர் தனித்துவமான ஆற்றல்களைக் கொண்டவர்களாக இருந்தனர். அவர்கள் இங்கு வருகின்ற போது வேறுபட்ட மன உணர்வுடன் வந்தாலும் இங்கு வந்த பின் இயங்குகின்ற செயற்களத்திற்குள் இணைந்து கொண்டு சிறப்பாகப் பணியாற்றிச் சென்றார்கள். அவர்களை என்றும் மறக்க முடியாது. எனது முகாமைக் குழுவும் ஆசிரியர்களும் எனது முற்போக்கான செயற்பாடுகளுக்கு எப்போதும் கரம்கொடுத்து உதவினார்கள். குறிப்பாக பாடசாலையில் இயங்கும் பல்வேறு கழகங்கள், பொறுப்புக்கள் போன்றவற்றை வருடம்தோறும் மாற்றி பணியை பரவலாக்கிய போது அனைவரும் ஒத்துழைத்தார்கள். அவர்கள் நிர்வாகத்தின் இயல்பை, திறமையை அறிந்துகொள்ள அது காரணமாக இருந்தது. யாரிடம் என்ன திறமை இருக்கின்றது என கண்டுபிடித்து அவர்களை பயன்படுத்திய போது அவர்கள் தாமும் வளர்ந்தார்கள். தமது திறமைகளையும் பாடசாலைக்கு வழங்கினார்கள். இதிலே வியக்கத்தக்க விடயம் என்னவென்றால் திருமதி. ஜெயப்பிரகாசம், திருமதி. பரராஜசிங்கம், செல்வி. வயலெற், செல்வி, லூயிஸ் போன்றவர்கள் எல்லாம் ஓய்வு பெற்று சென்ற பின்னரும் பாடசாலைக்கு வந்து தங்களுடைய பணிகளையும் ஆலோசனைகளையும் வழங்கி வருகிறார்கள். இது மகிழ்வுக்குரிய ஒரு விடயமாகும்.

**★ உங்கள் பணிக்காலத்தில் அயல்பாடசாலைகள், பாடசாலை அதிபர்களுடான உங்கள் உறவு எவ்வாறானதாக இருந்தது ?**

நாம் அனைவரும் ஒரே இலக்கில் பயணம் செய்பவர்கள் அதனால் எமக்கிடையே எப்போதும் நல்உறவு இருந்து வந்துள்ளது. எங்கள் பாடசாலையில் நடைபெறும் எந்த வைபவத்திற்கும் நாம் எமது அயல் பாடசாலைகளை அழைப்பது வழக்கம் அவ்வாறே அவர்களும் அழைப்பார்கள். அங்கு எங்கள் பிரதிநிதித்துவங்கள் இருக்கும். அது தவிர பல நெருக்கிடான சூழ்நிலைகளில் அதிபர்களாகிய நாம் கலந்துரையாடி செயல்புரிந்து வந்துள்ளோம்.

அதிபர்களுக்கான ஒன்றுகூடல்கள் எமக்கிடையே நல்லுறவை தோற்றிவித்து வந்துள்ளது.



**★ உங்கள் காலத்தில் பாடசாலை அபிவிருத்தியில் பெற்றோர் பழைய மாணவர்களின் ஒத்துழைப்புக்கள் பற்றி....?**

அவர்களின் ஒத்துழைப்பு நிறைவாகவே கிடைத்தது. ஒரு சில பெற்றோர்கள் குறிப்பாக அபிவிருத்தி சங்கத்தில் அங்கத்துவம் வகித்தவர்கள், எமக்குப் பல வழிகளிலும் ஒத்துழைப்பையும் ஆலோசனைகளையும் வழங்கினார்கள். எமது பாடசாலை பெண்கள் பாடசாலையாக இருக்கின்ற காரணத்தினால் எமக்கெப்போதும் அவர்களின் உதவி தேவைப்பட்டது. விழாக்கள், நிகழ்ச்சிகள் நடாத்தும் போதெல்லாம் சில பெற்றோர்கள் அளப்பரிய உதவிகளை நல்கினார்கள் அதுமட்டுமன்றி எமக்கு நிதி தேவைபடும் பொழுதுகளில் தாமே முன்வந்து உதவி புரிய தயாராக இருந்தார்கள். அவ்வாறே பழைய மாணவர்களும் எமது பொருளாதார நிறைவிலும் எமக்கான வளக்கொள்வனவுகளிலும் எமது பாரம்பரியத்தை வளர்த்து செல்லுவதிலும் பல வகைகளிலும் உதவிபுரிந்து வருகின்றார்கள். இவர்கள் எமது பாடசாலைக்கு இன்று ஒரு பலம்வாய்ந்த சமுகமாக மாறி உள்ளனர்.

**★ பாடசாலைச் செயற்பாடுகளிற்கு கல்வித்திணைக்களம் சார் ஒத்துழைப்புக்கள் எவ்வாறு இருந்தன?**

பாடசாலை நிர்வாகத்தினை சுமுகமாக மேற்கொள்வதற்கு எல்லா வகையிலும் நிர்வாகத்தினர் எனக்கு ஒத்துழைப்பு வழங்கினார்கள்... ஏறத்தாழ பத்திற்கும் மேற்பட்ட கல்விப் பணிப்பாளர்களின் காலகட்டங்களில் நான் பணியாற்றியுள்ளேன். ஒரு சில வேளைகள் தவிர பெரும்பாலான காலங்களில் எனது தேவைகளிற்கு அணுகியபோதெல்லாம் அவர்கள் வரவேற்று ஒத்துழைப்பு நல்கினார்கள். அதுமட்டுமன்றி நான் கற்ற முகாமைத்துவக் கற்கை நெறிகளின் பயனை, அனுபவங்களை பகிர்ந்துகொள்ளக்கூடிய வகையில் அதிபர்களிற்கான கருத்தரங்குகளில் எனக்கு சந்தர்ப்பம் வழங்கினார்கள்... பல தடவைகளில் எமது பாடசாலையை மற்ற பாடசாலைகளுக்கு முன்மாதிரியாக எடுத்துக்கூறிய சந்தர்ப்பங்களும் உள்ளன.

**★ அடுத்ததாக ஒரு பொதுக்கேள்வி. 20 வருடத்துக்கு மேலான தங்கள் அனுபவத்தைக் கொண்டு 'யாழ்ப்பாணக் கல்வி வளர்ச்சியானது இன்று பின்தங்கிவிட்டது' என்று கூறும் கூற்றின் பொருத்தப்பாடு அதற்கான காரணங்கள் பற்றிக் கருத்து பகிர முடியுமா?**

கல்வியில் யாழ்ப்பாணம் பின்தங்கிச் செல்கிறது என்பது ஓரளவு உண்மைதான். காரணம் ஒரு காலகட்டத்தில் யாழ்ப்பாணக் கல்விப் புலத்தில் புத்திஜீவிகளாக நின்ற பலர் இன்று இங்கு இல்லை. பலரும் வெளிநாடுகளிற்குச் சென்றுவிட்டனர். கல்வியில் சிறந்து விளங்கும் பாரம்பரியத்தைக் கொண்ட குடும்பங்கள் பல அவ்வாறே புலம்பெயர்ந்து சென்று விட்டன. கல்விக்கான யாழ்ப்பாணச் சமூகத்தின் மதிப்பீடுகளும் இன்று பெரிதும் மாறிவிட்டன. போட்டிக்கான கல்வியாகவும் பெற்றோர் தம் கௌரவத்துக்காக பிள்ளைகள் மேல் திணிக்கும் கல்வியாகவும் மாற்றமடைந்து கொண்டு வருகின்றது. அதுமட்டுமன்றி வெளிநாட்டு மோகம் கல்வி பற்றிய மதிப்பீடுகளை கேள்விக்குறியாக்கியுள்ளது. காரணம் கல்வி இல்லாத காசு யாழ்ப்பாணத்தில் இன்று கௌரவத்துக்குரியதாக மாறிவருகிறது.



வெளிநாட்டுப் பொருளாதாரமே இதற்கு காரணம் எனலாம். இவைமட்டுமன்றி போரும் இடப்பெயர்வும் ஏற்படுத்திய அனர்த்தங்கள் பல விளைவுகளுக்கு காரணமாக உள்ளது. உயர் கல்வி கற்போரின் ஆர்வம் குறைவடைந்து செல்கின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக தனியார் கல்வி நிறுவனக் கலாசாரம் மாணவர்களின் பல மணிப்பொழுதுகளை விழுங்குவதுடன் சுயசிந்தனைக் கல்வியை குழிதோண்டிப் புதைக்கின்றது. இவை எல்லாவற்றினதும் விளைவாகத்தான் இப்பின்னடைவை நோக்கவேண்டியுள்ளது.

**★ சிறுவர் உரிமைகள் பற்றி இன்று அதிகம் பிரஸ்தாபிக்கப்படுகின்றது. இந்த சமவாயம் பற்றிய தங்களின் கருத்துக்களைக் கூற முடியுமா?**

சிறுவர் உரிமைகள் பற்றிய சிந்தனைகள் வரவேற்கப்படவேண்டியவை. ஆனால் அவையின் அடிப்படை நோக்கத்தை விளங்கிக் கொள்ளாத வகையில் மாணவர்கள் செயலாற்றும் போது அதன் விளைவு பாதகமாகவே அமையும். சிறுவர்களுக்குரிய உரிமைகளுடன் கடமைகளும் வலியுறுத்தப்படுவது அவசியம். சிறுவர்கள் உரிய காலத்தில் கல்வியைப் பெறவும் சமூகத்தில் தமக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளவும் இவ் உரிமைகள் பெரிதும் உதவுகின்றன. எனவே சரியான முறையில் இதற்கான விளக்கங்கள் வழங்கப்பட்டு இவ் உரிமையின் அனுகூலங்கள் பெறப்படல் வேண்டும். பிள்ளைகள் தங்கள் தவறுகளுக்கு தண்டனை பெறாமல் தப்பிப்பதற்கோ நியாயப்பாடுகளைத் தோற்றுவிப்பதற்கோ இவ் உரிமைச் சமவாயம் உதவியாக அமையக்கூடாது. அப்படி அமையுமாயின் பெரும்பாதகமான விளைவையே சமூகம் எதிர்நோக்கும் என்பது உண்மை.

**★ நிறைவாக, பணியின் நிறைவில் திருக்குடும்ப கல்விச் சமூகத்திற்கு தாங்கள் கூற விரும்புவது யாது?**

இந்த கல்விச் சமூகத்திற்கு வருபவர்கள் இதன் பாரம்பரியம், நோக்கு, இலக்கு என்பவற்றுடன் தம்மை இணைத்துக்கொள்ள வேண்டும். திறந்த மனத்துடன் செயற்பட வேண்டும். கல்வி தொடர்பான தேடல் என்றுமே அவர்களுக்கு இருக்க வேண்டும். இப்பாரம் பரியத்தின் உயரிய ஒழுக்கங்கள், விழுமியங்கள் ஒவ்வொருவரினாலும் பின்பற்றப்பட்டு Familian என்ற குடும்பத்தின் மதிப்பீடுகளை வாழ்ந்து ஏனையோர்க்கும் அதைப்பரப்பி அதில் ஆழமாக வேரூன்ற வேண்டும்.

**நேர்கண்டவர்**
**யோ.யோண்சன் ராஜ்குமார்**
*ஆசிரியர்*
*யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம்*

# வாழ்வின் சுவடுகள் சில...


இளமைத் துறவுக் கோலம்...


துறவற வாழ்வில் துணிந்தடி வைக்கையில்...


ஐரிஸ் நண்பர்களுடன்...


சோதர நட்புடன் துறவியர் குழாமில்..


பிரான்ஸிலே அழகின் இலயிப்பிலே...


இங்கிலாந்திலே சுதேசிய உடையுடன்..


மூத்த துறவியர் குழாமுடன் அயர்லாந்திலே


முன்னாள் திருகுடும்ப கன்னியர் மட அதிபர்களுடன் ...


நீப்பாவிலே சான்றிதழ் பெறுகையில்..


எந்தையொடும் தாயோடும் சிந்தை மகிழுகையில்...

# நீண்ட திருக்குடும்ப பாரம்பரியத்தின் சுவடுகளில் நடந்த தடையங்கள்



1970இல் ஆசிரியராக நுளைகையில்...



ஆயர் தியோகுப்பிள்ளையுடன்...





அயர்லாந்தில் பாரம்பரியத்தின் வேர்களை தேடுகையில்...



உப அதிபராய் பணிபுரிகையில்...



பண்பாட்டு விழாவில்...



2004இல் அதிபராக நிறைவில்...

# உங்களைப் பற்றி உள்ளதுங்களைச் சொல்ல...



பாலர் பருவத்தில் நான்
பாடசாலைக்கு வரவில்லை
நான் இந்த உலகிற்கு வருமுன்னே
உம் கோயிலுக்குள் வந்துவிட்டேன்
அதனால் என் மூளையில் பதிக்கப்பட்ட
உந்தன் குரலுக்கு
என்னையறியாமலேயே அடிமையாகிவிட்டேன்

என் வாழ்வில்
நீர் ஏற்ற பாத்திரங்கள் பல
தாயாய், குருவாய், வாழ்வின் ஆலோசகியாய்
பல சமயங்களில் நண்பியாய்
சில சமயங்களில் ஹிட்லராய்
இருந்த ஒரேபெண் என்றும் நீர்தான்
ஏனெனில் உமது ஜேர்மனி,
மாணவிகளாகிய நாமல்லவா
உம் தோற்றத்தை
உம் மனதின் நிற ஆடையிலேயே
ரசித்து ரசித்து எனக்குப் பிடித்த நிறமாக
அது மாறியது விந்தையாக எனக்கு தெரியவில்லை

நான் புத்தகத்துள் மயிலிறகை மூடிய வயதில் நீர்
என்னை ரசித்தீர்
சீருடையில் என்னை நான் அலங்கரித்த வயதில் நீர்
என்னை நெறிப்படுத்தினீர்
எனக்குரிய பாதையை நான் தேடிய வயதில் நீர்
எனக்கு ஆலோசனை தந்தீர்
இதனால் இன்று மற்றவர்கள்
என்னை நிமிர்ந்து பார்க்க வைத்து விட்டீர்

என் பள்ளி தசாப்தத்தில்
என் கூந்தல் நுனியில் இருந்து
சப்பாத்து பட்டி வரை சுத்தம் பார்க்கும்
உமது அருகாமையினால் தான்

FAMILY CON LIBRARY SCHOOL

இன்று நான் சுத்தத்தை எதிர்ப்பவர்களை
எதிர்ப்பது தவிர்க்க முடியாது உள்ளது.
உம்மிடமிருந்து நான் பெற்றுக் கொண்டது
நன்மையைத் தவிர வேறில்லை என்றாலும்
உம்மீது எனக்குள் சின்னக் கோபம்
நீர் என் தாய்க்குரிய பொறுப்பை ஏற்ற நாளிலிருந்து
என்னைப் பெற்ற தாய் என்னைப்பற்றிய பொறுப்பற்றவளாக
நடந்து கொள்கிறாள்
தட்டிக் கேட்டாலோ உம்மிடம் பெற்றவற்றை
வைத்துப் பிழைத்துக் கொள் என்கிறாள்
இருந்தும் உங்களை விட அவள் தான் புத்திசாலி என்பேன்
கூலியே தராமல் என்னை உங்களிடம் விட்டு வளர்த்து
தன் பொருளியல்ப்பாடப் புத்தியைக் காண்பித்து விட்டாள்

உம்மால் தூவப்பட்ட அறிவுரைகள் பல
அவற்றில் எம் மனதில் விழுந்து முளைத்தவை பல
நீர்தான் அடிக்கடி கூறுவீர் கடவுள் ஒருபோதும் நேரில் வருவதில்லை
உண்மை தான். அதுதான் அவர் எனக்காக உம்மைப் படைத்திருக்கிறார்
உலகத்தின் முதன்மைத் துறையொன்றின் மாணவி என்பதைவிட
உம்முடைய குழந்தையாக உம் நிழலில் வளர்க்கப்பட்டவள்
என்று கூறுவதில் தான் பெருமையடைகின்றேன்

வாழ்க்கையில் இதுவரை பெற்றது வெற்றிகள் தான் என்றாலும்
உம் ஆசீர்வாதம் இன்றி எதுவும் எனக்கு சித்தித்ததில்லை
எனக்குள் உள்ள சோதனைகளில் வெல்வதற்கு
இறைனை என்றும் நான் பிரார்த்தித்ததில்லை
எனக்குத் தெரியும்
அதுதான் எனக்கும் சேர்த்து நீங்கள் இரண்டு மடங்காக
பிரார்த்தித்து விடுவீர்கள் என்பது

என் பிரியமான தாயே!
இறைவனின் திருச்சபையின்
முடிசூடா லில்லி மலரே
உம்மைப்பற்றிய உன்னதங்களைச் சொல்ல....
என்னிடம் வார்த்தைகள் இல்லை.

செல்வி சுரனுதா இராஜரட்ணம்-
(பழைய மாணவி)
1ம் வருடம்
மருத்துவ பீடம், யாழ் பல்கலைக்கழகம்



# சாதனை நோக்கிய பயணம்

யாழ் மண்ணிற்கு அயர்லாந்துக் கன்னியர் வந்தனர்; தந்தனர்; சென்றனர்; வந்தவர்கள் தந்த கல்வி, ஒழுக்கம், ஆன்மீகம் என்பவற்றை ஏந்தி நின்றனர் எம் சுதேசப் பெண்கள். அந்த வழி மரபில் வந்தவர் எம் அன்னை அருட்சகோதரி. யோலன்ட் மத்தியாஸ் கரவெட்டியில் கருவாகி, உருவாகி ஆரம்பக் கல்வியை கொழும்பில் பெற்று இளவாலையில் அருட்கன்னியாக உருவாக்கம் பெற்று, பேராதனையில் பெரும் கல்வி கற்று புதிய சிந்தனைகளோடும், புத்துணர்ச்சியோடும் ஆசிரியர் நியமனத்தில் யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம் வந்து சேர்ந்தார்.

ஆசிரியர் சேவையில் சாதனைகள் பல படைத்தவர். தான் சார்ந்த சபையின் கட்டளைப்படி பல பணித்தளங்களிற்குச் சென்றார். மன்னார் மண்ணில் தம் பணியை முடித்து யாழ் திருக்குடும்பம் செய்த தவப்பயனால் மீண்டும் ஆசிரியையாக அடிவைத்தார். பின் உபஅதிபராகி அதிபராகப் பதவி உயர்வு பெற்றார். ஒரு துறவியாக வாழ்ந்து ஆசிரியை, உப அதிபர், அதிபர் என்ற பல்வேறு பாத்திரங்களைப் பரிணமித்தார். இவரின் சாதனைகளை பட்டியல்படுத்த முடியாதெனினும் நாம் கண்டவற்றை அனுபவித்தவற்றை வார்த்தைக்குள் வடிவமாக்க விளைந்துள்ளேன். இது முழுமையானதல்ல, எடுத்துக்காட்டுக்கள் மட்டுமே.

அதிபர் பதவியில் அவர் ஆளுமைமிக்க முகாமையாளராய் இருந்தது பாடசாலையை வழிநடத்த நல்ல கருவியாய் அமைந்திருந்தது. கற்றல் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் அவர் சாதித்தவை அநேகம். சிறு துளி இங்கே படையலாகின்றது.

**நிர்வாகம்:-**

பாடசாலை நிர்வாகக் கட்டமைப்பில் சிறந்த முகாமையாளராக இருந்து அவர் சாதித்தவை அளவுகோலுக்குள் அடங்காதவை.

- மாணவர், ஆசிரியர் வரவின்மையைத் தவிர்க்கவும் நேரந்தவறாமையைக் கடைப்பிடிக்கவும், நுணுக்கமான உத்திகளைக் கையாண்டார்.
  - *ஆசிரியர் பதிவு டாப்பினை தன் முன்னே வைத்திருந்து ஆசிரியரையும் மணிக்கூட்டையும் பார்த்து வார்த்தைகள் இல்லா மௌனப் பார்வையால் தன் கண்டிப்பைக் காட்டுவார்.*
  - *ஆசிரியர்கள் லீவை முன்கூட்டியே அறிவித்து மாணவர் வேலைத்திட்டத்தை ஒப்படைக்கச் செய்து மாற்றொழுங்கு மூலம் மாணவர் செயற்பட வைப்பார்.*
  - *நேரந்தவறும் மாணவரை இனங்காண, பிரச்சனைகளைப் புரிந்துகொள்ள இரு ஆசிரியர்களை நியமித்து உடல், உள பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பார்.*
  - *தொடர் வரவின்மையைத் தவிர்க்க மாணவரின் பெற்றோருக்கு கடிதம் அனுப்பி வரவழைத்து பிரச்சனைகளைக் கலந்துரையாடித் தீர்ப்பார்.*
  - *ஒழுங்கான வரவிற்கு மாணவர்க்கு பரிசளிப்பு விழாவிலும், ஆசிரியருக்கு ஒளி விழாவிலும் ஊக்கமாத்திரையாய் பரிசினை வழங்குவார்.*
- ஒவ்வொரு மாணவர் பற்றிய தகவலும் தெரிந்தவராய் இருப்பார். வகுப்பாசிரியர்கள் மாணவர் பற்றிய முழு விபரங்களைப் பதிவு செய்து தன்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதில் கரிசனையாய் இருப்பார்.
- உளப்பாதிப்புற்ற பிள்ளைகள் மட்டில் விசேட கவனம் செலுத்தி சமூக இசைவாக்கம் உள்ள பிள்ளையாய் வாழ வழி வகுப்பார்.
- அதிகாரப் பகிர்வு மூலம் வேலைகளை முன்னெடுத்துச் செல்ல நிர்வாகக் கட்டமைப்பில் முகாமைத்துவக் குழுவை உருவாக்கினார்.
- மாணவர் தலைவர்களைத் தெரிவு செய்யும் போது தலைமைத்துவப் பாசறை மூலம் அவர்களை வளப்படுத்தி நிர்வாகச் செயற்பாடுகளை ஒழுங்கமைத்தார்.
- பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருடன் நல்லுறவை வளர்த்து அவர்கள் வளத்தைப் பெற்றுக் கொண்டார்.
- பழைய மாணவர் சங்கங்களோடு ஆழமான தொடர்பை வைத்திருந்தார்.
  - *லண்டன், கனடா, அவுஸ்திரேலியா, கொழும்பு சங்கங்களோடு தொடர்புகொண்டு பல உதவிகளைப் பெற்றார். பாடசாலையின் 140வது நிறைவு விழாவில் லண்டன் கிளைத் தலைவி வருகை தந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.*

**பௌதீகவளம்:-**

கற்றல் கற்பித்தலில் அத்திவாரமாய் விளங்குவது பௌதீக வளமாகும். இவர் காலத்தில் எழுப்பப்பட்ட கட்டடங்கள்.

- *நூலகம்*
- *கூட்டுறவு விற்பனை நிலையம்*
- *வலைப்பந்தாட்ட திடல்*
- *கணணி அறை*
- *விஞ்ஞான, சித்திரகூட கட்டடப் பகுதி*
- *புதிய தண்ணீர்த்தாங்கி*

இவரின் திட்டமிடலில் நடைபெற்றுக் கொண்டும் முயற்சித்துக் கொண்டும் இருப்பவை.

- *பாடசாலை நுழைவாயில் புதிய கதவும். பெயர் தாங்கியும்.*
- *பாடசாலை இடைநெருக்கலைத் தவிர்ப்பதற்கான புதிய காணி கொள்வனவு.*
- *விளையாட்டுத் திடலுக்கான இடவசதி ஏற்பாடு.*

இத்துடன் திணைக்களத்திடம் இருந்தும் தொண்டர் நிறுவனங்களிலிருந்தும் பழைய மாணவரின் உதவியுடனும் தளபாடங்களைப் பெற்றுக்கொடுத்து மாணவர்களுக்கு சிறப்பான கற்றல் சூழலை வழங்க உழைத்தார்.

பாடசாலைப் பொது நிகழ்வுகளுக்காக நூறு இரும்புக் கதிரைகளையும் தொடர்ந்து பிளாஸ்ரிக் கதிரைகளையும் சேகரித்துக் கொண்டார். இத்துடன் கற்றல் கற்பித்தலுக்குத் தேவையான சாதனங்களைச் சேமிப்பதிலும் வல்லவராய் இருந்தார். யாழ் கொழும்பு போக்குவரத்து கஷ்ரமான சூழலில் கப்பலில் பயணித்து பாடசாலைக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் தனியாளாய்க் கொண்டுவந்து சேர்க்கும் அவரின் துணிவையும் பாடசாலை சிறப்பாக இயங்க வேண்டும் என்ற ஆவலினால் கிடைத்த சந்தர்ப்பங்களை பாடசாலைக்கு பயன்படுத்தி கொண்டமையையும் எந் இடர்பாட்டிலும் இறைநம்பிக்கையுடன் செயற்பட்ட ஆன்மீக பலத்தையும் அளவிட முடியாது. 1995 இடப்பெயர்வின் போது இவரது துணிச்சலான செயற்பாட்டினால் பாடசாலை வளங்கள் காப்பாற்றப்பட்டன.

2002ம் ஆண்டு யாழ் கன்னியர் மடம் உள்வாங்கப்பட்ட போது இடப்பரப்பு கூடியதால் மாணவர்களுக்கான மணி ஒலியைக் கேட்கும் படியாக பெரிய அளவில் அமைத்துக் கொடுத்ததுடன். அதிபர் அறையிலிருந்து வழிபாட்டையும் அறிவித்தல்களையும் கேட்பதற்கு வசதியாக பாடசாலை முழுமைக்கும் சேர்த்து ஒலி வசதியை ஏற்படுத்தினார்.

## ஆன்மீக ஒழுக்க விழுமியங்கள்:-

ஒரு மனிதனை ஆன்மீக ஒழுக்க விழுமியங்கள் ஆளுமையுள்ள முழு மனிதனாக்குபவை. எம் அதிபர் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட ஆசிரியர் மாணவரை நல்ல ஆயனாக நின்று ஆன்மீக ஒழுக்க விழுமியங்களைக் கடைப்பிடிக்க பல்வேறு திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தினார்.

- *வாரத்தில் ஒரு நாள் தியானம் நடாத்தினார்.*
- *ஆசிரியர் மாணவர்களுக்கு உளவியல் கருத்தரங்குகளை ஒழுங்குபடுத்திக் கொடுத்தார்.*
- *மாதத்தில் முதல் வெள்ளியில் உயர்தர மாணவருக்காய் பலிப்பூசை நிறைவேற்ற வழிசமைத்தார்.*
- *அமைதி மணி மூலம் மாணவர்களை ஒழுங்குக் கட்டுப்பாட்டில் வளரச் செய்தார்.*
- *காலை ஒன்று கூடலில் ஆசிரியரைக் கொண்டு நல்லொழுக்க நெறிகளை உரை ஆற்றச் செய்தார்.*

☞ காலையிலும் மாலையிலும் சிறப்பாக வழிபாடு செய்து, நாளைத் தொடங்கவும் முடிக்கவும் செய்து, இறை அனுபவத்தையும் நம்பிக்கையையும் பெறச் செய்தார்.

**கற்றல் கற்பித்தலில் புதிய பாய்ச்சல்:-**

பாடசாலை என்பது கற்றல் கற்பித்தல் நிகழும் இடம். இப்பாடசாலை நோக்கு பாதுகாக்கப்பட்டதோடு புதிய பரிணாமத்திற்கு வித்திட்டவராகவும் விளங்கினார்.

- கற்றலுக்கான சிறப்பான சூழலை உருவாக்கிக் கொடுத்தார்.
  - ☞ பௌதீக வளம், ஆசிரிய வளம்.
- கற்றல் நடைபெறுவதற்கான மேற்பார்வை.
  - ☞ உள்ளக மேற்பார்வையின் மூலம் ஆசிரியருக்கு ஊக்கமும் வழிகாட்டலும் வழங்கினார்.
- கற்பித்தல் சாதனங்களை கால மாறுபாடுகளுக்கேற்ப உள்வாங்கினார்.
  - ☞ வெண்பலகை (White Board), OHP பயன்பாடு
- புதிய கல்விச் செயற்பாட்டு மாற்றங்களை உடனுக்குடன் ஆசிரியருக்கு வழங்கினார்.
  - ☞ துறைசார் வள ஆளணியினரைக் கொண்டு ஆசிரியருக்கு பயிற்சி வழங்குவார்.
- ஆசிரியப் பற்றாக்குறை நிலவாமல் மாற்றுத் திட்டம் மூலம் வளங்களைச் சேர்த்தார்.
  - ☞ ஆரம்பப் பாடசாலையில் குறிப்பிட்ட காலப்பகுதியில் பல ஆசிரியர்கள் ஓய்வுபெற அவ்விடவெளியை நிரப்ப பழைய மாணவிகளைத் தெரிந்தெடுத்து பயிற்சி வழங்கி வகுப்பறைக்கு அனுப்பினார்.
- கண்காட்சிகளை நடாத்தல்.
  - ☞ இதன் மூலம் ஆசிரிய மாணவர் ஆக்கத்திறனை வளர்த்ததோடு, கற்றலில் புதிய அனுபவங்களையும் பெறச்செய்தார். 2000ம் ஆண்டு நடைபெற்ற கண்காட்சி பலரது பாராட்டைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.
- மாணவர் ஆக்கத்திறனை வெளிப்படுத்த வணிகத்தளிர் வெளியீடு, கையெழுத்து ஏடு மன்றங்கள் ஊடாக போட்டிகள் நடாத்துதல் என்பவற்றில் அதிக கவனம் செலுத்தினார்.
- பாடசாலை இடைவிலகலைத் தவிர்த்தல்.
  - ☞ மாணவர் பாடசாலை இடைவிலகாமல் கவனித்தார்.
  - ☞ உயர்தர வகுப்பிற்கு வேறு பாடசாலைக்கு செல்வதைத் தவிர்த்து கற்றலுக்கான எல்லா வசதிகளையும் செய்து கொடுத்ததனால் எம் மாணவர் மருத்துவ, பொறியியல் துறைகளுக்குச் செல்லும் வாய்ப்பினை ஏற்படுத்தினார்.

- கற்றல் கற்பித்தல் அடைவுகளின் ஆவணம் பரிசளிப்பு விழாவாகும். இதனை சிறப்பான முறையில் தொடங்கி ஆண்டுதோறும் கோலாகலமாக நடைபெறும் தனித்துவமான நிகழ்வாக நடாத்தி வந்தார்.
- 1990 காலப்பகுதியில் யாழ் நகர் இருளில் மூழ்கியிருந்த போது மின்பிறப்பாக்கியை கொள்வனவு செய்து இரவில் ஆசிரிய மாணவரைப் பயன்பெறச் செய்தார்.
- அதிபர் தாம் பெற்ற முகாமைத்துவப் பயிற்சியை ஆசிரியர்களுக்கு வழங்கினார்.
  - *வேலைப் பகிர்வுக்கு வேண்டிய ஆளணியினரைத் தெரிந்து முகாமைத் துவப் பயிற்சி அளித்தார்.*
- ஆசிரியர் வாண்மை விருத்திக்குத் தேவையான சகல அறிவுரைகளையும் உதவிகளையும் வழங்கினார்.
- நூலகத்திற்கு அவ்வப்போது புதிய நூல்களைக் கொள்வனவு செய்வதோடு நூலகப் பாவனை அதிகரிக்க சிறந்த நூலக நுகர்வோர் பரிசினைப் பரிசளிப்பு விழாவில் வழங்கினார். நூலக வாரம் மூலம் வாசிப்புத் தூண்டலுக்கான திட்டங்களை வகுத்து செயற்படுத்தினார்.
- கணனிக் கல்வியில் மாணவர் பயிற்சி பெற்று சான்றிதழ்கள் பெற வழி அமைத்தார்.
- மாணவர் கல்வி அடைவினை மதிப்பீடு செய்யும் பரீட்சைகளை ஒழுங்கமைக்க பரீட்சைக்குழு அமைத்து சிறப்பாகச் செயற்பட வைத்தார்.
  - *பொது அறிவுப் போட்டிகளை நடாத்தினார்.*
  - *வினா வங்கி முறையை நடைமுறைப்படுத்தினார்.*
  - *தவணை முடிவில் ஆசிரியர்களுக்கு பரீட்சைப் புள்ளி மதிப்பீட்டுப் படிவங்களை வழங்கி அதனை பரிசீலனை செய்வார்.*
  - *மாதாந்த தவணை கணிப்பீட்டு அறிக்கைகளை உடனுக்குடன் வழங்குவதில் கண்டிப்புக் காட்டினார்.*
  - *பெற்றோரை வரவழைத்து மாணவர் முன்னேற்ற அறிக்கை பார்வையிடச் செய்தார்.*
- வகுப்பு ரீதியாக பெற்றோரைச் சந்தித்து மாணவர் பற்றிய பிரச்சனைகளை கலந்துரையாடினார்.
- ஆங்கிலக் கல்வி விருத்திக்கு அதிக கவனம் செலுத்தினார்.
  - *ஆங்கில மொழி மூலம் கற்பித்தல் வகுப்பைத் தொடங்கினார்.*
  - *சிறு குழந்தைகளுக்கு தானே ஓய்வு கிடைக்கும் வேளையெல்லாம் ஆங்கிலக்கல்வி வழங்கினார்.*
  - *காலை ஒன்று கூடல் வழிபாட்டை ஆங்கிலத்திற்கு மாற்றினார்.*

## புதிய கலாசார அடியெடுப்பு:-

விழாக்கள் மனிதப் பண்பாட்டினை வெளிக்கொணர்வதோடு அவன் உள்ளத்தையும் பண்படுத்துகின்றது. மாணவர் திறமைகள் வெளிப்படவும் தலைமைத்துவம் வளரவும் சமூக ஒருங்கிசைவாக்கும் தேவைகளுக்கும் நிறைவு

செய்வனவாக விழாக்கள் அமைகின்றன. இவற்றுக்காய் மன்றங்கள் அமைத்து செயற்பட வைத்தார்.

| | | |
|---|---|---|
| *தமிழ் மன்றம்* | - | *தமிழ்த்தின விழா* |
| *ஆங்கில மன்றம்* | - | *ஆங்கிலதின விழா* |
| *வணிக மன்றம்* | - | *வணிகவிழா (நூல் வெளியீடு)* |
| *விஞ்ஞான கணித மன்றம்* | - | *விஞ்ஞான தினம்* |
| *கிறிஸ்தவ மன்றம்* | - | *ஒளிவிழா* |
| *இந்துமன்றம்* | - | *வாணிவிழா* |
| *உயர்தரமாணவர் மன்றம்* | - | *உயர்தர மாணவர் ஒன்றுகூடல்* |
| *சாரணியம்* | - | *பேடன் பவுல்தினம்* |
| *நுண்கலை மன்றம்* | | |
| *இணைந்து செயலாற்றும் கழகம்* | | |

விழா நிகழ்வுகள் முடிந்ததும் விழா பற்றிய விமர்சன ஆய்வு ஒன்றை நடாத்துவார். பாடசாலைமட்டப் போட்டிகளோடு நின்றுவிடாது பல்கலைக்கழகம், நிறுவனங்கள், கல்வியற் கல்லூரி போன்றன நடாத்தும் போட்டிகளில் பங்குபற்ற ஊக்கம் கொடுத்தார்.

## விளையாட்டுத் துறை:-

கற்றலோடு மட்டும் மாணவரின் ஆளுமை வளர்க்கப்படுவதில்லை. இணைப்பாடவிதானமும் மாணவர் தம்மை உருவாக்கிக் கொள்கின்றனர். இன்று விளையாட்டுத்துறை பல்வேறு மட்டத்தில் மாணவரை உயர்நிலைக்கு கொண்டு செல்லும் துறையாக விளங்குவதால் அதில் அதிக கவனம் செலுத்தினார்.

- புதிய விளையாட்டுக்களை அறிமுகப்படுத்தினார்.
  - *சதுரங்கம்*
- பாடசாலை முன்றலில் நடந்த விளையாட்டுப் போட்டியை பெரிய அளவில் சகோதர பாடசாலை மைதானத்தில் நடாத்த அடிகோலி ஆண்டுதோறும் கோலாகலமாக நடாத்தி வந்தார்.
- சிறந்த பயிற்சியாளரைக் கொண்டு கூடைப்பந்தாட்ட பயிற்சிகளை காலை, மாலை வேளைகளில் வழங்கினார்.

## சமூக ஒருங்கிணைப்பு:-

ஒரு சிறந்த பாடசாலையானது சமூகம் சார்ந்த உள்ளீடுகளைப் பெற்று சமூகத்திற்கு வெளியீடுகளை வழங்குவதாகும். இந்த வகையில் அதிபர் தம்மைச் சூழ உள்ள சமூகத்தின்பால் அதிக அக்கறையோடு உறவுகளை வளர்த்துக் கொண்டார்.

- பெற்றோரைத் தனிப்படச் சந்தித்து உரையாடுவார்.
- பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஊடாக பெற்றோரின் ஒத்துழைப்பைப் பெறுவார்.
- ஆன்மீக சமூக பெரியோரின் உதவியுடன் மாணவர் வளத்தைப் பெற்றுக் கொள்வார்.
- பாடசாலை விழாக்களில் அயல் பாடசாலைகளை கலந்துகொள்ள அழைப்பதோடு மாணவரையும் அவர்கள் விழாக்களில் கலந்து சிறப்பிக்க வைப்பார்.

- ஆசிரிய மாணவர் பெற்றோர் முக்கூட்டுறவை வலுப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பார்.
- கல்வி சாரா ஊழியர் முதல் மாணவர் வரை அவர்கள் நலனில் அக்கறை கொள்வார்.
- சேமிப்புப் பழக்கத்தை மாணவரிடையே ஏற்படுத்த பாடசாலையில் வங்கிகள் இயங்க ஒத்துழைத்தார்.

## தொலை நோக்கான தியாகம்:-

சிறந்த முகாமையாளன் தொலைநோக்கில் ஞானம் உள்ளவனாய் இருத்தல் அவசியம். பாடசாலை சார்ந்த எந்த விடயத்தையும் பின்நோக்கிப் பார்த்த இவரின் துணிச்சலான முன்னெடுப்பிற்கு எடுத்துக்காட்டு கன்னியர் மடம் பாடசாலையை தம்மோடு இணைத்துக் கொண்டது. இதனை பெற்றோர் மட்டத்தில் பெற்றுக்கொண்ட இடர்கள், மாணவர்களை வழிப்படுத்துவதில் காணப்பட்ட சிக்கல்கள் ஆசிரியர் வளத்தைப் பகிர்வதில் ஏற்பட்ட இடர்கள் என இன்னோரன்ன பிரச்சனைகளுக்கு முகங்கொடுத்து நின்று தன்னை அர்ப்பணித்தவராய் விளங்கினார்.

## உயர்ந்த மனித நேயம்:-

வறியவர்க்கு உதவுவதில் முன்நிற்பார். பாடசாலை ஒவ்வொரு உறுப்பினரையும் குடும்ப நலன்களில் அக்கறை கொள்வதோடு அவர்கள் இன்ப துன்பங்களில் பங்குபற்றி வேண்டிய உதவிகளைச் செய்வார்.

- தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பாடசாலையை ஆசிரியர் மாணவரை எந்நேரமும் இறைவன் பாதத்தில் ஒப்படைத்து செபிப்பார். இதனாலன்றோ எமது பாடசாலை போரினால் அதிக சேதமின்றியும் உயிர் பாதிப்பின்றியும் எம் திருக்குடும்பத்தில் உள்ளோர் தப்பினர் என்றும் நாம் நன்றியோடு நினைப்பதுண்டு.

## அழகுணர்வு:-

அழகின் சிரிப்பில் இறைவனைக் காணும் இனிய அனுபவங்களைத் தானும் பெற்று பிறர் பெறுவதிலும் அக்கறை கொள்பவராய் திகழ்ந்தார். எதிலும் அழகுணர்வு காணும் அதிசயப் பிறவியாய் விளங்கினார். அவரால் பாடசாலைச் சூழலும் நடைபெறும் விழாக்களும் கண்ணுக்கும் மனதிற்கும் மகிழ்வளிக்கும் காட்சிகளைப் பெற்றது.

- பாடசாலை நிகழ்வுகளில் அரங்கு தொடங்கி நிகழ்ச்சி நிரல் பட்டியல் வரை கலை நுணுக்கத்தோடு அமைப்பதுடன் ஒருமுறை செய்யப்பட்ட அலங்காரம் மறுமுறை இருக்காமலும் பார்த்துக் கொள்வார்.
- பாடசாலை முன்றலில் பூந்தோட்டத்தை தன் கண்காணிப்பில் வைத்து காலத்திற்கு காலம் மாற்றி அமைப்பார்.

- அழகுக்காக அமைத்த பூந்தோட்டத்தில் தாவரவியல் பெயர்களைத் தாங்க வைத்து பார்வையால் மாணவர் பதித்துக்கொள்ள வைத்தார்.
- மாணவர் கழுத்துப்பட்டியை அழகாக முடிச்சிடவும் சீருடையை ஒழுங்காக அணியவும் ஒவ்வொரு பிள்ளையாய்ப் பார்த்து திருத்தி விடுவார்.
- ஆசிரியர் ஆடையணிகளை அவதானித்து அழகுணர்வோடு பாராட்டுவதோடு குறைகளையும் சுட்டிக்காட்டி திருத்துவார்.
- மேடையேற்றப்படும் ஆடை ஒழுங்கமைப்பில் அதிக கவனம் செலுத்துவார்.

திருக்குடும்பம் என்னும் அழகான கல்வி ஆலயத்தில் அறிவுச் சுடருடன் ஆன்மீக அமைதி மகிழ்வான வாழ்வு, பகிர்தலின் நிறைவு, மானிட விழுமியங்கள் என்னும் அத்தனை சுடர்களையும் அணைய விடாது இன்னும் அதிகமாக பிரகாசிக்கச் செய்து எம் அதிபர் காலத்தின் கட்டாயத்தால் அரச பதவியில் மட்டும் ஓய்வு பெறுகின்றார். ஞானத்தினால் ஞாலம் வென்ற எம் அதிபரின் கனவுகள் எம் உள்ளங்களில் நிறைந்திருக்கின்றன. நிழலாய் எம்மோடு அவர் தொடர்கின்றார். அவரின் சாதனைப் பயணம் தந்த பணிகளில் தோல்வி ஏற்படாது ஒவ்வொரு திருக்குடும்ப உறுப்பினரும் அயராது உழைத்திடல் வேண்டும். ஒவ்வொரு செயலிலும் அவர் நினைவு எம்மை வழிநடத்தும். அவர் ஆசீரும் வாழ்த்தும் எமக்கு ஆற்றலைத் தரும் என்ற நம்பிக்கையில் வாழ்வோம். இத்திருக்குடும்ப விளக்கை அணையாது பாதுகாக்கும் எனும் வாக்குறுதி அவர் உள்ளத்தை சாந்தப்படுத்தும். நிறைவாய் வாழ்ந்த எம் அதிபர் தம் பணிகளை வேறு ஒரு தளத்திற்கு மாற்றி இன்னும் அதிகமாய் சேவையாற்றி எம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கும் நல்வரத்தை இறைவன் தரவேண்டி நிற்கின்றோம்.

*என் பார்வைக்குள் பதிந்தவை*
*பக்குவப்படுத்தப்பட்ட ஆவணங்கள்*
*பாதுகாப்பது எம் கடன்*
*பதியப்படாதவை ஏராளம்*
*பதியம் வைக்கப்பட்ட குழந்தைகள்*
*குவலயத்தில் சாட்சிகளாய்*
*விற்பன்னர்களாய் வீறு நடையில்*
*சாதனை நோக்கிய பயணத்தில் - வாழ்வர்.*

**செல்வி. மே. பூ. பெனடிக்ற்**
*ஆசிரியை*
*யாழ்/ திருக்குடும்ப கன்னியர் மடம்.*

# அடைக்கலம் தந்த அன்னை

**19**98ம் ஆண்டு வாழ்வில் ஒளி பிறந்த காலம். அது தான் யாழ். திருக்குடும்ப கன்னியர் மடத்தில் காலடி எடுத்து வைத்த ஆண்டு. அந்தக் காலப்பகுதியில் தான் அங்கே எனக்கு வேலை கிடைத்தது (பாடசாலை ஊழியராக). அந்த இடத்தில் தெரிந்த உறவுகளும் இல்லை. வேறு ஒருவரையும் தெரியாது. இது முதல் அனுபவம். வேலைகளும் பழக்கமில்லை. செய்வதறியாது திகைத்து நின்ற நேரம் என் நிலை அறிந்து கடவுள் அனுப்பிய தூதன் போல் இப்பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும் அருட்சகோதரி யோலன்ட் மத்தியாஸ் அவர்கள் என் நிலைமையைக் கேட்டறிந்து தங்குவதற்கு இடவசதியும் உணவும் அளித்து என்னை இன்று வரை பாதுகாத்ததை என்னால் மறக்க முடியாது.

எனக்கு வேலை கிடைத்த காலத்தில் இருந்து ஒவ்வொரு வேலையையும் நுணுக்கமாகவும் திருத்தமாகவும் செய்ய வைத்து அவ் வேலையில் எந்தத்தவறும் இருக்காதவாறு பழக்கி எடுத்து, எந்தப் பாடசாலையிலும் கடமை புரியக்கூடிய பக்குவத்தை எனக்குள் ஏற்படுத்தியவர் என் அன்னை அருட்சகோதரி யோலன்ட் மத்தியாஸ் அவர்கள்.

என் வாழ்வில் மறக்க முடியாத நிகழ்வான என் தாயின் பிரிவின் போதும், அதன் பின்னர் நடந்த எல்லாக் காரியங்களிலும் மனம் சோரவிடாது ஆறுதல் அளித்து எனக்கு பக்கபலமாய் நின்று என்னை வழிநடத்தியவர் என் அன்னை அருட்சகோதரி. பல வேளைகளில் எனக்கு உதவிகள் புரிந்து, சுக துக்கங்களில் முழுமையாகப் பங்கேற்றவர். இறைவன் எனக்களித்த நற்கொடைகளில் ஒன்று என் அன்னை அதிபராய் கிடைத்தது. அவர் எனக்கு அதிபராய் மட்டுமல்லாது தாயாய், குருவாய், தெய்வமாய் விளங்குகின்றார்.

அவர் அரும்பாடுபட்டு வளர்த்த செடிகளுள் ஆயிரமாயிரம் செடிகளுள் நானும் ஒன்று. நான் சொற்ப காலப்பயிர். ஆயினும் பெற்ற பயனோ பல்லாயிரம். கல்வி புகட்டி, அறிவுரை கூறி வளர்த்த எத்தனையோ பேர் வெளிநாடுகளில் இருந்து இன்றும் தொடர்புகள் கொண்டு அவர் மூலமாக பாடசாலைக்கு பல உதவிகள் புரிவதை என் கண் ஊடாகக் கண்டிருக்கின்றேன்.

என் அன்னை மூலம் உயர் நிலை அடைந்தவர்கள், உதவிகள் பல பெற்றவர்கள், ஆசிரியர், மாணவர்கள், ஊழியர்களில் ஒருவராக நானும் நன்றி கூறக்கடமைப்பட்டிருக்கின்றேன். என் அன்னையிடம் ஒரு பழக்கம் உண்டு, அதுதான் நாம் விடும் தவறுகளை நேரே சுட்டிக்காட்டி அத்தவறை திருத்துவதற்கு வழி அமைத்துக் கொடுப்பது. உள்ளொன்று வைத்து புறமொன்று பேசும் தன்மையில்லாத அவரது கள்ளமில்லா உள்ளமே என்னைக் கவர்ந்தது. நான் மட்டுமல்ல அவரை அறிந்தவர் எவரும் எளிதில் மறந்துவிட முடியாது. அவரவர் மனங்களில் நிலைத்து நிற்கின்றார்.

அவர் அதிபர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றாலும் அவரது இறைபணிகள் தொடரவும், உடல் உள, ஆன்மீக நலங்களுடன் நீண்ட காலம் சேவைகள் புரியவும் எல்லாம் வல்ல இறைவனிடம் கையேந்தி நிற்கின்றேன்.

> "எந்நன்றி கொன்றார்க்கும்
> உய்வுண்டாம் - உய்வில்லை
> செய்நன்றி கொன்ற மகர்க்கு"

**செல்வி. பூமாதேவி கணபதி.**
(பாடசாலை ஊழியர்)

# இதய வீணையின் மௌன ராகங்கள்

எம் உணர்வுகளின் விம்பங்கள் – அவை
ஊமைக் காகிதத்தில்
எதிரொலிக்கும் மௌன இராகங்களாய்
பேனா முனையில் புத்துயிர் பெற்று
ஓர் கவிக்குழந்தையைப் பிரசவிக்க – இதோ
கவலை ததும்பும் இந்த
கண்ணீர் காவியத்தை – உங்கள்
இதயத்தில் மொழி பெயர்க்கின்றேன்.

எத்தனை வருட கால
சேவைப் பாதையில்
கால் தடம் பதித்த – உங்கள்
அத்தனை தியாகங்களையும்
வார்த்தைகளால் வர்ணித்து
எப்படி உருவம் கொடுப்பது.

இறைவன் எனும் புனிதன்
எழுதிய வாழ்க்கைக் கவிதையில்
இல்லறத்தைத் துறந்து
துறவறத்தில் நுழைந்து
தூய வெண்ணாடையை
துகிலாய் அணிந்து
திருக்குடும்ப சபையின்
கன்னிகை ஆனீர்கள்.

அறிவு என்பது உங்களுக்கு அருளப்பட்டது.
ஆங்கிலம் என்பது உங்களுக்கு ஆருயிர்.
இங்கிதம் என்பது உங்களுக்கு இலக்கணம் போன்றது.
ஈரம் (மனதில்) என்பது உங்களுக்குக் கண்ணீராய் வெளிவரும்.
உண்மை என்பது உங்களுக்கு உச்சக்கட்டம்.
நீங்கள் கேள்வி கேட்கும் போது மாணவிகள்
எமக்குள் உறவுப் பாலமானது
பிரிவுக் கற்களால்
கட்டப்பட ஆரம்பித்து விட்டது.

இதயமே தீப்பற்றி எரிகிறது.
அன்பிற்கு உருவம் இல்லை
என்பதால் தான்
இதயத்திற்கு இத்தனை வலிகள்.
இதயங்கள் சோகச் சுமையில் கனக்க
சுவாசம் வழியே பிரிவுத் துயர் கூறிச் செல்ல
இதோ எம் உணர்வுகள்
பூமியை நோக்கிப் புதைந்து கொண்டிருக்கின்றன.
வார்த்தையின் வடிவம் இல்லாத
இதயத்தின் உணர்ச்சித் துளிகளாய்
பாசத்தையும் தந்து – இன்று

# இதய வீணையின் ராகங்கள்

பிரிவின் வலியையும் நீங்கள்
தந்து செல்லும் போது – உங்கள்
நினைவுகளை மட்டும் பொறுக்கி
வழி அனுப்பவா சொல்கிறீர்கள்?

புண்ணாக வலிக்கிறது நெஞ்சம்...!
நீங்கள் இல்லாப் பொழுதுகள்
இனி எமக்குக் கானல் நீர் தான்...
நீங்கள் சுவாசிக்கும் காற்றின் திசை வழியே
எங்கள் உயிரின் ஆழத்தையும்
உணர்ந்து கொள்ள ஆசித்து...

எம் உடலோடு உயிர் சங்கமிக்கும் வரை – உங்கள்
நினைவுகள் எனும் சுகமான சுமைகளை
எம் மனப்பாறைகளில் செதுக்கிக்கொண்டு
கல்விக்கு விதையாக இருந்து
நெஞ்சுக்குள் விருட்சமாக வேர்விட்டு
ஊமையாய் நிற்பது என்பது உங்களுக்கு ஒவ்வாமை
எண்ணப் பறவைகளுக்கு உங்கள் மனம் ஒரு சுதந்திர வானம்.
ஏற்றத்திற்கு நீங்கள் ஓர் ஏணிப்படி
ஐக்கியம் என்பது உங்களுக்கு பிடித்தமானது.
ஒரு சாலை மாணாக்கர் எம் ஒழுக்கம் என்பது
நீங்கள் என்றும் ஓதுவது.

எங்கள் பள்ளிப்பருவ வாழ்வில்
பதின்மூன்று வருடங்கள்
உங்கள் மேற்பார்வையின் கீழ்
கண்ணும் கருத்துமாய்க் கழிந்த போது
கண்மூடித் தனமாய்
நாம் செய்யும் தவறுகளுக்கான
உங்கள் கண்டிப்புக்களும் தண்டனைகளும்
இன்று காடியாகக் கசந்தாலும்
காலச் சக்கரத்தின் சுழற்சியில்
என்றாவது ஒரு நாள் – எம்
கலாசாலைக் கன்னியர் உங்களை
கட்டாயம் நாங்கள் உணர்ந்திடுவோம்.

அனுபவம் ஓர் கடுமையான ஆசிரியர்
அது சோதனையைத் தந்த பிறகு தான்
பாடத்தைப் போதிக்கின்றது.

இத்தனை வருடமும் – எம்
வாழ்வின் பாதையைச் செதுக்கி
எமக்குள் வண்ண நாட்களைப் பிறப்பித்த
ஓர் உறவின் முகவரியில் இன்று
பேரிடி முழங்குகிறது.

எம்மைப் பண்படுத்தி – இன்று
பண்பாட்டுடன் வாழ வைத்த
உங்கள் நலனுக்காய் இறைவனைப் பிரார்த்தித்து
இனி வரும் காலங்களிலும்
நாளைய உலகம் உங்களை
இருகரம் நீட்டி வரவேற்க
வாழ்த்தி நிற்கின்றோம்.

செல்வி அ. லுமென்டா
*(க.பொ.த. உயர்தரம் – 2004 கலைப்பிரிவு)*

வடமராச்சி கரவெட்டி ஊரிலே பிறப்பெடுத்து கல்விபயில் காலத்திலே துறவறத்தில் விருப்பெடுத்து அருட்சகோதரியாகி பேராதனைப் பல்கலைக் கழகத்தின் கலைமாணி - யாழ்-பல்கலைக் கழகத்தின் முதுகலைமாணி ஆகிய கல்விப்பட்டங்களில் வெற்றிகண்டு ஆசிரியையாய், உபஅதிபராய், அதிபராய் யாழ் திருக்குடும்பக் கன்னியர்மடத்தில் மொத்தம் இருபத்திரண்டு ஆண்டுகள் கல்விப்பணியாற்றி, இன்று பிரியாவிடை காணும் அருட் சகோதரி யோலண்ட் மத்தியாஸ் அவர்களுக்கு நாம் சூடும்

# கவிதை மாலைகள்

1. ஆண்டுகள் பதினாறுஓர் அதிபராய் இருப்பதென்றால்
சான்றுகள் வேறுவேண்டாம் உங்களின் சிறப்பைச்சொல்ல
ஊறுகள் தடைகளெல்லாம் அற்புத மாகத்தீர்த்து
ஆறுகள் ஓடுதல்போல் அழகாகப் பயணித்தீர்கள்.

2. இதற்கெல்லாம் காரணமாய் இருந்தவை உங்களது
மனதெல்லாம் நிறைந்திருந்த மதிப்புறு குணங்களான
ஆத்மீகத் தன்மைநல்ல ஆளுமை கட்டுப்பாடு
மாண்பான வாழ்வுதரும் ஒழுக்கமும் கண்டிப்புந்தான்.

3. ஆன்மீகம் அதனையுங்கள் அகத்திலே பதித்திருங்கள்
தேனூறும் வாழ்வுவரும் தெய்வீகக் கருணைகிட்டும்
பண்புடை வாழ்வுஉங்கள் வாழ்வாகிப் பயனடைவீர்
என்பதைக் கூறினீர்கள் எங்களின் பிள்ளைகட்டு.

4. உங்களின வார்த்தைதனை அற்புத அறிவுரையை
தங்களின் மனதிலேற்றி அவர்களும் கல்விகற்றார்
சுருக்கமாய்ச் சொல்வதென்றால் சத்திய மாகநீங்கள்
நுணுக்கமாய் மாணாக்கரை நல்லாற்றுப் படுத்தினீர்கள்.

5. ஆளுமை உங்களது ஆணிவேர் என்று நாங்கள்
வாயுரை சொல்லியுங்கள் வாண்மையைப் புகழ்ந்துநிற்போம்
சூழுரை கூறிநீங்கள் செய்கின்ற நிகழ்வனைத்தும்
சீர்நிறை நிகழ்வாயாகி வெற்றிமேல் வெற்றிதரும்.

6. கண்டிப்பு உங்களிடம் இருந்திட்ட போதும்அதால்
தண்டித்து மாணாக்கரைக் கலங்கிடச் செய்யாதுங்கள்
கண்இடும் கட்டளையால் அவர்களை வழிப்படுத்தும்
பண்புறும் செயலைநாங்கள் மெச்சாத நாளேயில்லை.

7. "எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் எண்ணியவர்
திண்ணிய ராகப்பெறின்" வள்ளுவர் வாக்கிதற்கு
ஒத்திட்ட மனமுடைய திறனாய்வு கொண்டேநீங்கள்
வித்திட்ட ஒழுக்கமிங்கு வளர்ந்தது விருட்சமாக.

8. பல்கலை அறிவுகொண்டு பக்குவப் பண்புகொண்டு
எவ்வகை நிகழ்வென்றாலும் எடுத்துமே பூர்த்திசெய்யும்
செவ்வினைச் சோதரியே ஒருநூற்று நாற்பதாண்டு
நிறைவினைப் பாடசாலை நிறைவேற்றி நின்றதென்றால்

9. உங்களின் மனத்திடமும் உறுதியும் காரணமாம்
திங்களின் முழுஒளியாய் இங்கெல்லாம் ஒளிபரப்பி
எங்களின் இருள்மனதை ஒளிமய மாக்கினீர்கள்
பொங்கலின் சுவையாயுங்கள் செயலெமக் கானதுண்மை

10. வாழிய நீங்கள்தூய வானம்போல் வாழிவாழி
சீரிய பண்புகொண்டோய் செந்தமிழ்ப் போல வாழி
சூரியன் போலநல்ல மாமலை இமயம்போல
வாழிநன் றாகவாழ் வானருள் பெற்றால்வாழி

*கவிதை வடிவம்:*
*கலாபூஷணம்*
**நாவலியூர் நா. செல்லத்துரை**

***வாழ்த்துவோர்:***
**பாடசாலைச் சமூகம்**
*2004-09-04*

# கலை பயில் சோலை

யாழ் இசை முழங்கும் யாழ் நகர் தனிலே
யாமறிந்த திருக்குடும்ப கன்னியர் சாலையே
யாவும் கற்றிடும் கலை பயில் சோலையில்
அதிபர் என்னும் கன்னியாம் தலைவியே.

அரும்பணி புரிந்து வழிகாட்ட விழைந்தகுருவே
அன்பெனும் முடி புனைந்த முதுமாமணியே
அறிவினில் சிறந்த ஆரணங்கே, அம்மாவே
அவனியில் தகுந்த நல் ஆசானும் நீரே.

கல்விச் செல்வமது கரையில்லை என்றெண்ணி
கடிந்து கனிவுடன் கண்ணோட்டம் வைத்தாய்
கருத்து மிக்க காவலியாய் காத்து வந்த பொற்காலம்
கடந்ததே பதறாமல் சென்றதே.

தம்பணி சிறக்க தளராமல் உழைத்தே
தனையர் தலைநிமிர்ந்து வாழ வழி வகுத்தே
தரணியில் புகழ்பெற்ற பாடசாலை எனவே
தகுதியாய் சேவை செய்த தர்மத்தின் தாயே

பெயர் கேட்டால் பயந்தே நடுங்குவர்
பெற்ற தாய் பிள்ளையைத் திருத்துதல் முறையே
பெருமை தேடிடும் பல செயல் புரிந்தீர்.
பெண்ணினுள் சிறந்த பெண்மணி இவரே.

மாணவர் மாண்புடன் மலர்ந்திட விரும்பி
மாண்புற சேவையில் கருத்து மிக்க காதலியாய்
மின்னும் உடல் பொருள் ஆவி அனைத்தையும்
மீதில்லாதிப் பணிக்களித்து கலங்கரை விளக்கானீர்.

உங்கள் குரலொலி உரக்கும் வேளைதனில்
உறங்கிய உள்ளமது உற்சாகம் அடைந்திடுமே
உறவான ஆசிரியர் தனை சோர்ந்திடா வண்ணமாய்
ஊக்கமளித்து உறங்காமல் விழிக்க வைத்தீர்.

தணலென எரிந்து தேன் எனச் சுவைதரும்
தன் நலம் அற்ற தியாகியாய் உருவெடுத்து
தண்டனை அளித்து திருத்திடும் தாயாய்
தண்மதி எனவே திடமுடன் ஒளி தந்தீர்.


வீரம்மிக்க அன்னையாய் திகழ்ந்தீரே எம் முன்
விந்தை பொழியும் இவ் உலகில் பிரிவென்று ஒன்றை
விலகாமல் வைத்தானே இறைவன் அவன்
விரும்பியும் தாங்கிடுமோ நெஞ்சத்தின் நிறைவினிலே.

சிறப்புடன் சேவையைக் கழித்திட்ட அம்மையே
இதுவரை சான்றோராய் மாற்றிய துண்மையே
சிந்தையில் தூய்மை சீற்றமாய் வெளியுருவம்
சிந்தும் சிறகினில் அணைத்திடும் கன்னிகையே.

பணிதனில் ஓய்வு பெற்றிடும் வேளை
பாரினில் உம்மைப் போல் வருவாரோ
பாவியாம் எம் எதிர் இன்னொரு பிறவு
படைத்திட வேண்டி பரமனைத் தொழுவோம்.

நிழலாக மனக் கண்ணில் நிறைந்திடும் நிலவே
நதியாக உம் செயல் வழிந்திடும் வரலாற்றில்
நயம் பட மொழிந்து வாழ்த்துக்கள் பல கூறி
நலமுடன் வாழ்கவென நன்றி நவில்கின்றேன்.

**திருமதி யசோதா பிரேம்குமார்**
ஆசிரியர்
ஆரம்பப் பிரிவு
யா / திருக்குடும்ப கன்னியர் மடம்.



# நன்றிகள்

எமது

அன்புக்குரிய அதிபரின்

அகவை அறுபதின் நிறைவில்
நன்றியுடன் நாம் படைத்த
மாண் மலரிதற்கு
மனமுவந்து
வாழ்த்துக்கள் தந்தவர்க்கும்
அரிய பொருளில்
ஆக்கங்கள் தந்தவர்க்கும்
பெருமனத்தோடு
பொருளுதவி தந்தவர்க்கும்
அழகோடு
அச்சுருவில் தந்தவர்க்கும்
நெஞ்சத்தால் நினைத்து
நன்றியினை நவில்கின்றோம்.

- மலர்க்குழு



வெள்ளை துகிலுடுத்தி
வெண் சிரிப்பை முகமணிந்து
ஞானச் செருக்குடனே
நிமிர்ந்த நன் நடைபயின்று

கல்விக்கோர் கருவறையை
கண்ணியமாய் காத்தெழுப்பி
அறிவுடைக் குழந்தைகளை
ஆயிரமாய் பெற்றெடுத்த
அன்னையே வாழி நீ

Design & Printed by : LPH- Colombo 0714880839, 0777838859